
ஆண்டு மலர்
கல்கி
KALKI 2.8.98
ரூ. 4.50
படிக்கும்போதே
வேலை!
+2 முடித்ததும் வேலை!
இலவச இணைப்பைக்
கேட்டு வாங்குங்கள்!



Lintas Sfx Pr 16 2416



'குமாரி' அனந்தன்

"என் பெயரையும், அவர் பெயரையும் இங்கிலீஷில் ஒரே மாதிரிதான் எழுதணும்'' என்கிறார் குமரி அனந்தனின் மனைவி. அவர் பெயர் குமாரி. முழுப் பெயர் கிருஷ்ணகுமாரி.

அப்பா காங்கிரஸ்காரர். ஆனால் அரசியலில் நேரடியாய் ஈடுபட்டதில்லை. சென்னையில் 'ஸ்ரீமகள் கம்பெனி' என்ற அச்சகத்தை நடத்தி வந்தவர். (பழைய சினிமா பாட்டு புத்தகங்கள் ஞாபகத்துக்கு வருதா?) ஐந்து குழந்தைகள் கொண்ட குடும்பம். அப்பா சென்னையில்; குடும்பம், சொந்த ஊரான நெல்லை மாவட்டம் வடக்கன் குளத்தில் என்று வசித்து வந்தார்கள்.

"என் பன்னிரண்டாவது வயதில், எங்கள் அம்மா இறந்து போனார். ஊரில் எங்களைப் பார்த்துக் கொள்ள ஆள் இல்லை என்று, எங்களைச் சென்னைக்கே அழைத்து வந்து விட்டார் அப்பா. நுங்கம்பாக்கத்தில், லேக் ஏரியாவில், சொந்தமாய் வீடுகட்டி கிரகப் பிரவேசம் செய்தார் அப்பா. முதலமைச்சராக இருந்த காமராஜருக்கு, அழைப்பிதழ் கொடுத்து அழைத்தபோது, "நேரமில்லை; பார்க்கலாம்'' என்று சொல்லிவிட்டார். ஆனால் கிரகப்பிரவேசத்தன்று, திடீரென்று வந்து விட்டார்! அவர் இருந்து சாப்பிட்டு விட்டுப் போனதில் எல்லோருக்கும் சந்தோஷம். நுங்கம்பாக்கத்தில்தான் பள்ளிப் படிப்பு முடித்தேன்," என்கிறார் ரஞ்சிதம் என்கிற கிருஷ்ணகுமாரி.

ரஞ்சிதம், கிருஷ்ணகுமாரியானதும் சுவையான கதை. இவர்கள் குடும்பம் கிறிஸ்தவக் குடும்பம். வடக்கன் குளத்தில் பழமையான சர்ச்சில்தான் வழக்கமாய் வழிபாடு நடைபெறும். ஆனால், அங்கே சர்ச்சுக்குள், வழிபடுகிற போது கூட, ஜாதி வாரியாய்ப் பிரிந்து நிற்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். இதனை எதிர்த்து, இந்து மதத்துக்கு வந்த குடும்பங்களில், இவர்களுடையதும் ஒன்று. ரஞ்சிதம் என்ற இவரது பெயர் கிருஷ்ணகுமாரி ஆனது அப்போதுதான்!

கிருஷ்ண குமாரிக்குப் பதினெட்டு வயதானபோது, திருமணம். பொது நண்பர்

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalki@md2.vsnl.net.in

புதிய பகுதி



அடுத்த இதழுடன்
அவசர யுகத்திலும்
அழகாய் இருக்கலாம்!
ஓர் உபயோகமான
இலவச இணைப்பு.
Soap

மூலம் அகத்தீஸ்வரம் (குமரி மாவட்டம்) என்ற ஊரைச் சேர்ந்த குமரி அனந்தன்தான் மாப்பிள்ளை.

"அப்போது அவர், சாத்தூரில் 'தங்கம் தனிப் பயிற்சிக் கல்லூரி' என்ற பெயரில் ஒரு டுடோரியல் காலேஜ் நடத்தி வந்தார். அது தவிர, நிறைய இலக்கியக் கூட்டங்களில் பேசுவார். அது வாழ்க்கையின் அமைதியான காலகட்டம்" என்று கூறும் கிருஷ்ண குமாரியிடம், "ஏன் அவர் அரசியலுக்கு வந்ததில் உங்களுக்கு விருப்பமில்லையா?" என்றால், "அது அவராக எடுத்த முடிவு. அவர் ஒரு முடிவு எடுத்தால், அது சரியாகத்தான் இருக்கும்" என்கிறார்.

அனந்தன் தம்பதிக்கு ஐந்து குழந்தைகள். மூத்தவர் டாக்டர் தமிழிசை. இவருக்கு, அரசியலில் ஆர்வம் உண்டு. அப்பாவுடன் பொது நிகழ்ச்சிகளுக்கு இவர் போவதுண்டு. அடுத்தப் பெண் பொன் அமுதா – எம்.காம் படித்தவர். திருமணமாகி விட்டது. அடுத்தது தாமரை. அட்வகேட். நாலாவது கிதன். பிரிண்டிங் டெக்னாலஜி முடித்துவிட்டு சொந்தமாய் அச்சகம் நடத்துகிறார். கடைசிப் பெண் ஞான சௌந்தரி எம்.பி.பி.எஸ். மாணவி.

"குமரி அனந்தனின் அரசியல் ஏற்ற, இறக்கங்கள் உங்களை பாதித்தது உண்டா?"

"இல்லீங்க. அரசியல் சம்பந்தப்பட்ட விஷயங்களில் நான் தலையிடுவது கிடையாது. மொத்தக் குடும்ப பொறுப்பும் எனக்குத்தான். அரசியலில் தோல்வி வரும் சமயத்தில், 'என்ன இப்படி ஆகிவிட்டதே? என்று ஆதங்கப்பட்டாலும், அரசியலில் ஏற்ற, இறக்கங்கள் சகஜம். இந்திராகாந்தி பார்க்காத ஏற்றமா? இறக்கமா?' என்று சொல்லுவார்."

"அரசியல் பணிகளுக்கிடையே குடும்பத்தினருடன் செலவழிக்க அவருக்கு நேரம் இருக்கிறதா?"

"ரொம்பக் குறைச்சல்தான். பிள்ளைகள் ரொம்ப ஆசைப்பட்டால், இரவு நேரங்களில் பீச்சுக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டு, அப்படியே, இரவு ஏதாவது ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு, வீடு திரும்புவதுண்டு. என் சகோதரியின் திருமணம், திடீரென்று முடிவானது. இவர் ரஷ்யாவில் இருந்தார். திருமணத்துக்கு, என் உடன் பிறந்தவர்கள், உறவினர்கள் எல்லாரும் தம்பதிகளாய், குழந்தைகளுடன் வந்திருந்தனர். நான், இவர் இல்லாமல் சென்றபோது, வருத்தமாய் இருந்தது. 'ஏன் அவர் வரலையா?' என்று ஒவ்வொருவரும் கேட்டபோது, பதில் சொல்லி மாளவில்லை."

"குடும்பத்துடன் சினிமாவுக்குப் போவதுண்டா?"

"கல்யாணமான இத்தனை வருஷத்தில் மொத்தத்தில் இருபது, இருபத்தைந்து படங்கள் பார்த்திருப்போம்."

"உணவு விஷயத்தில் அவர் எப்படி?"

"நான் நன்றாகச் சமைப்பேன். சைவமானாலும் சரி, அசைவமானாலும் சரி. ஆனால், அவர் கடந்த ஐந்தாறு வருடங்களாய் அசைவம் தொடுவதில்லை. மற்றபடி நான் சமைத்தால் அவியல், பருப்புக் குழம்பு, கீரை வகைகளை அவர் விரும்பி சாப்பிடுவார்."

"அவர் எழுதிய புத்தகங்களில், உங்களுக்கு மிகவும் பிடித்தது?"

"வாரியாரைப் பற்றிய புத்தகம் ரொம்பப் பிடிக்கும்!"

பேட்டி : **மானஸா**
படம் : **ஸ்ரீஹரி**



பூந்தோட்டம்

முல்லை:

இரண்டாம் தாரமான அம்மாவுக்கு, அப்பா எழுதி வைத்து விட்டுப் போன வீடு! அம்மாவுடைய அந்த வீட்டின் மீது அளவில்லாத பாசம் கதாநாயகிக்கு. ஆனால் அவளை வீட்டிலிருந்து வெளியேற்றத் துடிக்கிறார்கள் அவளது இரு அண்ணன்கள்! (மூத்த தாரத்தின் மூலம் பிறந்தவர்கள்). போதாக்குறைக்கு அந்த வீட்டின் மீது அரசியல் சக்தி ஒன்றின் பார்வை விழுந்து விட, அது தாதாவின் மூலம் கதாநாயகியை வெளியேற்றி வீட்டைத் தனதாக்கிக் கொள்ளத் துடிக்கிறது. (அமிர்தமான நிவாரணி நிறுவனர் நினைவுக்கு வருகிறாரா? ஆனால் 'இலைகளின்' நிழல் படாமல் வேறொரு பாதையில் தான் படம் செல்கிறது). வித்தியாசமான கதைக்கு, சுவாரஸ்யமான ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்கிறார் இயக்குனர் களஞ்சியம்.

ரோஜா:

ஒளிப்பதிவின் அழகைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். கண்களை உறுத்தாததுடன், ஒரு வித்தியாசமான 'ஃப்ரெஷ்னஸ்'ஸும் தெரிகிறது.

மல்லிகை:

முரளியின் பாத்திரம், வெகு இயல்பு. சிக்கெனப் பொருந்துகிறார். அடாவடித்தனமாக மேற்படி வீட்டின் மேற்பகுதியில் வாடகைக்கு வந்து கலாட்டாக்கள் செய்வதிலிருந்து, மனத்திற்குள்ளேயே காதலைப் பூட்டி வைத்துக் கொண்டு மறுகுவது வரை, உணர்ந்து செய்திருக்கிறார்.

செவ்வந்தி:

'இசைத் தாலாட்டு' என்ற அடைமொழியுடன் இளையராஜா. பாடல்கள் எடுபடுகின்றன என்றாலும் சில காட்சிகளில் 'முன்னணி' இசையில் வசனங்கள் தெளிவாகக் கேட்காமல் போய் விடுவது நெருடுகிறது.

வாடாமல்லி:

முக்கிய ரோல் பாதிக்கும் அளவுக்கு தேவயானி மோசமாக நடிக்கவில்லைதான். ஆனால் கொஞ்சம் கற்பனை வளம், இயக்குனர்களின் உதவி இவற்றின் பக்கம் பார்வையைத் திருப்பி, உணர்ச்சிகளை நன்கு முகத்தில் வெளிப்படுத்தும் வித்தையை அவர் கற்றுக் கொள்வது நல்லது!

ஜாதி மல்லி:

கடுகு ரோல்கள்தான் என்றாலும் காரம் சிறுக்காமல் நிறைவு தருகிறார்கள் நாசரும் நம்பியாரும்.

காட்டுமல்லி:

கதாநாயகியின் தங்கை பாத்திரம் எதற்கு? அவர் முரளியைத் தொடர்ந்து தங்கள் வீட்டு மாடியிலேயே தங்கச் சொல்வதற்கான காரணம் வெகு அபத்தம்.

காகிதப் பூ:

குத்தல் நடிப்பிலேயே பஞ்ச் கொடுக்கக் கூடிய ரகுவரன் இந்தப் படத்தில் ஏனோ எடுபடக் காணோம்.

எருக்கம் பூ:

பெருகும் உடம்பு, குறையும் உச்சரிப்புத் தெளிவு – மணிவண்ணன் வெறுப்பேற்றுகிறார். "நாயே" என்ற திட்டும், பளார் பளார் என்ற அடியும் தான் காமெடி என்று இலக்கணம் வகுத்துத் தொலைத்தவர்களைத் திட்ட புதிதாக ஒரு வசவு கண்டுபிடித்தால் என்ன...!

ஆங்காங்கே அனாவசியங்கள் தலை நீட்டினாலும் அழகான கதம்பம்.

— ஜி.



1



2



3

காலேஜ் கார்னர்

புதிய பகுதி

"என்ன ஆனாலும் பாகிஸ்தான்

16



15



14

அசட்டு ஜோக் அடிக்கவும் சைட், ஜொள்ளு, கடலை என்று பேசவும் மட்டும்தானா கல்லூரி மாணவர்களுக்குத் தெரியும்? சீரியஸாக ஒரு சப்ஜெக்டைக் கொடுத்து வாயைக் கிளற முடிவு செய்தோம்.

முதல் நடவடிக்கையாக கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி மாணவிகளிடம் 'இந்தியப் பிரதமராக நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் முதலில்?' என்று கேட்டோம். வெளுத்து வாங்கி விட்டார்கள் பெண்கள்.

1. கே. பிரியலதா, (முதலாமாண்டு பி.எஸ்ஸி பிசிக்ஸ்) :

இந்த ஜெயலலிதா எனக்கு நல்ல படிப்பினை. ஒரு எம்.பியாக என் தொகுதிக்கு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்வேன். கண்டிப்பா கூட்டணி அமைச்சுக்கற தவறை மட்டும் செய்யவே மாட்டேன்.

2. பி. சுதா, (முதலாமாண்டு பி.எஸ்ஸி பிசிக்ஸ்) :

13

12









4



5



6



7

லைஃப் என்ட்ராகறதே கல்லூரியில்தான். அங்கே போதைப் பழக்கங்கறது படு கொடுமைங்க. அதை விற்கற வங்களைப் பிடிச்சு உள்ளே போடணும் முதல்ல!

3. ஜி. சுபாஷிணி (பி.எஸ்ஸி கணக்கு) :

தீபாவளிக்கு தீபாவளி பட்டாசு வெடிக்கறதோட நிறுத்திக்

“...நம்ம கண்ட்ரி சார்!”

கொள்வேன். அணுகுண்டு வெடிக்கவெல்லாம் போக மாட்டேன். அமெரிக்காவைப் பகைச்சுக்கிட்டு என்ன சார் செய்யறது...?

4. ச. கோமதி (எம். எஸ்ஸி கெமிஸ்ட்ரி) :

இந்த 5 எம்.பி. 10 எம்.பி வச்சுக்கிட்டு லோக்கல் அரசியல்வாதிக மிரட்டுற பாச்சா என்கிட்ட பலிக்காது. உடனடியா தேர்தல் சட்டத்துல திருத்தம் கொண்டு வர முற்படுவேன்.

5. அ.பெ. சுமதி (எம். எஸ்.சி., எப்.ஆர்.எம்.) :

நிலக்கரி, டீசல், பெட்ரோல் எல்லாம் ஒரு காலத்துல அழியத்தான் போகிறது. இது அறிவியல் யுகம். காற்றுல, சூரிய சக்தியில இயங்குகிற மாதிரி பொருட்கள் கண்டு பிடிக்கும் அறிவியலாளர்களை ஊக்குவிப்பேன்.

6. கே. நித்யா (பயோ டெக்னாலஜி) :

அன்புங்கற ஆயுதம் எவ்வளவு உன்னதமானது. அதை ஜனங்களுக்குப் புரிய வைப்பேன். அணு ஆயுதத்திற்கு முதல் எதிரி நான்.

7. ப. பாரதி (எம்.பில். தமிழ்) :

ஆரம்பக் கல்வியிலிருந்தே



8

11



10



9



தொழிற்கல்வியைக் கட்டாயப் பாடமாக்குவேன். அப்புறமும் வேலை உருவாக்கிக்காம சோம்பேறியா இருந்தா அவங்களுக்குத் தண்டனை என்கிற மாதிரி சட்டம் கொண்டு வருவேன்.

8. ப. ஜெகதாம்பாள் (எம்.எஸ்ஸி, மனித இயல்) :

ராமரையும் பாபரையும் வச்சு கண்டிப்பா அரசியல் பண்ண மாட்டேன். அப்படிப்பட்ட அரசியலுக்கு ஒரு தடைச் சட்டம். முறையா சட்டமியற்ற முடியலைன்னா ஹிட்லர் ஆகவும் தயங்க மாட்டேன். பதவி நாற்காலிகளைக் காப்பாத்திக்க இப்ப என்னவெல்லாமோ பண்றாங்க. நாட்டைத் திருத்த ஹிட்லரானா என்ன தப்பு..?

9. டீ. ஷாபிகா (பி.எஸ்ஸி) :

பருவ மழைக்குப் பதிலா இங்கே குண்டு மழை. பொருளாதார சாதனைக்கு பதிலா அணுகுண்டு சோதனை! நமக்கு முக்கியம் இதுவா சார்? முதல் வேலையா ஐ.நா. அணு ஆயுதத் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவேன்.

10. க. பத்மப்பிரியா (எம்.எஸ்ஸி) :

இங்கே எல்லா மனிதனும் மதவெறி புடிச்சு அலையறனும் சார். அதற்கான சட்டத்தை உருவாக்குவேன். இங்கே மதவெறின்னா அன்பு வெறி... எந்த மதமாவது அன்பைத் தவிர்த்து வேறொன்றை போதிச்சிருக்கா?

11. பி. கவிதா (எம்.எஸ்ஸி) :

இன்கம்டாக்ஸ் ரெய்டுல கிடைக்கிற கோடிகள் எங்கே போகுதுன்னே தெரியல. அதை மட்டுமாவது எடுத்து இங்கே அனாதைக் குழந்தைக வயிறார உண்ணச் செய்ய வேண்டும். அதுதான் என் உடனடி நடவடிக்கை.

12. ஜி. விசாலாட்சி (பி.எஸ்ஸி பிசிக்ஸ்) :



17



18



19

நான் உள்பட, அரசியல்வாதிகள் வெளிநாடுகள் போவதை நிறுத்துவேன். எல்லாம் ஐ.எஸ்.டீ., பாக்ஸ், இன்டர்நெட் வழிதான். தான் ஜெயித்த தொகுதிக்குப் போகாதவன் வெளிநாடு சுத்திப்பார்க்கப் போறது இங்கே ஒரு பார்மாலிட்டி ஆகிப் போச்சு... அதற்கு ஒரு தடை போட்டு எல்லோரையும் தொகுதிப் பக்கம் விரட்டுவேன்.

13. வி. மீனா (பி.எஸ்ஸி, எகனாமிக்ஸ்) :

வாஜ்பாய்க்கு ஆறுதல் கூறுவேன். காரணம் நான் பதவிக்கு வந்ததும் அவர் பதவியிழந்துடுவாரே..!

14. வே. செல்வி (பி.எஸ்ஸி, சி.என்.டீ.) :

இப்ப பிரதமரா இருக்கிற நான் அடுத்த வாரம் இதே நாற்காலியில இருப்பேனான்னு சந்தேகம். அதனால உலகின் ஏழு அதிசயங்களில் எட்டாவது அதிசயமா நம் இந்திய அரசியலையும் உடனே இணைத்து விடுவேன்.

15. எஸ். சத்யநாராயணி (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி) :

சார்! இந்தியாவையே ஒரு புனித ஸ்தலமா, கோயில்களா, தெய்வங்களா மாற்றிக் காட்டுவேன்!

16. எம். வனிதா (பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி) :

வாஜ்பாய் சார் மாதிரி டெய்லி ரெண்டு 'சூட்' மாத்த மாட்டேன். அதுக்காக மூப்பனார் மாதிரி ரப்பர் செருப்பும் போட மாட்டேன். லஞ்சம் வாங்க மாட்டேன். அதுக்காக சம்பளம் வாங்காம 1 ரூபாய் சம்பளம் வாங்கறதா பீத்திக்கறதும்... நேவர்..!

17. எஸ்.எஸ். கவிதா (எம்.எஸ்ஸி) :

நினைப்பே அபத்தம். எனக்கு ஊழல் பண்ணத் தெரியாது. மதக் கலவரத்தைத் தூண்டத் தெரியாது. அடுத்தவன் முதுகில் குத்தத் தெரியாது... தகுதியில்லாம எப்படி சார் பிரதமரா நான் நீடிக்க முடியும்... முதல்ல ராஜினாமா தான்.

18. பி. அருணா (பி.எஸ்ஸி. ஜூவாலஜி) :

ச்சூ... இந்த அரசியலே சரியில்ல... முதல்ல 356 ஐப் பயன்படுத்தி எல்லா மாநில சட்டசபையையும் கலைச்சுடுவேன். மத்ததை அப்புறம் பார்க்கலாம்...

19. எம். மேரி புஷ்பம் (பி.எஸ்ஸி கணக்கு) :

நியூசிலாந்து கூடவெல்லாம் பல தடவை ஜெயித்த இந்தியா, இந்த

20





30



29

ஸ்ரீலங்கா கூட மோதும்போது மட்டும் கம்மி யான ஓவர்ல தோத்துப் போகுது. இந்த கிரிக் கெட் அணியில சிலரை முதல்ல மாத்துவேன் சார்... அப்பத்தான் இந்தியப் பிரதமர் நான் நிம்மதியா தூங்க முடியும்.

20. இரா. ஜெயகிறிஸ்டி (பி.எட்.) :

இப்படி ஒரு ஷாக் கொஸ்டின் கேட்டதும் ஹார்ட் அட்டாக் வந்துடும் போலயிருக்கு. சரி விடுங்க. கேட்டுட்டீங்க. ம்... முதல் வேலையா அந்த அரசியல் தலைவலி சுப்ரமணியசாமி தலையீடு வராம பார்த்துக்குவேன்... போதுமா?

21. எல். உமாராணி (பி.எட்.) :

'தண்ணிய' கொடுத்தே வோட்டு வேட்டை நடக்குது இங்கே... அதனால யாருமே சரிவர சிந்திக்க முடியறதில்லே... உடனடியா போடு வேன் அதுக்கு ஒரு தடை...

22. பி. பிரேமா கௌரி (எப்.சி.எஸ். மேத்ஸ்) :

ஜீன்ஸ் படத்துக்கெல்லாம் எதுக்கு இவ்வளவு வெளிநாடு சுற்றல்... கோடிக்கணக்கில் செலவு? தமிழ்ப்படமே தயாரிக்க வேண்டாம். ஸ்டுடியோக்களைப் பிடுங்கி, குழந்தைக படிக்கிற மாதிரி பள்ளிக்கூடங்க கட்டுவேன்.

23. ஆர். அழகாம்பிகை (பி.எஸ்ஸி) :

பள்ளி கல்லூரிகளில் செலக்ஷன் தகுதி அடிப்படையில்; ஸ்காலர்ஷிப் வருமான அடிப் படையில் என்பதை சிவியராக நடைமுறைப் படுத்துவேன்.

24. ஜே. லக்ஷ்மி தேவி (பி.ஏ. தமிழ் இசை) :

அரசின் வெட்டி ஆடம்பரங்களை ஒழித்து, நரசிம்மராவ் போல அமைதியாக (அதுக்காக சிரிக்க மாட்டேன்னு நினைச்சுடாதீங்க) கலை ஞர் போல் திட்டமிட்டு, வாஜ்பாய் போல்

21



22



23



24



25



'பிய்ச்சுக்கிட்டு', திரிவேன். தனிப் பெரும்பான் மையில்லேன்னா வேற என்ன சார் செய்வேன்...?

25. கா. சங்கீதா (எம்.எஸ்ஸி) :

பாகிஸ்தான் என்ன ஆனாலும் நம்ம கண்ட்ரி சார். ஊர் ரெண்டுபட்டதும் கூத் தாடிக்குக் கொண்டாட்டமா போச்சு... எவன வனோ வந்து அட்வைஸ் பண்றான். அது மட்டும் நடக்காது எங்கிட்டே.... பிரிஞ்ச குடும் பத்தை (நாடுகளை) சேர்த்து வைப்பதே என் முதல் பணி.

26. எம். தீபா (கம்ப்யூட்டர் சயின்ஸ்) :



28

விவேகானந்தர் வந்தார்.. எதற்கு வந்தார்? கலைஞர் சரியில்லை, ஜெ சரியில்லைன்னு... பினாத்திக்கிட்டு இருக்கவா? ஊழல் அரசியல்வாதிகளை ஒழிக்க இளைஞர்களை வச்சு புரட்சி கொண்டு வருவேன். ஏன்னா இளைஞர்கள் சுத்த மானவர்கள்.



27

27. ஆர். செல்வராணி (பி.எஸ்ஸி பிசிக்ஸ்) :

டி.சியில ஜாதியத் தூக்கு வேன். அதென்ன அதை முகர்ந்து முகர்ந்து பார்த்து வேலை கொடுக்கிறது? இடம் கொடுக்கிறது? சலுகை கொடுக் கிறது? சுத்த வேஸ்ட்...!



26

28. ஆர். நிர்மலா (பி.ஏ.) :

செல்லாக்காக ஆகிட்டு வர்ற நம்ம காசை செல்லுப காசா ஆக்க ஏதாவது ஒரு தடுப்பு நடவடிக்கை... அதைத் தான் யோசிச்சுக்கிட்டே இருக் கேன்.

29. கே. மஞ்சு (பி.எட்.) :

என் குடும்பத்துல யாரும் எலக்ஷன்ல நிற்கக் கூடாது. தடுத்துடுவேன். என்னா எனக்குப் பின்னால வர்றவங்க என் பேரைக் கெடுத்துடக் கூடாதல்லவா?

30. கே. தாமரைச் செல்வி (பி.எட்.) :

பிரதமர்ங்கிறது இப்ப இப்படி உட்கார்ந்து பேசற அளவுக்கு உங்களுக்கு கேலிக்கூத்தாய்ப் போச்சு இல்ல சார்? நம்ம நாட்டு பிரசி டெண்ட்டை யாராவது கமெண்ட் பண்றாங் களா...? இல்லே பண்ண முடியுமான்னு கேட்கி றேன்? என்கிட்டே மட்டும் இது நடக்காது! ●

சந்திப்பு : **கா.சு. வேலாயுதன்**

சில மாதங்களுக்கு முன்பு திருமணமான கிரிக்கெட் வீரர் ஜெயசூர்யாவுக்குத் தமது தேன்நிலவைக் கொண்டாட இப்போதுதான் சமயம் கிடைத்திருக்கிறது! காதல் மனைவி கமுடுவுடன் (சிங்கள மொழியில் 'மென்மையானவள்' என்று அர்த்தமாம்) சமீபத்தில் பெங்களூர் வந்திருந்தார் ஜெயசூர்யா.

நாம் சந்தித்தபோது, 'ஐயோ, கரடி!' என்று அலறாத குறை. மற்ற நிருபர்களிடம் தகவல் சொல்லிவிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்ட பின் நம்முடன் பேசச் சம்மதித்தார். 'மாட்டவே மாட்டேன்' என்று அடம் பிடித்த கமுடுவையும் பேசவைத்துப் பால், பன்னீர், ஐஸ்க்ரீம் வார்த்தார்.

"யாருக்கும் தெரியக் கூடாதுன்னு ரொம்ப ஜாக்கிரதையா இருந்தேன். எப்படியோ நீங்க கண்டுபிடிச்சி வந்துட்டீங்க. ம்... தொடர்ந்து மேட்ச் இருக்கு சார். இதோ, நாளைக்கு கொழும்பு போயிட்டு, உடனே இங்கிலாந்து டூர் கிளம்பறேன். தொடர்ந்து பத்து மாசம் மேட்ச் இருக்கு! முடிச்சிட்டு, சிலோன் திரும்ப எப்படியும் அடுத்த மே மாசம் ஆயிடும்... கல்யாணம் ஆனதுலேருந்து இவளை எங்கேயுமே அழைச்சுட்டுப் போகலை. இப்பதான் முதல் முதலா இங்க பெங்களூருக்கு அழைச்சிட்டு வந்தேன்..."

கமுடு குறுக்கிட்டார். "கல்யாணத்துக்கு முன்ன மட்டும் என்ன? தனியா எப்பவும் எங்கேயும் போனதில்லை. ரொம்ப அபூர்வமா கார்ல எங்கேயாவது ரவுண்ட் போயிட்டே பேசுவோம். இறங்க மாட்டோம். அப்படியே கொண்டு வந்து டிராப் பண்ணிட்டுப் போயிடுவார். வெளிநாடு டூர் போயிருந்தார்னா, ஃபோன் பண்ணக் கூட மாட்டார். காதல் விஷயம் நண்பர்களுக்குக் கூடத் தெரியாது. வாரம் ஒரு தரம் லெட்டர் போடுவார். அதுக்கு நான் பதில் கூடப் போடக் கூடாது. எங்க வீட்டுல மட்டும் கேட்பாங்க. 'என்ன உனக்கு அடிக்கடி ஃபாரின்லேருந்து லெட்டர் வருது'ன்னு. 'அதெல்லாம் பேனா நண்பர்கள் கடிதம்'னு சொல்லி சமாளிச்சிடுவேன்."

"அது சரி. எப்படி மலர்ந்தது உங்க காதல்?"

"ஆகாயத்துல! ஐ மீன் நான் ஏர்லங்காவில் விமானப் பணிப் பெண்ணாக வேலை பார்த்துட்டு இருந்தேன். ஜெய் ஒரு தரம் ஃப்ளைட்ல ஏதோ வயிறு பிராப்ளம் வந்து வாந்தி எடுத்தார். அப்ப நான் க்ளீன் பண்ண உதவி செஞ்சேன். ரொம்ப ஸாரி கேட்டுக்கிட்டார். அப்ப மட்டுமில்லை! பின்னால பல முறை சந்திச்ச போதும்! என்னைப் பிடிச்சுப் போயி, ஆறு மாசம் துரத்தித்




• கமுடுவுடன் ஜெயசூர்யா

துரத்திக் காதலிச்சார். நான் மசியலையே! ரொம்ப நாள் கழிச்சிதான் ஒத்துக்கிட்டேன் – ஆன் ஒன் கண்டிஷன். 'நான் இப்பத்தான் வேலைல சேர்ந்திருக்கேன். ரெண்டு வருஷமாவது வேலை பார்த்தப்புறம்தான் கல்யாணம். அதுவரைக்கும் வேலையை விட முடியாது'ன்னேன். அவரும் ஒத்துக்கிட்டார். இப்ப கல்யாணமும் ஆயிடுச்சு..."

"வேலையை விட்டுட்டீங்களா?"

"ஓயெஸ். ஜெய்யோட சம்பாத்தியமே போதும்! தவிர வீட்டைப் பார்த்துக்க வேண்



ஹனிமூனில் புகுந்த கரடி!

டிய பொறுப்பு வேற இருக்கே? அவருக்கு அப்பா இல்லை. அம்மா வயசானவங்க. இவரோ வருஷத்துல பாதிநாள் ஊர்ல இருக்க மாட்டார். நான் இருக்கணுமில்லையா?''

அழகாகச் சிரிக்கிறார் கமுடு. சனத் இவரை கமி என்று கூப்பிடுகிறார். கொழும்பு நகரில் மிக எளிமையாக நடந்ததாம் இவர்களது திருமணம். காரணம்?

"ஜெய்யோட அம்மா ரொம்ப சிம்பிளா இருப்பாங்க. இந்த வசதி வாய்ப்பெல்லாம் நடுவுல வந்ததுதானே. அதனால ஆடம்பரக் கல்யாணம் வேணாம்னு சொல்லிட்டாங்க. எங்க வீட்டுலயும் ஒத்துட்டதால கல்யாணம் சிம்பிளாத்தான் நடந்தது'' என்றார் கமுடு.

கமுடு வந்த நேரம் தனக்கு வைஸ் கேப்டன் பதவி கிடைத்தது என்று குதூகலமாகச் சொல்கிறார் சனத்.

''ஆனா, நான் கமியைக் கல்யாணம் பண்ணிட்டப்புறம் ரன் அடிக்கறது குறைஞ்சு போச்சு. போலர்ஸ் சீக்கிரம் என்னை அவுட் ஆக்கிடறாங்க. ஏதோ, பௌலிங்கில் கொஞ்சம் நல்லா செய்யறேங்கறதால டீம்ல வெச்சிட்டிருக்காங்கன்னு நினைக்கறேன்'' என்று மனைவியைப் பார்த்தபடியே சொல்லிச் சிரிக்கிறார் ஜெயசூர்யா.

''பெங்களூர்ல உங்க மனைவிக்கு என்ன வாங்கிக் குடுத்தீங்க சனத்?''

''ஐயோ, பெங்களூரைத்தான் இன்னும் வாங்கலை! ஒரு சீரீஸில் நான் சம்பாதிக்கிற பணம் முழுசும் ஒரு நாள் ஷாப்பிங்கில் காலி! ஏதோ இப்ப நீங்க வந்தீங்க. பேசிட்டிருக்கோம். இந்த கொஞ்ச நேர இடைவெளியால மறுபடி கொழும்பு போக ஏர்டிக்கெட் சார்ஜாவது மிஞ்சும்னு நம்பறேன்!''

அட்டகாசமாகச் சிரித்தார் ஜெயசூர்யா. கமுடுவின் முகத்தைப் பார்க்க வேண்டுமே! நாணம் ஐயா, நாணம்! ○

சந்திப்பு : **நந்தினி**

அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறப்புச் சிறுகதைப் போட்டி முடிவுகள்:



• பாரதி பாலன்



• மணியம் செல்வன்



• சிவசங்கரி



• பிரபஞ்சன்

துறவி - அன்றும் இன்றும்...

நாற்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன், முதன் முதலாக அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி நடைபெற்றது. அதில் முதல் பரிசு பெற்ற சிறுகதை துறவி. எழுதியவர் : கஸி. சுப்ரமண்யம் என்ற தமது இயற்பெயரின் முதலெழுத்தையும் தாம் மானசிக குருவாகக் கொண்ட 'கல்கி' யின் பெயரிலிருந்து எடுத்த கடைசி எழுத்தையும் இணைத்து அவர் உருவாக்கிய பெயர் கஸி. எழுத்தாளராகவும் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் தேர்ந்த ரசிகராகவும் விளங்கினார் இந்த கஸி சுப்ரமண்யம்.

இன்று... அமரர் கல்கி நூற்றாண்டு நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசாக ரூ. 10,000 பெறும் சிறுகதை - 'இல்லறத் துறவி'! எழுதியிருப்பவர் நாராயணி கண்ணகி.

யதேச்சையாக அமைந்தது இந்தத் தலைப்புப் பொருத்தம்.

'கஸி'யின் துறவி முதல் நாராயணி கண்ணகியின் 'இல்லறத் துறவி' வரையிலான காலகட்டத்தில் சிறுகதை என்ற கலை வடிவம் கண்டுள்ள மாற்றங்கள் சுவையானவை; வியப்பளிப்பவை. அளவிலும், நடையிலும் சொல்லாட்சியிலும், சிந்தனையிலும் புரட்சிகரமான மாற்றங்கள்!

ஆனால் மாறாத விஷயம் மனித இயல்பு; மனித உணர்வு! சிறந்த சிறுகதைகளுக்கு இவையே அடிநாதம் என்பது மீண்டும் மீண்டும் நிரூபணமாகி வருகிறது. அந்த உணர்வையும் இயல்பையும் மின்னல் போல் வெளிப்படுத்தக்கூடிய சக்தி சிறுகதைக்குத்தான் இருக்கிறது என்பதும் திரும்பத் திரும்ப நமக்குத் தெரிய வருகிறது.

அமரர் கல்கி நூற்றாண்டு என்பதால் போட்டியில் பங்கேற்றவர்கள் எல்லோருமே கூடுதல் சிரத்தையுடன் எழுதி எங்கள் வேலையை மிகக் கடினமாக்கி விட்டார்கள்.

சிவசங்கரி, பிரபஞ்சன், மணியம் செல்வன், பாரதி பாலன் ஆகியோருடன் பதிப்பாளரும் ஆசிரியரும் இணைந்து 12.7.98

அன்று பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுத்தனர்:

முதல் பரிசு : ரூ. 10,000

'இல்லறத் துறவி'

நாராயணி கண்ணகி,
37, வேலு செட்டித் தெரு,
சந்தைக் கோடியூர்,
ஜோலார்பேட்டை - 635 851.

இரண்டாம் பரிசு : ரூ. 7,500

சாதா—ரணம் அல்ல!

அருண் சரண்யா,
12/2, எத்திராஜுலு நாயக்கன் தெரு,
பள்ளிப்பட்டு, சென்னை - 600 113.

மூன்றாவது பரிசு : ரூ. 5,000 + 1,000 இருவருக்குப் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

1. மனிதர்கள்

ரவி பாலாஜி,
'Air France Section,
HTP AF, AD.
Halwara, Ludhiana District,
Punjab - 141 106.

2. ஒரு உறவும் சில நிகழ்வுகளும்

பலராம் செந்தில்நாதன்,
24, P&T காலனி, கவுண்டம் பாளையம்,
கோவை - 641 030.


ஆறுதல் பரிசு : ரூ. 1,500

தொலைந்து போன அண்ணன்

கே.வி. பிரசன்னகிருஷ்ணன்,
8/1, ராமசாமி தெரு, தி. நகர்,
சென்னை - 17.

பிரசுரத்துக்குத் தேர்வாகியுள்ள கதைகளின் பட்டியல் அடுத்த இதழில் இடம் பெறும். பரிசு பெறும் எழுத்தாளர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள். போட்டியில் பங்கேற்ற அத்தனை பேருக்கும் நன்றி!


– ஆசிரியர்



சுஜாதா

இந்த ஒரு வீட்டின் வாசலிலிருந்து சென்று அதன் மாடி அறைக்குள் நுழைந்தால் சுவரில் ஆனந்தின் படம் தெரியும். ஆனந்தையும் பாரதியையும் கல்யாணக் காட்சியில் காணலாம். ஆனந்த் பட்டம் வாங்குவது, பரிசு வாங்குவது, அவன் படிப்புக்கு அத்தாட்சியான டிப்ளமாக்கள், மெடல்கள், ஆனந்தும் பாரதியும் பிக்னிக் என்று பல படங்கள் சம்பிரதாய சந்தோஷத்தைக் காட்டின. ஆனந்த்தான் இந்தக் கதையின் நாயகன். ஆனால் அவன் இந்த அத்தியாய முடிவுக்குள் இறந்து போகப் போகிறதில் ஆனந்தம் இல்லை. எனவே அவனைப் பற்றி விவரமாகச் சொல்வதற்கு நமக்குச் சமயமில்லை. அவ்வப்போது வைத்துக் கொள்ளலாம். இப்போது அலமாரி நிறைய புத்தகங்களை

1



கவனிக்கவும். குறிப்பாக ''Explosives'' ''The Peace Bomb ''Physical Research'' போன்றவற்றை. கோப்புகள், ட்ராஃபிக்கள் நிரம்பியிருந்தாலும் நடுத்தர வர்க்க வீடு என்பது தெளிவாகத் தெரிந்தது. அவற்றையெல்லாம் பார்த்துவிட்டு மொட்டை மாடிக்கு வரும்போது, நீலவானத்தில் பறக்கும் ஒரு விமானம் பெங்களூர் ஏர்போர்ட்டில் இறங்கும்போது துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டது. ஆனந்த் கண்களில் ஆச்சரியத்துடன் தன் மார்பைப் பிடித்துக்கொண்டு விழுந்தான். மூச்சு முட்டியது. கையை, நம்பிக்கையில்லாமல், அதன் ரத்தத்தைப் பார்த்தான். எதிரே பார்த்தான். அவன் கண்களில் வேதனையும் ஆச்சரியமும் தெரிந்தன.

ஆனந்த் டெலிபோனை நோக்கி மிகுந்த சிரமத்துடன் சென்று அதன் பட்டன்களில் 100 ஒத்தினான்.

"போலீஸ் கண்ட்ரோல் ரூம்."

"சோமு! சோமு!" என்றான் ஆனந்த். அதற்கே மிகுந்த சிரமப்பட்டு, சுவாசப்பையில் காற்று நிரப்பிக் கொள்ள வேண்டியிருந்தது.

"ஹலோ ஹலோ! யார் பேசறது? என்ன விஷயம் சொல்லுங்க'' என்றது குரல். (கன்னடத்தில்தான்) ஆனந்த் மீண்டும் "சோமு" என்றான்.

"ஹலோ ஹலோ!?"

கண்ட்ரோல் ரூமில் அந்தக் காலை அட்டெண்ட் பண்ணவர் புதிதாக சேர்ந்த பயிலுனர். அந்த சந்தர்ப்பங்களில் என்ன செய்வது என்பதற்கு அவருக்குப் பயிற்சி அளிக்கப்படவில்லை.

''யாரோ 'சோமு'னு சொல்லிட்டு அப்புறம் பேச்சே இல்லை; மூச்சு மட்டும் கொஞ்ச நேரம் கேட்டுது. இப்ப நின்னு போச்சு."

உடன் இருப்பவர், "லாக் புக்ல டயத்தை நோட் பண்ணிக்க. சோமுன்னு எழுதிக்க. அவ்வளவுதான்" என்றார். மெல்ல மெல்ல ஆனந்த் சரிந்து விழ, அவன் கடைசிக் கணங்களில் அவனுக்கு உதவ யாரும் இன்றி கண்களில் இருள் படியுமுன் அவன் இளம் வாழ்க்கையின் அத்தனை அற்புதக் கணங்களும் ஊர்வலமிட்டன. இங்கே ஒரு அழுகைக் குரல், அங்கே ஒரு ஆனந்தக் குரல். செக்ஸுக்குப் பின் முகத்தில் மேலுதட்டின் வியர்வை முத்து. செம்பருத்திப் பூப்பறிக்கும்போது காகம் வந்து உச்சந்தலையைக் கொத்தியது. ஏதோ ஒரு பசும் புல்வெளியில்

ஆர்யபட்டா



மஞ்சள் வண்ணத்துப் பூச்சியைத் துரத்தியது. 'இத் தனை மென்மையானதா இது' என்கிற ஆச் சரியம், தாயின் சடலத்தின் மேல் தீயின் நாக்குகள், அமெரிக்காவில் சியாட்டில் பயிற் சியில் ஒரு போதை ராத்திரி. பையிலிருந்து சீப்பை எடுத்து வழுக்கைத் தலையை வாரிக் கொள்ளும் டைரக்டர், நாய்க் கண்காட்சி யில் "எட்டாம் நம்பர் அல்சேஷன் மேடைக்கு வரவும்" என்கிற அறிவிப்பு....

குழப்பமான பிம்பங்கள். தொடர்பில் லாமல் அலை அலையாக வந்து மயங்கி, மயங்கி ஆனந்த் இறந்து போனான்.

பெங்களூர் விதான் சௌதாவின் முகப்பில் "ராஜ்யோத்சவ தினம்". கர்நாடக மாநிலத்தின் முக்கிய விஞ்ஞானிகளுக்கு ஆர்யபட்டா விருது வழங்கும் பாராட்டு விழா. சுஸ்வாகதா (நல்வரவு) என்கிற பானர் ஏன் இப்படி தொந்தரவு செய்கிறாய் என்று காற்றை விசாரித்துக் கொண்டிருந்தது. ஹாலில் பலர் கூடியிருந்தார்கள். ஹாலில் நுழையுமுன்னேயே கை தட்டல் சப்தம் கேட்டது. மேடையில் ஒரு மந்திரி மட்டும் முந்திரி போல் தனிப்பட்டுத் தெரிய மற்ற பிரமுகர்கள் சூட் அணிந்து வீற்றிருந்தார்கள். அவர்களுக்குப் பின் தொங்கிய வெல்வெட் திரையில் 'கர்நாடக ராஜ்ய சர்க்கார் விஞ் ஞானிகளுக்குப் பரிசளிப்பு விழா' என்று எழுதியிருந்தது.

போடியம் மைக்கில் ஒவ்வொரு பெயராக அறிவிக்க, கைதட்டலுடன் முன்வரிசையி லிருந்து பல விஞ்ஞானிகள் பரிசு வாங்க ஸ்டேஜுக்கு வந்து கொண்டிருந்தார்கள்.

"டாக்டர் விசுவநாத்
டாக்டர் நஞ்சுண்டையா
டாக்டர் சரஸ்வதி
டாக்டர் நரசிம்மன்
டாக்டர் அல்தாப் அகமத்...."

ஒவ்வொருவரும் விருது வாங்கி ஆடி யன்சை வணங்கிவிட்டுச் செல்ல, அறிவிப் பாளர் "டாக்டர் சோமசுந்தர்!" என்று விளித் தார்.

சோமசுந்தருக்கான நாற்காலி காலியாக இருந்தது. அறிவிப்பாளர் மீண்டும் "டாக்டர் சோமசுந்தர்!" என்று கூப்பிட, சற்று நேரம் மேடையில் மௌனம். மந்திரி இங்குமங்கும் பார்த்தார். அருகில் தம் உதவியாளரை அழைத்து, "வரவில்லையா" என்றார்.

சற்று நேரத்தில் டாக்டர் சோமசுந்தர் அவசர அவசரமாக வந்து சேர்ந்தார். தம் வழுக்கைத் தலையைத் துடைத்துக் கொண்டு வேகமாக ஸ்டேஜுக்கு வந்து கைதட்டல் ஆரவாரத்துக்கு மத்தியில் பரிசு வாங்கும் போது "ஸாரி ஸார் பாத்ரும் போயிருந்தேன்" என்றார்.

மந்திரி "தட்ஸ் ஆல்ரைட்" என்று சிரித்து விட்டு அவர் சென்றதும் உதவியாளரிடம் "சூளே மகா! நேரத்துக்கு வராதவனுக்கு எதுக்கு விருது!" என்றார்.

ஷாமிலி, "நான் இருவுது நினகாகி" என்று ராஜ்குமார் பாடல் ஒன்றைப் பாடிக் கொண்டே வீட்டு வேலை செய்ய வந்தாள். வாசலில் பால் பாக்கெட் வைத்திருந்தது. செய்தித்தாளும் கிடந்தது. "இன்னும் எந்திரிக் கலியா என்ன? ஏழரை ஆச்சே? ஆறு மணிக்கு எந்திரிச்சுருவாரே" என்று காலிங் பெல்லை அழுத்தினாள். "ஸார்! ஆனந்த் ஸார்!"

கதவைத்தட்ட, கதவு தானாகத் திறந்து

> **'ஜீன்ஸ்' படத்திற்குப் பின் ரஹ்மானா? இளைய ராஜாவா? விஜய் காந்த்தா? விஜயா? என்று ஊசலாடிக் கொண்டிருந்த ஷங்கர் இப்போது ஒரு நிலைக்கு வந்திருக் கிறார். தள்ளாடிக் கொண்டிருந்த அர்ஜுன் தனக்கொரு 'லைஃப்' தருமாறு ஷங்கரை வேண்டிக் கொள்ள, வேண்டுதல் வீணாக வில்லை. ஷங்கரின் அடுத்தப் படத்தின் ஹீரோ வாகிவிட்டார் அர்ஜுன். ஹீரோ யின் மனீஷா கொய்ராலா. இசை ஏ.ஆர். ரஹ்மானேதான்!**
>
> **– ரவி**

கொண்டது. "என்னது? வெளிய போயிருக் காரா கதவை திறந்து வச்சுட்டு... அம்மா வரட்டும் சொல்லிப் போடறேன். ஒரு வாரம் அம்மா வூட்டுல இல்லைன்னா எத்தனை அமர்க்களம். இந்த அய்யா எப்பவுமே மறதிதான்..."

"ஸார், ஆனந்த் ஸார்!"

ஷாமிலி மெல்ல உள்ளே நுழைந்தாள். மாடிக்கு ஆனந்தின் லாப் அறைக்குச் சென் றாள். அவள் நடையில் தயக்கம் தென் பட்டது. ஏதோ கெட்ட செய்தியை – காட் சியை எதிர்பார்த்து அவள் முகத்தில் கவலை தெரிந்தது. ஆனந்தின் கால் தெரிந்தது போன் அருகில்.

"குடிக்க மாட்டாரே! ஸார் ஆனந்த் ஸார்?"

ஷாமிலி அப்போதுதான் இறந்த உடலைப் பார்த்தாள்.

வீறிட்டு சுமார் 140 டெசிபெலில் அலறி

னாள்.

ஜமதக்னி பக்கத்து வீட்டுக்காரர். அவருடைய வாழ்க்கை அந்த 30 - 40 சைட்டிலும் ஒரு தென்னை மரத்திலும் பையனுக்கு ஹோம் ஒர்க்கிலும் பெண்டாட்டி பேச்சு கேட்பதிலும் திருப்திகரமாகக் கழிந்து விடும் பயந்த ஆசாமி. ஷாமிலி ஓடிவந்து தன் இளமை தெரிவது தெரியாமல் "ஆனந்த்ப்பா செத்துட்டாருங்க. போன் பக்கத்ல பொணம் கெடக்குதுங்க. கண்ணு தெறந்திருக்கு, வாய் வழியா கொஞ்சம் நுரை" என்று அடுக்கிக் கொண்டே சொல்ல, ஜமதக்னி, "ஏம்மா செத்தாச்சுன்னு சொல்லிட்டல்ல? எதுக்கு மேல் விவரம்? காலைல சாப்ட்ட திண்டியெல்லாம் வெளிய வந்துரும் போல."

ஷாமிலி, "அய்யா நான் எதும் செய்யலைய்யா. கதவை இப்படி தொட்டேன் திறந்துகிச்சு."



ஜமதக்னி, "உன்னை யாரும் எதும் செய்ய மாட்டாங்க" என்று போனை எடுத்து "போலீஸ் கண்ட்ரோல் ரூம்? நானு ஜமதக்னி மாத்தாடுத்தினி... இங்க எங்க வீட்டுக்கு பக்கத்தில ஒரு கொலை நடந்து போச்சு... அட்ரஸா? எழுதிக்கங்க பிளஸ்கே தர்ட் ஸ்டேஜ், ஜர்னலிஸ்ட் காலனி தாண்டினப்புறம்... நம்பரா? டென் பட்டா டொண்டி ஒன்."

போனை வைத்துவிட்டு, முகத்தில் வியர்வையை ஒத்திக் கொண்டார். ஷாமிலி அழுகையை நிறுத்தாமல், "ரொம்ப நல்லவரு. தீபாவளிக்கு புடைவையெல்லாம் கொடுத்தாங்க!"

ஜமதக்னி "அவரா கொடுத்தாரு?"

ஷாமிலி, "பாரதி அம்மா" என்றாள்.

ஜமதக்னி "அம்மா எங்க இப்ப?"

ஜமதக்னியின் மனைவி அருகில் வீற்றிருந்தாள், கவலை முகத்துடன். "மெட்ராஸ் போயிருக்கா. ரொம்ப நல்ல பொண்ணு பாரதி. இந்தச் செய்தியை எப்படி தாங்கிக்கப் போறாளோ?"

ஜமதக்னி... "கொலைன்னு எப்படிச் சொல்றே?"

ஷாமிலி, "இப்பவே பாடி நீலமாயிருக்குங்க. நாக்கு நீட்டிக்கினு..."

"பாரும்மா, பாடி எப்படி இருந்ததுன்னு எனக்கு விவரம் வேண்டாம். ஏற்கெனவே நொந்து போயிருக்கேன்!"

மனைவி, "போலீஸ்காரா நம்மை கேள்வி கேட்பாங்களோ."

ஜமதக்னி, "தெரியலையே, வாரபலன்ல போட்டிருந்தான். 'பக்கத்து வீட்டுக்காரரால் பிரச்னை'ன்னு. இப்படியா?"

மனைவி "இருங்க புடைவை மாத்திக்கிட்டு வந்துடறேன்" என்றாள்.

அவர்கள் சென்றபோது ஆனந்தின் வீட்டு முன் வாசலில் ஒரு சிறு கூட்டம் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. சைரனுடன் ஜீப் வந்தது. ப்ரபாகர் ராவும் அவருடைய அசிஸ்டெண்ட் சங்கரும் சில போலீஸ்காரர்களும் துடிப்பாக இறங்கினார்கள்.

ப்ரபாகர் ராவ் தன் தொப்பியை சரி செய்து, "ஜமதக்னி யாரு?"

"நான்தாங்க போன் பண்ணேன்."

"நீங்கதான் முதல்ல பாடியைப் பார்த்தீங்களா?"

"அய்யோ நான் இன்னும் பார்க்கவே இல்லை. வேலைக்காரி ஷாமிலி".

"நீ எப்பம்மா பாத்தே?" என்று உள்ளே சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே நுழைந்தார். "இப்படி வாம்மா!"

ஷாமிலி, "காலைல கெலசாக்காக வரேன், கதவை தட்டறனா, திறந்திருக்கு..." ப்ரபாகர் ராவ் தன் உதவியாளரிடம்: "நோட் தட் டவுன், தி டோர் வாஸ் ஓபன்" என்றார்.

அவர்கள் ஆனந்த் கிடக்கும் இடத்தை அடைந்தார்கள். ப்ரபாகர், "ஷாமிலி நீ எதும் பொருளைத் தொட்டியா?"

"இல்லைங்க. பிரேதத்தைப் பாத்த உடனே ஓடியாந்து அய்யாகிட்ட....."

ப்ராபகர் ராவ் மேற்கொண்டு கவனிக்காமல் குனிந்து ஆனந்தின் உடலைப் பார்த்தார். போலீஸ் போட்டோகிராபர்கள் சுள் சுள் என்று படம் எடுத்தார்கள்.

"ஃபாரன்ஸிக் லாபுக்கும் ஸிஓடிக்கும் சொல்லிரு. ப்ரிண்ட்ஸ் எடுக்கும்படி. மர்டர் வெப்பன் கிடைக்கறதா பாருங்க. லுக்ஸ் லைக் ஹி இஸ் ஷாட் பாயிண்ட் ப்ளாங்க்."

சங்கர் நோட்ஸ் எழுதிக் கொள்ள ப்ரபாகர் ராவ் திறமையாக டிக்டேஷன் கொடுத்தார். "உடல் தரையில் கிடக்கிறது. ஒரு கால் மடங்கியிருக்கிறது. கண்கள் திறந்திருக்கின்றன. சமீபத்தில் எதும் ஆயுதம் தென்பட

வில்லை. மார்பில் சுடப்பட்டு உடன் இறந்திருக்க வேண்டும்."

பிணத்தைப் புரட்டி, "எக்ஸிட் ஊண்ட் இருக்கிறது. ஃபோனை எடுத்து யாருக்கோ ஃபோன் பண்ண முயற்சி தெரிகிறது... சங்கர் கண்ட்ரோல் ரூம்ல நேத்து ஏதாவது டிஸ்டரஸ் கால் மெஸேஜ் வந்ததா செக் பண்ணிரு."

"ஏம்மா நேற்று சாயங்காலம் எத்தினி மணிக்கு அய்யாவை உயிரோட பாத்தே?"

ஷாமிலி, "அஞ்சரை மணிக்குய்யா!" என்றாள்.



சங்கர், "ராத்திரி செத்திருக்கணும்."

"ஜமதக்னி நீங்க நேத்து வீட்லதானே இருந்தீங்க?"

ஜமதக்னி பயத்துடன், "ஆமாங்க. டீவி பார்த்துக்கிட்டு இருந்தோம்."

"துப்பாக்கி வெடி சப்தம் ஏதாவது கேட்டுதா?"

"இல்லைங்க. அதான் ஆச்சரியம். வீட்டை விட்டு எங்கயும் போகலை!"

ப்ரபாகர் விசாரணையைத் தொடர்ந்தார். "ஆபீஸ்லருந்து எப்ப வந்தீங்க."

"அஞ்சரை மணிக்கு."

"அதுக்கு முன்னாடி செத்திருக்கணும்."

"சாத்யமில்லை. வேலைக்காரி அஞ்சரை வரை இருந்திருக்காளே!"

அப்போது ஏரோப்ளேன் சப்தம் கேட்டது.

"புரிஞ்சுருச்சு. துப்பாக்கி சப்தம் இவர் காதுக்குக் கேட்டிருக்காது. சங்கர் நேத்து ஃப்ளைட் லாண்டிங் டைம் எல்லாம் ஏர் போர்ட்டில விசாரிங்க."

ப்ரபாகர் சுவரில் மாட்டியிருக்கும் ஆனந்த் - பாரதி போட்டோக்களைப் பார்த்தார். "ஏம்மா இவர் மனைவி எங்க!"

"புருசன் பெண்சாதி தனியா இருந்தாங்க. குழந்தை கெடையாது. அம்மா மெட்ராஸ் போயிருக்காங்க. அவங்க அப்பா வூட்டுக்கு."

"பேர் தெரியுமா?"

"பாரதிங்க. ரெண்டு பேரும் ராமர் சீதை மாதிரி அப்படிப்பட்ட ஜோடிங்க."

ப்ரபாகர் அலமாரியில் இருந்த போன் புக்கை, டயரியை கவனமாகப் பார்த்தார்.

"சங்கர், ஜமதக்னி வீட்டில் போய் இந்த மெட்ராஸ் நம்பருக்கு போன் போட்டு பாரதிங்கறவங்களைப் பேசச் சொல்லுங்க. நானே பேசறேன். இதைக் கொஞ்சம் மென்மையா சொல்லணும்."

(தொடரும்)

மணிரத்னத்தின் 'தில்சே' - 'உயிரே'வாகி வரப்போவது தெரிந்த சேதிதான். தெரியாத சேதிகள் சில இங்கே.

ஷாருக்கானுக்குத் தமிழில் குரல் கொடுத்திருப்பவர் அர்விந்த் சாமி. கதாநாயகி மனீஷா கொய்ராலாவிற்கு சுஹாசினி. 'பம்பாய்', 'ரோஜா'வைத் தொடர்ந்து 'உயிரே'வும் தீவிரவாதத்தைப் பற்றிய படம். சில வருடங்களுக்கு முன் இன்றைய அஸ்ஸாம் முதல்வர் பிரபல்லகுமார் மஹந்தா தலைமையில் அஸ்ஸாமில் நடந்த மாணவர் போராட்டம் மற்றும் போடோ தீவிரவாதிகள் பிரச்னைதான் 'உயிரே'வின் கதைக் கரு. ப்ளஸ் ஒரு மென்மையான லவ்! ராஜ்கபூரின் 'ஹென்னா' படத்துக் காதல்தான் அந்தக் காதல். ஒரு பாடல் காட்சியைப் பாகிஸ்தான் பார்டரில் - எந்த நிமிஷத்திலும் குண்டு மழை பொழியலாம் என்ற நிலையில் உயிரைப் பிடித்துக் கொண்டு படமாக்கியிருக்கிறார் மணிரத்னம். ஒரே நேரத்தில் இந்தியிலும் தமிழிலும் வெளியாகப் போகிறது 'உயிரே'. முன்னாள் மிஸ் மாடல் அழகு ப்ரீத்தி படத்தின் இரண்டாம் கதாநாயகி.

— மஹந்த்





1998 ஆகஸ்ட் 2
வெகுதான்ய ஆடி 17
மலர் : 57
இதழ் : 1

கல்கி



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

ஷாக் அடிக்கும் தலைகீழ்ப் பொருளாதாரம்!


'அ.தி.மு.க ஆட்சியில் மின் கட்டணம் உயர்த்தப்பட்டபோது 'அதிர்ச்சிக் கவிதை' பாடிய கருணாநிதி, அதே கவிதையை இப்போது படிப்பாரா?' என்று கிண்டலடிக்கிறார் ஜெயலலிதா.

ஆர்க்காடு வீராசாமியோ 'அ.தி.மு.க. ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. தி.மு.க ஆட்சியில் அப்படியல்ல...' என்று சமாதானம் கூறுகிறார்! மற்ற மாநிலங்களை ஒப்பு நோக்க, தமிழக மின்கட்டணம் குறைவுதான் என்று சப்பைக் கட்டுகிறார்! ஆனால், தி.மு.க ஆட்சிக்கு வந்து முதல் முறை மின் கட்டணம் உயர்த்தப்பட்டபோது, ஏற்பட்ட 'ஷாக்' நீங்குமுன்னரே இரண்டாவது தாக்குதல் தற்போது நடந்திருக்கிறது.

மின் கட்டணத்தை எந்த ஆட்சி உயர்த்தினால் என்ன, பாதிக்கப்படுவது மக்கள்தான்!

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதைத் தொடர்கிறோம்; குறைந்த அளவே மின் சக்தி பயன்படுத்தும் ஏழை - எளிய நுகர்வோருக்குக் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்று அரசு வாதிடுகிறது.

இதற்கு வாழப்பாடி ராமமூர்த்தி பொருத்தமான பதிலளித்திருக்கிறார்: 'மின் கட்டண உயர்வினால் தொழில்துறை பெரும் பாதிப்புக்குள்ளாகும். இதனால் விவசாய இடு பொருள்களின் விலை மட்டுமின்றி விவசாயிகள் அன்றாடம் பயன்படுத்தும் பல பொருள்களின் விலையும் ஏறத்தான் செய்யும். எனவே இலவச மின்சாரம் பெறுகிற விவசாயியும்கூட மின்கட்டண உயர்வினால் பாதிக்கப்படத்தான் போகிறான்...'



மின் கட்டண உயர்வு, தொழில் துறையை - குறிப்பாக - சிறிய, மத்திய ரகத் தொழில்களைப் பெரிதும் பாதிக்கும் என்கிறார் சென்னை தொழில் வர்த்தக சபைத் தலைவர் மல்லிகா சீனிவாசன். ஏழை, எளியவர்களையும் நடுத்தர வர்க்கத்தினரையும் அது கடுமையாகத் தாக்கத்தான் போகிறது.

மின் வாரியம் தொடர்ந்து முதுகொடிக்கும் நஷ்டத்தையே அடைவதும், அடுத்தடுத்து வரும் அரசுகள் மின் கட்டணத்தை உயர்த்துவதும் வாடிக்கையாகி விட்டன.


மின் உற்பத்திச் செலவு அதிகரித்து விட்டது; ஊழியர் ஊதியம் உயர்ந்துள்ளது; மின் வினியோகத்தில் நஷ்டம் என்று காரணங்கள் அடுக்கப்படுகின்றன.

இதே காரணங்களை மீண்டும் மீண்டும் கூறி மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது அரசின் கையாலாகாத்தனத்தைத்தான் காட்டுகிறது.

பிரதம கணக்கு தணிக்கையர் அறிக்கைகளில் நமது மின் வாரியங்களின் மோசமான நிர்வாகம் பற்றியும், தவிர்க்கக்கூடிய அதீதமான, அநியாயமான மின் விநியோக நஷ்டம் குறித்தும் பலமுறை கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆனால், எந்த அரசும் மின் வாரியத்தின் செயல்பாட்டைச் சீர் செய்யத் தீவிர முயற்சிகள் எடுக்கவில்லை. தொழிற்சங்கப் பிரச்னைகளுக்கு அஞ்சி மின்வாரிய ஊழியர்களின் எண்ணிக்கையையும் குறைக்க இயலாமல் உழைப்பையும் மேம்படுத்த முற்படாமலே பல வருடங்கள் கழிந்தாகி விட்டது. மின் வாரியத் துறையின் சேவை குறித்துப் பொதுமக்கள் மகிழ்வுடன் இருந்தாலாவது இந்தச் செலவுகளை நியாயப்படுத்தலாம். அதற்கும் இடமேயில்லை!

உற்பத்தியாகிற மின்சாரத்தில் பதினேழு சதவிகிதம் மின் விநியோகத்தில் வீணாகிறது! இந்த விரயத்தைக் குறைக்க, இருபத்தோராம் நூற்றாண்டை எட்டும் இந்தத் தருணத்தில்கூட நம்மால் இயலவில்லை. மின் விநியோகத்தில் ஏற்படும் நஷ்டத்தை (line loss) குறைக்காத வரையில் எவ்வளவுதான் உற்பத்தியைப் பெருக்கினாலும், தேவையைப் பூர்த்தி செய்வதென்பது இயலாத காரியம். அதனால்தான் புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் மூலம் உற்பத்தியைப் பெருக்கினாலும்



கட்டணத்தைக் குறைக்க இயலவில்லை. மின் உற்பத்திக்குப் புதுத் திட்டங்களைப் போலவே, மின் விநியோக நஷ்டத்தைக் குறைப்பதற்கான ஆராய்ச்சிப் பணிகளும் முக்கியமானவை.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிப்பதனாலும் மின் வாரியத்தின் செலவு கணிசமாக அதிகரிக்கிறது. மின் உற்பத்தியில் ஏறத்தாழ முப்பது சதவிகிதம் விவசாயப் பணிகளுக்கு உபயோகமாகிறது! அந்த முப்பது சதவிகிதத்துக்கும் ஒரு நயாபைசா கூட மின் வாரியத்துக்குக் கிடைக்காது.

உணவு உற்பத்திக்கு அரசு ஆதரவும் கணிசமான மானியமும் அளிப்பது அறிவுடைமைதான். அவ்வாறு அளிப்பதன் மூலம் பெறப்படுகிற கூடுதல் உணவு உற்பத்தியினால் நாட்டுக்கும் ஆதாயமே.

எனினும், விவசாயிகளல்லாத இதர நுகர்வோரிடையே அரசு பேதப்படுத்தி, அதிக மின்சாரம் பயன்படுத்துவோரிடம் கூடுதல் கட்டணம் வசூலிப்பதுபோல், நிறைய நிலம் படைத்த வசதியான விவசாயிகளிடத்தில் மின் கட்டணம் வசூலிப்பது தவறாகாது.

விவசாயக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களை அழைத்துப் பேசி, இவ்விஷயத்தில் ஒரு நல்ல முடிவுக்கு வர முடியும் - வர வேண்டும்!

கடந்த ஆண்டு மின் வாரியத்துக்கு ஏற்பட்ட நிகர பற்றாக்குறை 960.47 கோடி ரூபாய்! விவசாயிகளுக்கு வினியோகமாகிற இலவச மின்சாரத்துக்கு மட்டும் உற்பத்திச் செலவு 1700 கோடி ரூபாய்!

மீண்டும் மீண்டும் மின் கட்டணத்தை உயர்த்துவதன் மூலம் உற்பத்தி செலவுக்கும் வரவுக்கும் இடையேயான இடைவெளியைக் குறைத்து விட முடியாது என்பது உணரப்பட வேண்டும்.

மின் வாரியத்தின் தலைகீழ்ப் பொருளாதாரம் எத்தனை காலத்துக்குத் தொடர முடியும்...? ●

சுமி சூப்பர் மார்க்கெட்

'National School of Drama'ன்னு ஒண்ணு இருக்கு; கேள்விப்பட்டிருக்கீங்களா? ஃபிலிம் இன்ஸ்டிட்யூட் மாதிரி இது ட்ராமா இன்ஸ்டிட்யூட். பரீட்சார்த்த நாடகமெல்லாம் போடுவாங்க. (சில சமயம் நாடகங்களில் பரீட்சை பண்ணுவாங்க. சில சமயம் ஆடியன்ஸை!) டில்லி, பாண்டிச்சேரியில எல்லாம் நல்லா இயங்கிட்டு வர்ற இந்த அமைப்பு ரீஸன்டா தமிழ்நாட்டுக்கு வந்து ஒரு பயிற்சி முகாம் நடத்திச்சு. பயிற்சி பெற்ற மாணவர்கள் நடிச்சிக் காட்டின நாடகம் 'ராமானுஜர்'.

ராமானுஜரை ஒரு மதத் தலைவர்ங்கற எல்லைலேருந்து வெளில கொண்டு வந்து, ஒரு பிரமாதமான சமூக சீர்திருத்தவாதியா அடையாளம் காட்டற இந்த நாடகத்தை எழுதி இருக்கறவர் இந்திரா பார்த்தசாரதி. நிறைய ரிஸர்ச் பண்ணியிருக்கார் இ.பா. தகவல் பிழை இல்லாத, விறுவிறுப்பான நாடகம். ரொம்ப ஷார்ப்பான வசனங்கள். ஒரு நாடகம் எப்படி இருக்கணும்ங்கறதுக்கு பெஸ்ட் உதாரணம் இது. நாடகம் பார்க்கறதுக்கு முன்னால நான் இதைப் புஸ்தகமா படிச்சிட்டதால சொல்றேன். (தமிழ்ப் புத்தகாலயத்துல போட்ருக்காங்க.)

“எவன்டா ரெண்டு காலையும் தூக்கிட்டு நிக்கறது?”

But, படிக்கும்போது எனக்கு ஏற்பட்ட பரபரப்பும் நெகிழ்வும் ஸ்டேஜ்ல பார்க்கும்போது காணாம போயிடுச்சு. காரணம், கண்ணையும் காதையும் கருத்தையும் உறுத்திட்டே இருந்த சில விஷயங்கள்.

முதல் விஷயம், நாடகத்துல நடிச்ச யார் ஒருத்தருக்கும் ண, ன, ழ, ள, ல, ஷ, ஸ - இந்த எழுத்துக்களோட பரிச்சயமே இல்லை.

''மாறனேர் நம்பி! ஆலவந்தார் சிஸ்யர் நீங்கல். நான் உங்கலைத் தொட்டால் பாவமா? நீங்கல் இப்படிச் சொல்லலாமா? உன்மையான வைஸ்னவர்கலுக்கு ஏது ஜாதி?'' அப்படீன்னு ஒரு கட்டத்துல பெரிய நம்பி பேசறார்.

சுமார் 1000 வருஷத்துக்கு முன்னால நடந்த இப்படியொரு புரட்சிகரமான சமாசாரத்தை, அதனோட இம்பாக்டை முழுக்க அனுபவிக்க விடாம பண்ணியது - நடிச்சவங்களோட மொழிப் 'புலமை'. நாடகம் முழுக்கவே இப்படித்தான்!

ரெண்டாவது விஷயம் - காஸ்ட்யூம் & மேக் அப்.

ராமானுஜர், துறவி ஆனப்புறமும் காவி கட்டிக்கவே இல்லை; காவி மாதிரி ஒரு கலர்ல பட்டு வேஷ்டி! (பட்டு வேஷ்டி கட்டிட்டு, 'உந்து மதகளிற்றன்' பாடி பிக்ஷை எடுக்கப் போறது ஒரு நல்ல நகைச்சுவைக் காட்சி) திடீர்னு அதுவும், சாதா கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி வேஷ்டியாக மாறுவது மட்டுமில்லை, பஞ்சகச்சம் வேற! ராமானுஜரா நடிச்சவரோட டிஸ்கோ க்ராப், ஆரம்ப கால ரஜினி மாதிரி டயலாக் டெலிவரி எல்லாம் நாடகத்துலேருந்து கவனத்தை திசை





• 'ராமானுஜர்'ல் ஒரு காட்சி

திருப்பின விஷயங்கள்...

இந்த மாதிரி சொதப்பல்ஸ் ஒரு பக்கம்னா, ரங்கநாதப் பெருமாள் வீதி உலா சமயம், நாதஸ்வரத்துல 'ஞான விநாயகனே' வாசிக்கறது மாதிரியான குபீர்ச் சிரிப்பு வரவழைக்கற விஷயங்களும் உண்டு.

பயிற்சிப் பட்டறை மெட்ராஸ்லதான் நடந்திருக்கு. வைணவ சம்பிரதாயம் நல்லா தெரிஞ்ச இந்திரா பார்த்தசாரதி மெட்ராஸ்லதான் இருக்கார். கூப்பிட்டு அவரை சரி பார்க்கச் சொல்லி, தவறுகளைத் திருத்திட்டு மேடை ஏத்தி இருக்கலாம்.

இது மாதிரி நாடகங்களைத் திரும்பத் திரும்ப அரங்கேற்றினால்தான் மெருகு வரும்... ஆனா நாடகத்துலயே பொதுவா ஆர்வம் குறைஞ்சுட்டதாலே அதுக்கு சந்தர்ப்பமே இல்லாம போயிடுது!

பழைய காலத்துப் பத்திரிகை விளம்பரங்கள் எப்படி இருந்தன? சில சாம்பிள்ஸ்:

● பலஹீனருக்கு ஒரு வரப்ரஸாதம். ஜீவசக்தி அளிக்கும் உயர்ந்த டானிக் 'அம்ருதா' (கேஸரி குடீரம் லிட், மதறாஸ்)

● ப்ரூலாக்ஸ் – உங்கள் சரீர பத்ததியில் ஐக்கியமாகி, கழிவுகளை அகற்றுகிறது. வயிற்றில் கிளர்ச்சி ஏற்படுத்தாமல், ருஜிகரமான சாக்லெட் டைப் போன்ற இந்த விரேசனம், ஹிம்ஸைக்கு மூலமான இடத்தைத் தாக்கி சுறத்தையுண்டாக்குகிறது. உல்லாஸமான உத்ஸாஹத்தை அடையுங்கள்.

● வஸந்த ருதுவின் காலை நேர மனோகரம் போன்றது – பாரிஸ் வாசனாதி த்ரவியம்.

(1946-50 – கல்கி வால்யூம்களிலிருந்து எடுத்தேன். என்ன 'அழகான' 'உத்ஸாஹமான' மணிப்ரவாளம்!)

ஜோக்:

ஒரு ஸ்கூல்ல, பி.ஈ.டி மாஸ்டர் பசங்களை வரிசையா நிக்க சொல்லிட்டு, எல்லாரையும் இடது காலை முன் பக்கமா தூக்கச் சொன்னாரு. எல்லாரும் தூக்கினாங்க. ஒருத்தன் மட்டும் குழப்பத்துல வலது காலைத் தூக்கிட்டான். வரிசையா பார்த்துட்டே வந்த வாத்தியார் அந்த இடம் மட்டும் வித்தியாசமாகத் தெரிய, டென்ஷனாகிக் கத்தினார்: ''எவன்டா ரெண்டு காலையும் தூக்கிட்டு நிக்கறது?''

(அனுப்பியவர்:
வந்தவாசி பா. ஜெயக்குமார்) ⊙

— சுமி

மெக்டானல்டு போன்ற நல்ல இயற்கை உணவு தயாரிக்கும் கடைகளை அமெரிக்கா பூராவும் திறக்கும் திட்டம் என்ன ஆயிற்று என்று அறிந்து கொள்ள பலர் ஆவலாயிருப்பீர்கள். நான் சொன்ன ஆலோசனைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதன்படி என்னென்ன பொருளை விற்கத் தீர்மானிக்கிறோமோ அதை எங்கள் வீட்டில் தயாரித்தோம். நியுயார்க்கிலிருந்து மூன்று பெரிய நிர்வாகிகள் வந்தார்கள். எனக்குக் கொஞ்சம் கூச்சம்தான். மேஜையை அமைக்கும்



சுவைக்காத மணமே துணை!

விதத்திலிருந்து, உணவுப் பண்டங்களின் ருசி வரை, "எப்படிப் போகுமோ?" என்கிற கவலை எனக்கிருந்தது. என்ன செய்ய வேண்டும் என்கிற திட்டமும் அதில் என்ன சுவையை எதிர்பார்க்கிறோம், அதற்கு என்னென்ன பொருளைச் சேர்க்க வேண்டும் என்பதைத் திட்டமிடுவதும் மட்டும் என்னுடைய வேலை. எல்லாவற்றையும் நான் எதிர்பார்க்கும் சுவையுடன், மணத்துடன் அதே அமைப்பில் உருவாக்கும் முழுப் பொறுப்பும் என் மனைவியினுடையது.

வந்தார்கள். வரிசையாக ஒன்றன் பின் ஒன்றாக உணவைப் பரிமாறினோம். எத்தகைய உணவை (மெனுவை) என்ன அயிட்டங்களைக் கொடுக்க வேண்டும் என்பதும் அவை எப்படி இருக்க வேண்டும் என்பதையும் நானும் என் மனைவியும் தீர்மானித்தோம். அது இந்திய உணவல்ல! இத்தாலிய மற்றும் மெக்சிகன் உணவு!

உணவை மிகவும் ரசித்தார்கள், மகிழ்ந்தார்கள், அங்கீகரித்தார்கள். ஊருக்குக் கிளம்பும்போது என் மனைவிக்கு மகுடம் சூட்டாததுதான் குறை.

அடுத்து எங்களுடைய பணி, நியுயார்க்கில் நாங்கள் ஒரு வாரம் தங்கி இதைச் செய்ய வேண்டும் என்பதுதான். அங்கே நாளைய உணவு விடுதி எப்படி இருக்க வேண்டுமோ அந்தப் பாணியில், உணவருந்தும் மேஜைகள் அலங்கரிக்கப்பட்டு உணவு படைக்கப்பட்டது.

நான் என் மனைவி உட்பட எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டோம். அங்கு அளிக்கப்பட்ட அனைத்தும் மாமிசம் சம்பந்தப்பட்டது. அவர்களுடைய ஆச்சரியம், எப்படி இந்த சாதாரண மாமிசத்தை இவ்வளவு மிருதுவாக சுவையுடன் செய்தேன் என்பதுதான்! எல்லோரும் கேட்டார்கள். பாராட்டினார்கள்.

இங்கேதான் ஒரு முக்கியமான விஷயம் வருகிறது.

நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர்கள் ஒருபதினோரு பேர் வரவில்லை. அவர்கள் கலிபோர்னியாவுக்கு - 3000 மைலுக்கு அப்பால் போயிருந்தார்கள். இந்தத் திட்டத்தில் பங்கேற்க அவர்கள் முன்கூட்டியே வருவதாக ஏற்பாடு. ஆனால் அவர்கள் வரவில்லை!

'இந்த உணவு விடுதி திட்டத்தை செய்யலாம் என்று அறிமுகப்படுத்தி, உணவுத் துறையில் நாம் இறங்க வேண்டும்' என்று சொன்னவர் ஒரு துணைத் தலைவர். அவர் நிறுவனத்தின் தலைவருக்கு செல்லப் பிள்ளை. எனவே இந்தப் பெரிய திட்டம்

அங்கீகரிக்கப்பட்டால் அவரது முக்கியத்துவம் நிறுவனத்தில் பல மடங்கு உயர்ந்து விடும், என்கிற பயம்தான் மற்ற 11 துணைத் தலைவர்கள் வராததற்குக் காரணம் என்றார்கள். அங்கே மேல் மட்டத்தில் 'பாலிடிக்ஸ்' எப்படிச் செயல்படுகிறது என்பதைக் கவனியுங்கள்!

எனக்கு – நான் செய்த பணிக்கு அவர்கள் ஒப்புக் கொண்ட பெரிய தொகையைக் கொடுத்து விட்டார்கள். ஆனால் இது எங்கோ போய் விட்டிருக்க வேண்டிய திட்டம். எல்லாம் கூடி வந்தது. பின்னால் கேள்விப்பட்டேன், "இந்தப் பதினோரு பேர் அங்கீகரிக்க மறுக்கும் திட்டத்தை எடுத்துக் கொண்டு செயல்படுவது நல்லதல்ல, பின்னால் பிரச்னை வரும்" என்று தலைவர் சொன்னதாக.

அடுத்து எங்கள் நிறுவனத்திற்குக் கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பு –

வாஷிங்டன் டி.சி. நகரில் மிகப் பெரிய உணவு நிறுவனம். பெயரே (GIANT STORES) "ராட்சதக் கடைகள்" என்று.

நான் டல்லஸில் நடந்த பொருட்காட்சியிலிருந்து திரும்பிய போது அந்தக் கடையின் நிர்வாக அதிகாரி என்னைக் கூப்பிட்டதாக என் காரியதரிசி தெரிவித்தார். மிகுந்த ஆர்வத்துடன் போனை எடுத்தேன். நிறுவனத்தின் பொருட்கள் வாங்கும் துறையின் தலைவர் என்னுடன் பேசினார்.

"உங்கள் பொருட்களைப் பற்றிப் படித்தேன். நாங்கள் அதை விற்க விரும்புகிறோம். இங்கே இதை எல்லா இடங்களிலும் விற்கும் தரகர்களை உங்களுக்கு நாங்களே ஏற்பாடு செய்கிறோம். நீங்கள் இங்கு வந்து விட்டுப் போக முடியுமா? உங்களுடன் பேச விரும்புகிறேன்!" என்றார்.

நான் மறுநாளே விமானத்தில் போய்ச் சேர்ந்தேன். எனக்கு ராஜ வரவேற்பு.

பொருளை எடுத்துச் சென்றிருந்தேன். உணவை சூடுபடுத்தி சாப்பிட்டுப் பார்த்தார்கள். அவர்களுக்குப் பரமதிருப்தி. இதன் விளைவாக எங்கள் பொருளை இரண்டு 'டிரக்'குகள் ஆர்டர் செய்தார்கள். இது ஒரு மிகப் பெரிய வாய்ப்பு எங்கள் நிறுவனத்திற்கு.

ஆனால் ஒரு விஷயம் நடந்தது. நிலைமையின் கனத்தையும் வாய்ப்பையும் எங்கள் நிறுவனத்தின் சொந்தக்காரர் உணரவில்லை. எனவே பொருட்களுக்கு டெலிவிஷனிலும் பத்திரிகையிலும் விளம்பரம் செய்ய மறுத்து விட்டார். அவருக்கு விளம்பரத்தில் நம்பிக்கையில்லை; "பணம் தான் வீணாகும்'' என்ற கொள்கை கொண்டவர் அவர்.

கடைக்காரர்கள் சொன்னார்கள். 'நாங்கள் பத்திரிகையில் விளம்பரம் செய்கிறோம். 'அறிமுகம்' என்பதால் குறைந்த விலைக்கு விற்போம், நிறைய விற்பனை ஆகும்' என்றார்கள். ஆனால் அப்படித் தன் பொருளை ஓரளவு நஷ்டத்தில் விற்க உரிமையாளர் ஒத்துக் கொள்ளவில்லை.

இதன் விளைவாக ஒரு மாபெரும் வாய்ப்பை நிறுவனம் இழந்தது. இந்தப் பொருளின் தன்மை – குணம் பற்றி சரியான அறிமுகம் மற்றும் விளம்பரம் இல்லாததால் கடைகளில் பொருள் அப்படியே தேங்கிக் கிடந்தது. எங்கள் பொருள் ஒரு 'டிரக் லோடு'க்கு மேலாகத் திரும்பி வந்தது. திரும்பி வந்த பொருள் கடையில் கையாளப்பட்ட பின் திருப்பி அனுப்பப்பட்டதால் பொருள் முழுவதுமாகத் தூக்கி எறியும் நிலைக்கு வீணாகி இருந்தது.

இப்படி நஷ்டமடைவதைத் தவிர்த்து அங்கேயே குறைந்த விலைக்கு,



நிறைய விற்றிருக்கலாம்; நல்ல அறிமுகம் கிடைத்திருக்கும்.

ஒரு தலைவனின் சொந்த விருப்பு வெறுப்புக்களும் முடிவுகளும் தொழில் வளர்ச்சியை எப்படிக் கடுமையாக பாதிக்கிறது என்பதை கவனியுங்கள். நமக்கு வர வேண்டிய மிகப்பெரிய வெற்றியை கோட்டை விட்ட உணர்வுதான் என்னுள் எழுந்தது.

இதை எல்லாம் மீறி, நிறுவனமானது முதன் முறையாக நல்ல லாபத்தில் ஓடத் துவங்கியது. அதாவது நாங்கள் கொண்டு வந்த சீர்திருத்தங்கள், மாற்றங்கள் அனைத்தும் பலன் தந்தன.

ஏறத்தாழ ஒரு மில்லியன் டாலருக்கு மேல் நிறுவனத்திற்கு வங்கியில் கடன் இருந்தது.

ஒவ்வொரு மாதமும் வரவு செலவு லாபப் பட்டியலை நான்தான் வங்கியின் தலைவருக்கு எடுத்துச் செல்வது வழக்கம்.



அவர்கள் கணக்கை உற்றுக் கவனிப்பார்கள்; அத்துடன் நாங்கள் நிலைமையை மீட்க எடுக்கும் நடவடிக்கைகளையும் கேட்பார்கள். ஒவ்வொரு முறையும் வங்கியின் தலைவர் அறையில் நுழையும் போதே "என்ன கறுப்பு மையா? சிவப்பு மையா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டுக் கை குலுக்குவார். கறுப்பு மை என்றால் 'இந்த மாதம் லாபம்' என்று அர்த்தம்; சிவப்பு மை என்றால் 'நஷ்டத்தில் நிறுவனம் ஓடிக் கொண்டிருக்கிறது' என்று அர்த்தம். என்னை மிகுந்த கௌரவத்துடன் நடத்தினார்கள். ஒரு சமயம் "ஏன் நிறுவனத்தை நீயே வாங்கிக் கொண்டு நடத்தேன்!" என்றார் வங்கியின் தலைவர். நான் மௌனமாக சிரித்தேன்.

நிறுவனத்தில் இன்னும் இரண்டு விஷயங்கள் செய்ய விரும்பினேன். ஒன்று: உற்பத்தி செய்யப்படும் ரொட்டி மாவு எப்போதும் ஒரே நிலையில்- ஒரே பதத்தில்- இல்லாமலிருந்தது. இதன் காரணம் மாவு பிசையும் அறையில் சரியான தட்பவெப்ப நிலை இல்லை. இதை மாற்ற செலவாகும் என்றாலும் மாற்ற விரும்பினேன்.

இரண்டாவதாக புதிய மெக்சிகன் உணவுப் பொருட்களையும் மற்ற இத்தாலிய உணவுப் பொருட்களையும் விற்பதற்கு நிறைய இடமிருக்காது. அது நம் வருமானத்தை அதிகப்படுத்தும் என்று எண்ணினேன்.

வங்கியில் இதற்கு உதவத் தயாராக இருந்தார்கள். எனினும் எங்கள் உரிமையாளர் இதற்குத் தயாராயில்லை. தொழிலில் ஒரு பழமொழி உண்டு. ''நேற்றிருந்த இடத்தை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டுமென்றால் கூட நீ ஓடிக் கொண்டிருக்க வேண்டும்'' என்பார்கள். தொழில் என்பது தொடர் கண்காணிப்பு; தொடர் முன்னேற்றம். நாம் ஓடவில்லை என்றால் போட்டியாளர்களும், வாங்கும் மக்களும் நம்மைப் பின்னுக்குத் தள்ளி விடுவார்கள். தொழிலில் தேக்கத்திற்கு - இருப்பதை வைத்துக் கொண்டு ஓட்டுவதற்கு - இடமில்லை. அப்படி இருந்தால் நாம் அப்புறப்படுத்தப்படுவோம்.

புதிய சூழ்நிலை, என்னை வளர முடியாதபடி கட்டுப்படுத்துவதாக இருந்தது. எனக்கோ நம் அறிவையும் திறமையையும் பிறருக்கு உபயோகப்படுத்தியும் பலனில்லையே என்ற தாபமும் விரக்தியும் ஏற்பட்டன.

சொந்தமாகத் தொழில் செய்ய வேண்டுமென்றுதான் நான் பேராசிரியர் பதவியை விட்டேன். இப்போது போதுமான அனுபவம் பெற்றாய் விட்டது.

வங்கியாளர் சொன்னது எனக்கு நினைவுக்கு வந்தது. எனவே எங்கள் நிறுவனத்தின் உரிமையாளருடன் நிறுவனத்தை வாங்குவது பற்றிப் பேச்செடுத்தேன். அவருக்கு விற்க மனமில்லை. ஏனெனில் அவர் துவங்கிய ஏழெட்டு நிறுவனங்களில் இது ஒன்றுதான் வருமானம் கொடுத்த நல்ல நிறுவனமாய் மாறி இருந்தது.

நாடெங்கும் சுற்றிப் பார்த்ததில், எங்கள் நிறுவனம் சுமார் 16-17 மாநிலங்களில் மட்டுமே இருந்தது. இன்னும் 32 மாநிலங்களில் இதைப் போன்ற உணவு நிறுவனத்திற்கு நல்ல வாய்ப்பு இருந்தது. அதுவும் தெற்கு மாநிலங்களில். தெற்கு மாநிலங்



THE WORLD OF FANCY SAREES & CHURIDARS

WITH MORE OF NEW VARIETIES

FANCY BANARAS COTTON SAREES
FANCY MIRROR WORK SAREES
FANCY THREAD WORK SAREES
FANCY SYNTHETIC SAREES
NEGAMAM COTTON SAREES
POLY COTTON SAREES
KARISHMA SAREES & CHURIDARS
VENGATAGIRI COTTON SAREES
VIPUL SAREES
HAND PRINTED SAREES
ANDHRA POCCHAMPALLI

COTTON SAREES
BENGAL COTTON SAREES
FANCY READYMADE CHURIDARS
SILK CHURIDAR MATERIALS
NIGHTIES, PETTICOATS &
READYMADE BLOUSES

SHOP OPEN ON SUNDAYS ALSO TILL DEEPAVALI

WE ACCEPT ALL MAJOR CREDIT CARDS

AALURI SAREES

(WHOLESALE * RETAIL)
4/38. R.K.MUTT ROAD, LUZ BAZAAR,
MYLAPORE, CHENNAI - 4, PH.4935791
(OPP. TO THIRU MYLAI
RAILWAY STATION)

10% DISCOUNT ON READYMADE CHURIDARS WITH THIS CUTTING ONLY



- BUSINESS MANAGEMENT
- BUSINESS ADMINISTRATION
- OFFICE ADMINISTRATION
- SALES & MARKETING
- FINANCIAL MANAGEMENT
- INDUSTRIAL RELATIONS & PERSONNEL MANAGEMENT
- HUMAN RESOURCES DEVELOPMENT
- LABOUR LAWS
- EXPORT & IMPORT MANAGEMENT
- MATERIALS MANAGEMENT
- PRODUCTION MANAGEMENT
- TOTAL QUALITY MANAGEMENT & ISO 9000
- QUALITY CONTROL & ISO 9000
- QUALITY ASSURANCE & Qs 9000/ISO 9000
- ENVIRONMENTAL MANAGEMENT & ISO 14000/14001
- INDUSTRIAL SAFETY
- RESEARCH & DEVELOPMENT
- ADVERTISING & PUBLIC RELATIONS

ICOLAM offers SIX MONTHS

DIPLOMA Courses by Correspondence (Distance Education Programme.) Each Diploma Course has 4 written papers.

INDIAN COUNCIL FOR LABOUR MANAGEMENT (ICOLAM)

25, Mada Church Rd.,
IInd Floor, Mandaveli, Chennai - 28.
Ph : 044-4952719/4852572
Fax : 044-4933259/4940066

ELIGIBILITY : No formal qualification is required. (Open Education System) Course fee Rs. 700/- only. Examination will be held in all major centres in India. For application and Prospectus send Rs. 6/- postal stamp to the above address.



ESTD 1955 ஸ்ரீ Ph : 706823 & 704312

காசி யாத்திரைக்குப் போய் வர வேண்டுமானால்

அதற்கும் ஓர் பூர்வஜென்ம பிராப்தம் வேண்டும்!

19 - 23 நாட்கள் கொண்ட வட தேச இமாலய அன்னபூர்ணாசிகரம் நேபாள் (காட்மாண்ட்) பசுபதிநாத் ஜெய்ப்பூர் காசி யாத்திரை

6.9.98–ஆம் தேதி (ஆவணி மாதம் 28ம் தேதி) அன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5–30 மணிக்கு சென்னை ஜம்முதாவி எக்ஸ்பிரஸ் மூலம் ஒரு தனி 3 டயர் கோச் புறப்படுகிறது. மார்க்கம் : சென்னையிலிருந்து புறப்பட்டு ஆக்ரா, மதுரா, ஜெய்ப்பூர், டெல்லி, ஹரித்வார், ரிஷிகேசம், அலகாபாத், அயோத்தியா, வாரணாசி (காசி) நேபாள், கயா, கல்கத்தா, (குர்தா ரோடு), பூரி, புவனேஷ்வர், கோணார்க், விஜயவாடா வழியாக சென்னை.

நபருக்கு 3 டயர் கட்டணம், பர்த் சார்ஜ் உள்பட முக்கிய நகரங்களைச் சுற்றிப்பார்த்துவரும் பஸ் சார்ஜ் காலை டிபன், காபி 2 வேளை பிராமணாள் போஜனம், உடன் வரும் 10 உதவியாளர்களின் ஊதியம் உள்பட நபருக்கு ரூ 8575 – நேபாள் யாத்திரைக்குப் போய்வரும் பஸ் சார்ஜ், தங்கும் இடவசதி உள்பட நபருக்கு ரூ. 2000 – தனி. மேற்படி யாத்திரைக்கு வாராதவர்கள் நம் கோச்சிலேயே தங்கலாம். வழக்கமான போஜனவசதி உண்டு. டிக்கெட்டிற்கு ரூ 2500 – வீதம் அட்வான்ஸ் அனுப்பி வைத்து ரிசர்வ் செய்துகொள்ள வேண்டும்.

தீபாவளி கங்கா ஸ்நான ஸ்பெஷல்!

17 நாட்கள் கொண்ட யாத்திரைக்கு ஒரு தனி 3 டயர் கோச் 8.10.98ம் தேதி புறப்படுகிறது. சென்னை ஆக்ரா, மதுரா, டெல்லி, ஹரித்வார், ரிஷிகேஷ், அலகாபாத், அயோத்தியா, காசி, கயா, கல்கத்தா, பூரி, புவனேஷ்வர், கோணாக் (குர்தா ரோடு) விஜயவாடா வழியாக சென்னை. கட்டணம் ரூ. 7975

(12 DAYS - SHORT - TOUR) தீபாவளி கங்கா ஸ்நான ஸ்பெஷல்!

12.10.98ம் தேதி சென்னையிலிருந்து வாரணாசி எக்ஸ்பிரஸ் மூலம் அலகாபாத் திருவேணி அயோத்தியா, கயா, புத்தகயா– வாரணாசி (காசி) சென்னை – நபருக்கு காலை டிபன், காபி 2 வேளை பிராமணாள் போஜனம் உள்பட நபருக்கு ரூ 6975. தீபாவளி ஸ்பெஷலுக்கு முன் கூட்டியே ரூ2500 வீதம் செலுத்தி பதிவு செய்து கொள்வது நலம்.

முழு விபரத்திற்கு 2 ரூபாய் ஸ்டாம்ப் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்

ஸ்ரீ ஞானகிரி டிராவல்ஸ் சர்வீஸ்



34-A/2 அக்ரஹாரம் மேல சிந்தாமணி, திருச்சி - 2. போன்: 706823

களுக்கு 'டிரக்'கில் பொருளை எடுத்துச் செல்வது அதிக செலவாகும். எனவே அங்கும் நமது உற்பத்திக் கேந்திரம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற என் யோசனையும் எடுபடவில்லை.

இதன் விளைவாகச் சிறிது காலத்தில் நான் அதிலிருந்து விலக வேண்டியதாயிற்று. அப்போது இன்னும் சில மனவியல் உண்மைகளை நான் தெரிந்து கொண்டேன்!

ஒரு வேலையில் இருக்கும் போது உங்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதை, அது இல்லாத போது கொடுக்கப்படுவதில்லை! உங்களை ஒன்றுமில்லாதவர் என்றே உலகம் மதிக்கிறது. தொழில் துவங்குவதென்றால் தாங்களும் அதில் பங்கு பெற்றுப் பணம் போடுவதாகப் பலர் சொல்லி இருந்தார்கள். அவர்கள் எல்லாம் காய்ந்த குளத்திலே தங்காத நாரைகள், பறந்து விடுவது போலப் பறந்து விட்டனர்.

சொந்தமாகக் கையில் போதுமான பணமில்லாத போது தொழில் துவங்க முடியாது என்பதை ஒரு மூன்று நான்கு மாதங்களில் தெரிந்து கொண்டேன். கொடுக்கிறேன் என்றவர்கள் கைவிரித்தார்கள். அடுத்த ஏழெட்டு மாதங்களில் ஒரு நல்ல வேலையையாவது எடுத்துக் கொள்வோம் என்று ஈடுபட்டேன். நான் இருந்த வேலையோ - தலைமை நிர்வாகம். சில பெரிய நிறுவனங்களிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. ஆனால் எதுவுமே சரியாக அமையவில்லை. உள்ளே நுழைவதற்குப் பல்வேறு தடைகள் இருந்தன.

எனினும் நான் மனம் சளைக்கவில்லை. ஏனெனில் இப்படி வேலையை விட்டு விட்டுப் புதிய பிரதேசத்தைத் தேடுவது எனக்குப் புதிதல்ல; இது எனக்கு மூன்றாவது முறை!

உணவுத் துறை தொழில் நல்ல தொழில் தான். எல்லோரும் தினமும் சாப்பிட்டாக வேண்டும். எனவே விற்பனை நிச்சயம் நடக்கும் - ஆனால் இதில் ஒரு குறை; லாப சதவிகிதம் மிகக் குறைவு! காரணம் எல்லோருக்குமே இது தெரிந்த தொழில். ''என் மனைவி நன்கு சமைக்கிறாள். எனவே நான் உணவுத் துறையில் பிரகாசிக்க முடியும் என்று சொல்லிக் கொண்டு இறங்கி விடாதே!'' என்பதுதான் உணவுத் துறை ஆலோசகர்கள் சொல்லும் முதல் பாடம் - போட்டி மிக அதிகம்.

சொந்தத் தொழில் துவங்க எது நமக்கு ஏற்றதாக இருக்கும் என்று எல்லாவற்றையும் பார்த்து அலசிக் கொண்டிருந்தேன்.



சில சமயம் அதைரியம் ஏற்படும்; உண்மைதான். ஓரிரு நாள் வரை கூட இந்தச் சோர்வு என்னை அலைக்கழிக்கும். இதை மிஞ்சி எது எனக்கு உயிர் கொடுத்ததென்றால் 'சளைக்காத மனம்'. என்பார்களே, அதுதான்!

அந்தக் காலகட்டத்தில்தான் - 1972-ல் மெக்டானல்டு என்ற உணவு நிறுவனம் ஒரு புகழ்பெற்ற வாசகத்தைத் தனது நிறுவனத்தின் விளம்பரமாகப் பல பத்திரிகைகளிலும் வெளியிட்டிருந்தது. அதை எடுத்து என் அறையில் எனக்கு எதிரே ஒட்டி வைத்திருந்தேன். அது அவர்களுடைய வாசகமும் அல்ல; கால்வின் கூலட்ஜ் என்ற அமெரிக்க ஜனாதிபதியின் வாசகம். இதுதான் அந்த வாசகம் :

"மேலே செல்லுங்கள்!"

சளைக்காத மனத்திற்கு ஈடாக இவ்வுலகில் எதுவுமில்லை. - திறமையும் அதற்கு ஈடாகாது.

திறமை இருந்தும் தோற்றவர்கள் ஏராளம். மேதைத்தனமும் ஈடாகாது.

பலன் காணாத மேதைகள் என்பது பழமொழி. கல்வி மட்டும் ஈடாவதில்லை.

இவ்வுலகம், படித்தும் பாதை தவறியவர்களால் நிரம்பி இருக்கிறது.

சளைக்காத மனமும் உறுதியும் மட்டுமே சர்வவல்லமை படைத்தவை.

வாழ்வின் ஒவ்வொரு திருப்பத்திலும் சளைக்காத மனம்தான் எனக்குத் தெம்பு கொடுத்தது; சரியான வழியைக் காட்டியது.

(தொடரும்)

விளம்பரப் பலகைகளின் விஸ்வரூபம்! அதிர்ச்சியூட்டும் பின்னணிகள்!



• முதலில் கலைஞரை வாழ்த்தி....

சென்னையில் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் (Hoardings) இன்றைக்கு அனைத்திந்திய அளவிலும் தெரிகின்றன! அத்தனை உயரமான இடங்களில் வைக்கப்பட்டிருப்பதாலா? இல்லை. அத்தனை முறைகேடுகளின் மீது வைக்கப்பட்டிருப்பதால்!

இந்த விளம்பரப் பலகைகளின் விஸ்வரூப விவகாரத்தை முழுமையாகத் தரிசிக்க வேண்டுமானால், இது பற்றிய பின்னணிகளை முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

'புற்றீசல்கள் போல் பெருகி வரும் விளம்பரப் பலகைகளால் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது; அதனால் பல விபத்துக்கள் நடைபெறுகின்றன. இதைத் தடுக்க வேண்டுமானால், எந்தவிதமான பாதிப்பும் இல்லாத இடங்களில்தான் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட வேண்டும். எனவே, இப்போது இருக்கிற அத்தனை விளம்பரப் பலகைகளையும் அரசே கையகப்படுத்திக் கொள்கிறது. இனி பொது இடங்களில் வைக்கப்படுகிற விளம்பரப் பலகைகள் அரசின் அல்லது அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரியின் அனுமதி பெற்றாக வேண்டும்' என்று சொல்லி, கடந்த 10.7.1985-ல் எம்.ஜி.ஆர். அரசு ஒரு சட்டம் கொண்டு வந்தது. அதற்கு 'Tamil Nadu Acquisition of Hoardings Act 1985' என்று பெயர்.

இந்தச் சட்டம் 10.7.85 முதல் சென்னை நகரில் அமலுக்கு வருவதாகவும் பிறகு இதுவே தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்றும் அரசு அறிவித்தது.

அவ்வளவுதான்!



• ... பிறகு அதுவே வியாபார விளம்பரப் பலகையாக!

விளம்பரப் பலகைகளை நகர் முழுவதும் கன்னாபின்னாவென்று வைத்து லட்சக் கணக்கில் பணம் பண்ணிக் கொண்டிருந்த விளம்பர நிறுவனத்தாரின் வயிற்றில் புளியைக் கரைக்கவே, விழுந்தடித்துக் கொண்டு ஓடி, அரசின் சட்டத்தை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள்.

அரசு கொண்டு வந்துள்ள சட்டம் பொதுநலன் கருதிக் கொண்டு வந்துள்ள சட்டம்தான் என்றும் அரசியல் சாசனத்திற்கு உட்பட்டுக் கொண்டு வந்திருக்கிற சட்டம்தான் என்றும் சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளிக்கவே, அதை எதிர்த்து உச்சநீதி மன்றத்துக்கு ஓடினார்கள். உச்சநீதி மன்றம் இன்னும் இதுகுறித்துத் தீர்ப்பு வழங்கவில்லை.

பொது இடங்களில் தனியாரால் வைக்கப்பட்டிருக்கும் விளம்பரப் பலகைகளை

அரசு கையகப்படுத்துவதற்கான சட்டம் சரியா தவறா என்கிற வழக்கு, இன்னமும் உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்றால் அதற்கு என்ன அர்த்தம்?

ஏற்கெனவே, பொது இடங்களில் நிறுவப்பட்டுள்ள (அதாவது 10.7.85-க்கு முன்பாக) விளம்பரப் பலகைகளை அரசு கையகப்படுத்திய சட்டம் சரியா தவறா என்பதுதான் உச்சநீதிமன்றத்தில் உள்ள கேள்வி. இந்தக் கேள்விக்கு இன்னமும் உச்சநீதி மன்றம் விடையளிக்காத நிலையில், 10.7.85க்குப் பிறகு, புதிய விளம்பரப் பலகைகளை நிறுவ தமிழக அரசே அனுமதியளிக்க முடியாது. அதாவது வழக்கு நிலுவையில் உள்ளதால் புதிய விளம்பரப் பலகைகளை நிறுவ அனுமதியளிக்க அரசுக்கு அதிகாரம் இல்லாமல் போய் விடுகிறது. பொது இடங்களில் அரசின் அனுமதியின்றித் தனியார் யாரும் விளம்பரப் பலகைகளை நிறுவ முடியாது என்பதால், இயல்பாகவே 10.7.85-க்குப் பிறகு சென்னை நகரில் புதிதாக எந்த வொரு விளம்பரப் பலகையும் நிறுவப் பட்டிருக்கக் கூடாது!

ஆனால் உண்மை நிலை என்ன? சென்னை நகரில் திரும்பின பக்கமெல்லாம் விளம்பரப் பலகைகள்தான்!

இது எப்படிச் சாத்தியமானது? அரசும் அதாவது அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட விளம்பரப் பலகைகளின் சொந்தக்காரர்களும் சட்டத்தையும் பொது நலனையும் புறந்தள்ளிவிட்டுக் 'கைகோத்துக்' கொண்டு செயல்பட ஆரம்பித்ததுதான்!

இப்படியொரு! 'நெருக்கம்' இருதரப்புக்கும் வந்திருக்கவில்லையென்றால் புதிய விளம்பரப் பலகைகள் வந்திருக்கவே முடியாது. இன்னும் சில விளம்பர நிறுவனங்கள், தங்களுடைய விளம்பரப் பலகைகளில் 'சிட்டி சிவில் கோர்ட் ஆர்டர் எண்:......' என்று சொல்லி ஏதோவொரு எண்ணைக் குறிப்பிட்டிருப்பதும் நமக்கு ஆச்சரியம் அளிக்கிறது!

• சிக்னலை மறைக்கும் விளம்பரப் பலகை



காரணம்? ஒரு சட்டத்தை அரசு இயற்றுகிறது. அது சரிதான் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளிக்கிறது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு சரியா அல்லவா என்பது பற்றிய மேல் முறையீடு உச்சநீதி மன்றத்தில் இருக்கிறது. இந்த நிலையில் இதற்குள் சிட்டி சிவில் கோர்ட் புகுந்து ஒரு தீர்ப்பைச் சொல்ல முடியுமா? உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பில் உச்ச நீதி மன்றம்தான் தலையிட முடியுமே தவிர, சிட்டி சிவில் கோர்ட் தலையிட முடியுமா? இது மில்லியன் டாலர் கேள்வி.



• மாநகராட்சி தார் பூசி மறைத்ததை மறுபடியும் சுத்தப்படுத்தும் உரிமையாளர்கள்

இந்த விஷயமெல்லாம் விளம்பரப் பலகைகளின் உரிமையாளர்களுக்குத் தெரியாததல்ல. எனவேதான், 'நாங்கள் விளம்பரம் செய்வதற்கான தொழில் வரியை மாநகராட்சிக்குக் கட்டிக் கொண்டிருக்கிறோம். எங்களது விளம்பரப் பலகைகள் 85-க்கு முன்னதாகவே வைக்கப்பட்டவை. இதோ பாருங்கள் நாங்கள் வரி கட்டிய ரசீது. எனவே, எங்கள் விளம்பரப் பலகைகளை அப்புறப்படுத்துவதை கோர்ட் தடைவிதிக்க வேண்டும்' என்று சிட்டி சிவில் கோர்ட்டில் பொய்யாக முறையிட, மாநகராட்சியினர் இதற்கான பதில் வாதமே செய்ய வராமல் போக, சிட்டி சிவில் கோர்ட்டும் தடை விதித்து விட்டது! மாநகராட்சி பதிலுக்கு வாதிட்டிருந்தால் இந்தத் தடையை கோர்ட் கொடுத்திருக்காது. இது தெரிந்தும் மாநகராட்சி ஏன் எதிர் வழக்காடவில்லை? ஆமாம்! 'அதுதான்' விஷயம்!

ஏற்கெனவே (10.7.85க்கு முன்பு) பொது இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் விளம்பரப் பலகைகளுக்கு அரசு ஒரு தொகையை வரியாக நிர்ணயித்தது.

அதையும் ஆண்டுக் கணக்கில் இந்த விளம்பர நிறுவனங்கள் கட்டவில்லை.

இந்த நிலையில்தான், அண்மையில், வரி செலுத்தாத விளம்பரப் பலகைகளைத் தார் பூசி மறைக்கும் வேலையைச் சென்னை மாநகராட்சி தொடங்கியது. அதிசயமாக இப்படியொரு நல்ல காரியத்தை மாநகராட்சி தொடங்கியிருக்கிறதே என்று பொது மக்கள் ஆச்சரியப்பட்ட நேரத்தில் அந்தப் பணியும் சப்தமில்லாமல் நிறுத்தப்பட்டு விட்டது.

மாநகராட்சியால் தார்பூசி அழிக்கப்பட்ட விளம்பரப் பலகைகள், உடனடியாக அதன் சொந்தக்காரர்களால் மறுபடியும் பழையபடியே புதுப்பிக்கப்பட்டு விட்டன!

ஒரு வேளை, அனைவருமே கோடிக் கணக்கான ரூபாய் வரி பாக்கியையும் ஒட்டு மொத்தமாக அரசுக்குச் செலுத்தியிருக்கலாம் என்கிற எண்ணத்தில், இப்படி மாநகராட்சிக்கு வசூலான வரித் தொகை எவ்வளவு என்று நாம் விசாரித்தபோது, அவர்களிடமிருந்து சரியான பதிலே வரவில்லை! 'அதோ இதோ' என்று காலங்கடத்துகிறார்களே தவிர, சரியான தொகையைச் சொல்ல மாட்டேன் என்கிறார்கள்! எனவே, இதில் ஏதோ 'உள் விவகாரம்' நடந்திருக்குமோ என்கிற சந்தேகம்தான் நமக்கு பலமாக எழுகிறது.

மொத்தம் 598 இடங்களில் உள்ள விளம்பரப் பலகைகள் மட்டும்தான் அரசின் அங்கீகாரம் பெற்றவை (அதாவது 10.7.85க்கு முன்பு நிறுவப்பட்டவை) என்று அரசு தரப்பில் சொல்லப்படுகிறது. இந்த விஷயத்தில் ரொம்பவும் சர்சைக்குரிய நபராக இருக்கும்

''என் காதலியின் பல் அழகைப் பற்றி நான் சொன்னா நீ நம்பமாட்டே!''

''அப்படியா?''

''அதனாலதான் கையோட அதை வாங்கிட்டு வந்திருக்கேன். நீயே பாரு!''

– ஜூனியர் தேஜ்



அமைச்சர் ஆர்க்காட்டாரின் தம்பி தேவராஜன், தாம் அரசின் அனுமதி பெற்று வைத்துள்ளதாகச் சொல்லும் 112 இடங்களிலுள்ள விளம்பரப் பலகைகளையும் சேர்த்து வரும் எண்ணிக்கைதான் 598! ஆனால் விளம்பரப் பலகைகளின் உரிமையாளர்களோ, அனுமதியோடு வைக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை 1074 என்கின்றனர்.

ஆனால், சென்னை நகரின் நிலை என்ன? ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட விளம்பரப் பலகைகள் இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. மேலும் மேலும் புதுப்புது இடங்களில் முளைத்த வண்ணம்தான் இருக்கின்றன.

இந்த விளம்பரப் பலகைகள் எப்படியெல்லாம் சாமர்த்தியமாக முளைக்கின்றன என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறோம். அண்மையில், கோட்டூர்புரத்திலுள்ள அடையாறு ஆற்றுப் பாலத்திலுள்ள நடை பாதையின் ஒரு பகுதியில் புதிதாக ஒரு விளம்பரப் பலகை முளைத்தது!

அதில், மக்கள் தொண்டன் சைதை கா. கிட்டுவும் முன்னாள் எம்.எல்.ஏ.வான ஆர்.எஸ். ஸ்ரீதரும் தி.மு.க.வின் 138-வது வட்டச் செயலாளர் க. மணியும் பவள விழாக் கண்ட முதல்வர் கலைஞரைப் பல்லாண்டு வாழ வாழ்த்தியிருந்தார்கள். அடுத்த சில நாட்களிலேயே அந்த விளம்பரப் பலகை பெப்சி விளம்பரப் பலகையாக மாறிவிட்டது! இப்படித்தான் ஒவ்வொரு விளம்பரப் பலகையும் ஒவ்வொரு முகத்தைக் காட்டிக் கொண்டு முளைக்கின்றன என்றால், இதில் எப்படி அரசியல் அதிகாரம் குறுக்கிடவில்லை என்று அடித்துச் சொல்ல முடியும்?

இதேபோல் ஓர் இடத்தில் வைப்பதற்கு அரசிடம் பெற்ற அனுமதி எண்ணையே பிற இடங்களிலும் பயன்படுத்தி விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டிருப்பதும் அரசுக்குத் தெரிந்த விஷயம்தான் என்கிற நிலையில் அரசு மௌனம் காப்பது ஏன்? அதற்கு என்ன அர்த்தம்?

இன்னோர் உதாரணமும் சொல்லலாம். சிம்சனுக்கு எதிரில் கடந்த மார்ச் இறுதியில் ஒரு மெகா சைஸ் விளம்பரப் பலகையொன்று மின் விளக்கு அலங்காரங்களோடு புதிதாக முளைத்தது. இப்படி முளைத்தது பற்றி அப்போது தினமலர் நாளிதழில் செய்தியும் வந்தது. இதற்கு யார் அனுமதியளித்தது என்பதில் அதிகாரிகளே குழம்பிப்போயிருப்பதாகவும் அந்த நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது!

இப்போது அந்த விளம்பரப் பலகையைப் பார்த்தால், இதற்கு 95-ம் ஆண்டே

அரசிடமிருந்து அனுமதி வாங்கியிருப்ப தாகவும் 15.6.98 அன்று வரியையும் கட்டி விட்டதாகவும் அந்த விளம்பரப் பலகையில் எழுதப்பட்டிருப்பது ஆச்சரியமளிக்கிறது!

இன்னும் சொல்லப் போனால், இந்த மெகா சைஸ் விளம்பரப் பலகையின் சொந் தக்காரரான ஆர்க்காட்டாரின் தம்பி தேவ ராஜன் (செவன் ஸ்டார் விளம்பர நிறுவனம்) சமீபத்தில் ஒரு பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில், '1985-ம் ஆண்டுக்குப் பிறகு அமைச்சர் அல்ல; முதலமைச்சரே நினைத் தால்கூடப் புதிதாக யாருக்கும் விளம்பரப் பலகை உரிமம் கொடுக்க முடியாது. ஆனால் அதையும் மீறி தைரியமாகச் செயல்பட்டு, 25 பலகைகளுக்கான உரிமத்தைத் தமக்கு நெருக்கமானவர்களுக்குத் தர ஸ்பெஷல் அரசு ஆணையையே ஜெயலலிதா தமது ஆட்சிக் காலத்தில் போட்டதும் தற்போது அது நீதிமன்றத்தில் இருப்பதும் உலகறிந்த விஷயம்!' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மெகா சைஸ் விளம்பரப் பலகை அண் மையில் வைக்கப்பட்டதல்ல; அது 95-லேயே வைக்கப்பட்டதுதான் என்பதை ஒரு வாதத் துக்காக ஒப்புக் கொண்டாலும், அதற்கு எப்படி முறைகேடாக உரிமம் வழங்கப்பட் டது? ஜெயலலிதா அரசு, ஸ்பெஷல் உத்தரவு மூலம் வழங்கிய 25 உரிமங்களில் ஆர்க் காட்டாரின் தம்பிக்கான உரிமமும் ஒன்றா?

போக்குவரத்துக்கும் இந்த விளம் பரப் பலகைகள் இடைஞ்சலாக இருக்கின் றன என்பதற்கும் ஓர் உதாரணம் சொல் லலாம். ஜி.என். செட்டி சாலையிலிருந்து அண்ணா மேம்பாலத்தின் கீழ் ஓரமாகச் சென்று நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் திரும்புகிற இடத்திலுள்ள ஒரு விளம்பரப் பலகை, அங்குள்ள சிக்னல் விளக்குகளையே சரிவரப் பார்க்க முடியாத அளவுக்கு வைக் கப்பட்டுள்ளது. இதனால் விபத்துகள் ஏற் படாதா?

கடந்த 27.5.98 அன்று மதுரையில் பலத்த மழை பெய்ததோடு, காற்றும் வீசியது. அத னால் கோரிப்பாளையத்திலுள்ள மாநக ராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் வைக் கப்பட்டிருந்த விளம்பரப் பலகையொன்று அடியோடு சரிந்து விழுந்ததில் அதன் கீழ் நின்று கொண்டிருந்த மாரி என்கிற லாட்டரி சீட்டு விற்பனையாளர் கொல்லப்பட்டார்.

அவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் என்கிற நிலையில், அந்தக் குடும்பத்துக்கு உதவியாக முதல்வர் தமது நிவாரண நிதியிலிருந்து 50,000 ரூபாய் கொடுக்க வேண்டியதாகி விட்டது. ஆக, விளம்பரப் பலகைகளால் மனிதர்களின் விலை மதிக்க முடியாத உயிருக்கும் ஆபத்து வரக்கூடும் என்பது இதன் மூலம் நிரூபண மாகி விட்டது.

இந்த விளம்பரப் பலகைகளின் சொந் தக்காரர்கள்தான் புதிதாக நடப்படுகின்ற மரக்கன்றுகள், தங்களின் விளம்பரப் பலகை களை மறைத்து விடும் என்கிற எண்ணத்தில் அவற்றை வளரவிடாமல் வெட்டிவிடுகிறார் கள் என்பதை, நாம் முன்பே ஒரு கட்டு ரையில் புகைப்பட ஆதாரத்தோடு வெளி யிட்டிருந்தோம்!

ஆக, இந்த விளம்பரப் பலகைகள் விஷ யத்தில் அரசுக்கு மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. ஆனால் தமிழக அரசு இப் போது திடீரென்று அவசரச் சட்டமொன் றைக் கொண்டு வந்திருக்கிறது. இதன்படி விளம்பரப் பலகைகள் வைப்பதற்கான அனுமதி வழங்கவும் இடைஞ்சலானவற்றை அகற்றவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் கிடைக்கிறது. கூடவே, இதுவரை அனுமதி பெறாமல் வைக்கப்பட்டிருக்கும் ஆயிரக் கணக்கான விளம்பரப் பலகை களுக்கு இன்னும் முப்பது நாட்களுக்குள் முறைப்படி அனுமதி பெற்றுக் கொள்ளலாம் என்றும் சட்டம் சொல்கிறது. இந்த அவசரச் சட்டம் மேலோட்டமாகப் பார்க்கும்போது பொது நலன் கருதிக் கொண்டு வரப்பட் டதுபோல் தோன்றினாலும் உள்ளுக்குள் யாரையோ காப்பாற்றுவதற்காகக் கொண்டு வரப்பட்டதாகத்தான் தெரிகிறது. இந்த அரசுமா அப்படி? ●

— **இளங்கோவன்**



''அப்ளிகேஷன்ல கடைசியாய் சிரிச்ச தேதின்னு போட்டிருக்காங்களே என்னடா அது?''

''வேறென்ன, கல்யாணமான நாளைத்தான் அப்படி கேட்டிருப்பாங்க!''

– சா. அனந்த குமார்

சாவி

ஆகஸ்ட் 20 சுதந்திர தினச் சிறப்பிதழில்

கதைமணி எழுதும்

டணாயக்கன் கோட்டை

இத்துடன் வேங்கடம் எழுதும்


இளமைத் தொடர்

நிபந்தனையுடன் காதலி

ஆரம்பம்



நம்பர்-2



சமீபத்தில் தமது 79-வது பிறந்த நாளைக் கொண்டாடி இருக்கிறார் நாவலர். இவர் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்க இது ஒரு தருணம்.

பட்டுக்கோட்டையில், தபால் இலாகாவில் பணியாற்றிக் கொண்டிருந்த ராஜகோபாலுக்கு, திராவிட இயக்கத்தின் மீது ஆழமான பற்று உண்டு. நான்கு மகன்களில், இரண்டு பேரை மட்டும், (நாராயணசாமி, சீனிவாசன்) தாம் திராவிடர் கழகக் கூட்டங்களுக்குப் போகிற போது அழைத்துக் கொண்டு போவார். ஒருமுறை, பட்டுக்கோட்டை அழகிரி பேசிய கூட்டத்துக்கு, வந்திருந்த மாபெரும் மக்கள் கூட்டத்தைக் காட்டி, "பார்த்தீர்களா? அழகிரியைக் காண, அவர் பேச்சைக் கேட்க அலைமோதும் கூட்டத்தை? நீங்களும் பெரியவர்களானதும், பெரும் பேச்சாளர்களாகி, மக்களைக் கவர வேண்டும்" என்றார் தம் மகன்களிடம். ராஜகோபாலின் மகன் நாராயண சாமிதான், பிற்காலத்தில் தம் பெயரை 'நெடுஞ்செழியன்' என்று மாற்றிக் கொண்டார். அவரது சகோதரர் சீனிவாசன் தான் இரா. செழியன். (ஜனதா).

அப்போது, அரசியல்வாதிகளை உருவாக்கும் பட்டறையாய்த் திகழ்ந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார், நெடுஞ்செழியன். தமிழ் இலக்கிய எம்.ஏ. மாணவர்; சிறந்த பேச்சாளர் என்று மாணவர்கள் மத்தியில் மட்டுமின்றி, பொது மக்களிடையேயும் பிரபலமாக இருந்தார். ஒருமுறை, பல்கலைக் கழகத்தில் நடந்த பட்டிமன்றத்தில் பேசுவதற்காக அண்ணா அழைக்கப்பட்டிருந்தார். அவர் பட்டிமன்றத்தில் பேசும்போது, தமக்குக் கொடுக்கப்பட்ட தலைப்புடன் பேச்சை நிறுத்திக் கொள்ளாமல், மாணவர்களும் திரளாய் திராவிடர் இயக்கத்தில் சேர வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.



வாய்ப்புக்காகக் காத்திருந்த நெடுஞ்செழியனும், அவரது மற்ற சகாக்களான அன்பழகன், கே. ஏ. மதியழகன் போன்றோரும், முழு மூச்சுடன், திராவிடர் இயக்கத்தில் இணைந்தார்கள்.

கல்லூரி நாட்களில், நெடுஞ்செழியன் கருகருவென தாடி வைத்திருப்பார். அவரை தி. இயக்க வட்டாரத்தில் 'இளந்தாடி' நெடுஞ்செழியன் என்று குறிப்பிடுவார்கள்!

அண்ணா, தி.கவை விட்டு விலகி, தி.மு.கவைத் துவக்கியவுடன், அவருடனேயே தி.மு.க.வுக்கு வந்தவர்களுள் நெடுஞ்செழியனும் ஒருவர். இதற்கு அடிப்படையாக, ஒரு சம்பவத்தையும் கூறுவதுண்டு.

1953-ல் கல்லக்குடி போராட்டத்தின் போது, சென்னை ராயபுரத்தில் இருந்த, தி.மு.க. தலைமையகத்தில் அண்ணா, ஈ.வி.கே. சம்பத், மதியழகன், என்.வி. நடராஜன், நெடுஞ்செழியன் ஆகிய ஐவரும் போராட்ட வியூகங்கள் பற்றி கலந்தாலோசித்துக் கொண்டிருந்த சமயம் அங்கே போலீஸ் வந்து, அவர்கள் ஐந்து பேரையும் கைது செய்தது. போராட்டம் சம்பந்தப்பட்ட அந்தக் கைதுக்குரிய முதல் தகவல் அறிக்கையில் (FIR) இந்த ஐவரையும் போலீஸ், 'தி.மு.க.வின் நிறுவன உறுப்பினர்கள்' என்று குறிப்பிட்டது. இதை எல்லா பத்திரிகைகளும் பரபரப்பாய் வெளியிட்டன!

நெடுஞ்செழியன், 'மன்றம்' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராய் இருந்து நடத்தியிருக்கிறார். அதில், அரசியலை விட, ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டார். அப்போதுதான் அண்ணா, நெடுஞ்செழியனை 'நாவலர்' என்று கூறிச் சிறப்பித்தார்.

அண்ணா, தமக்குப் பிறகு, கட்சியை நடத்திச் செல்லத்தக்கவர் நெடுஞ்செழியன் என்று கருதினாலும், வெளிப்படையாய் அதனை அறிவிக்கவில்லை. '57-ல் திருச்சியில், தி.மு.க.வின் இரண்டாவது மாநாடு நடைபெற்றபோது, அண்ணா நாவலருக்கு, "தம்பி வா! தலைமை ஏற்க வா!" என்று அழைப்பு விடுத்தார். அந்த மாநாட்டில்தான், தி.மு. கழகம், தேர்தலில் போட்டியிடுவதா? வேண்டாமா? என்பதை முடிவு செய்ய, மாநாட்டு நுழைவாயிலில், ஆளுயர வோட்டுப் பெட்டி வைத்து, வோட்டெடுப்பு நடத்தியது. தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற மெஜாரிடி தீர்ப்பை, அடுத்த தேர்தலிலேயே செயல்படுத்தக் கழகம் களத்தில் இறங்கியது.

அண்ணா, கலைஞர், அன்பழகன், நெடுஞ்செழியன் உட்படப் பலரும் தேர்தலில் போட்டியிட்டனர். மற்ற பெருந்தலைகள் வெற்றி பெற்று, சட்டசபைக்குச் சென்றாலும், சேலத்தில் போட்டியிட்ட நெடுஞ்செழியன் காங்கிரஸ் கட்சி வேட்பாளரான மாரியப்பனிடம் தோற்றுப் போனார்.

அடுத்து நடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வென்றவர்களில் நெடுஞ்செழியனும் ஒருவர். (தொகுதி : திருவல்லிக்கேணி) 67-ல் தி.மு.க. ஆட்சியைப் பிடித்த போது, அண்ணா அமைச்சரவையில் நெடுஞ்செழியன் நம்பர்-2 இடம்பிடித்தார். கல்வி அமைச்சர் அவர்தான்.

அமைச்சரான பின் நெடுஞ்செழியனிடம் ஒரு மாற்றம் காணப்பட்டது. அதுவரை வேட்டி, சட்டை அணிந்து வந்தவர், பாண்ட், சட்டை அணிய ஆரம்பித்தார்! இது, கட்சியினரிடையே இலேசான பரபரப்பை ஏற்படுத்தியது.

அண்ணாதுரை, சிகிச்சைக்காக அமெரிக்கா போன சமயம், தமிழகத்தின் 'கேர்-டேக்கர்' சி.எம். ஆக இருந்தவர் நெடுஞ்செழியன்தான். (பின்னர், எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போதும், அவர் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்தபோது, நெடுஞ்செழியன் கேர்-டேக்கர் முதலமைச்சராக இருந்தார்.)



ஆனால், அண்ணா மறைவையடுத்து, முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க நடந்த கட்சி எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில், நாவலருக்கும், கலைஞருக்கும் இடையே போட்டி ஏற்பட்டபோது, அதனை நேரடியாகச் சந்திக்காமல் கூட்டத்திலிருந்து வெளியேறி, தாம் தீவிர அரசியலிலிருந்து விலகுவதாகவும், ஆனால் தி.மு.க.விலேயே தொடர்ந்து இருக்கப் போவதாகவும் அறிவித்தார்! அதன் பிறகு இலக்கியக் கூட்டங்களிலும் அரசியல் அல்லாத கூட்டங்களிலுமே அதிகம் உரையாற்றினார்.

கலைஞர் அவரை சமாதானப்படுத்தி, மறுபடியும் தமது



அமைச்சரவையில் அவருக்குப் பழைய பொறுப்பையே அளித்தார். இதனை, நாவலரின் அரசியல் வாழ்வில் ஒரு சறுக்கல் என்று குறிப்பிடுவோரும் உண்டு. ஆனால், அதற்கு முன்னமேயே ஓர் அபார சறுக்கலைச் சந்தித்திருக்கிறார் நாவலர். அதனால் அவரை 'நாரண மங்கலத்து வீரர்' என்று தி.மு.க. வட்டாரத்திலேயே கிண்டலடித்தது உண்டு. அதன் பின்னணி இதுதான் :

தி.மு.க. தமிழகம் முழுவதும் மும்முனைப் போராட்டம் என்ற பெயரில் தீவிரப் போராட்டத்தில் இறங்கியபோது, காங்கிரஸ் அரசு, தி.மு.க.வின் பொதுக் கூட்டங்களுக்குத் தடைவிதித்தது. தடையை மீறி, கைதாகி சிறை செல்வது என்று கட்சியில் முடிவெடுக்கப்பட்டது. திருச்சியை அடுத்து, நாராணமங்கலம் என்ற ஊரில் பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்துக்கு, நாவலர் தலைமையில் ஏற்பாடு நடந்தது. நாவலரும், தம் மனைவி சகிதம் திருச்சி வந்து இறங்கினார். அரசாங்கம், பொதுக் கூட்டத்துக்குத் தடைவிதித்தது. கூட்டத்தில் கலந்து கொண்டு, கைதாகத் தயாராக நாவலரும், மற்ற பேச்சாளர்களும் புறப்பட்டனர். ஆனால் நாவலர், பாதி வழியிலேயே காரைத் திருப்பச் சொல்லி, ஓட்டலுக்குத் திரும்பி விட்டார். மற்ற கட்சிப் பிரமுகர்கள் கைதாகி, சிறை சென்றனர். நாவலர், தம் மனைவியின் ஆலோசனை (கட்டளை என்போரும் உண்டு)யின் பேரில்தான், கைதாவதைத் தவிர்த்து, ஓட்டலுக்குத் திரும்பி விட்டார் என்பார்கள்.

'72 அக்டோபரில், எம்.ஜி.ஆர். பிரச்னையில் கலைஞரும், மாறனும் எம்.ஜி.ஆருடன் சமாதானமாகப் போகும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாலும் நாவலர், மதுரை முத்து போன்றவர்கள் எம்.ஜி.ஆரை உடனடியாய்க் கட்சியை விட்டு விலக்க வேண்டும் என்று கடுமையாகப் பேசினார்கள். அ.தி.மு.க. கொடியில், எம்.ஜி.ஆர். அண்ணாவின் படத்தை இடம்பெறச் செய்தபோது, 'கொடியில் அண்ணாவின் படத்தைப் போட்டு, அவரைக் காற்றிலே பறக்க விடுகிறார்' என்று எம்.ஜி.ஆரைக் கடுமையாக விமர்சித்தவர் நாவலர்.

நாவலரின் அரசியல் வாழ்க்கையின் அடுத்த சரிவு, எமர்ஜென்ஸியை அடுத்து, சர்க்காரியா கமிஷன் போட்டபின் நடந்தது. தி.மு.க.விலிருந்து, பண்ருட்டி, எஸ்.எஸ்.ஆர். போன்றவர்களுடன் விலகி, ம.தி.மு.க. (அதாவது மக்கள் தி.மு.க.) என்ற கட்சியை ஆரம்பித்தார். அதன்பின், எம்.ஜி.ஆர். ஆட்சியைப் பிடித்தபின், தம் கட்சியை அ.தி.மு.க.வுடன் இணைத்து விட்டு, எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் 'நம்பர்-2' ஆனார். அது மட்டுமின்றி, எம்.ஜி.ஆரும், லெனினும்தான் 'புரட்சித் தலைவர்' பட்டத்துக்குத் தகுதியானவர்கள் என்றும் பேசினார்!

'89ல் அ.தி.மு.க.விலிருந்து பிரிந்து, அரங்கநாயகம், திருநாவுக்கரசு, பண்ருட்டியுடன் இணைந்து 'நால்வர் அணி' உருவாக்கியதும் ஜெ. நெடுஞ்செழியனை 'உதிர்ந்த ரோமம்' என்றதும், நாவலர், மயிலை தொகுதியில், சுயேட்சையாகத் தென்னை மரச் சின்னத்தில் போட்டியிட்டு, நகைச்சுவை நடிகர் எஸ். வி. சேகரை விட சுமார் 200 வோட்டுகள் குறைவாக வாங்கிப் படுதோல்வியடைந்ததும், மறுபடி அ.தி.மு.க.வில் சேர்ந்ததும், சமீபத்திய சரித்திரம்.

நாவலரது அரசியல் போக்குப் பற்றிப் பலவிதமான கருத்துகள் இருந்தாலும், அவர் மீது பெரிய ஊழல் குற்றச்சாட்டு ஏதும் கூறப்பட்டதில்லை.

மயிலாடுதுறை அருகிலுள்ள வடகரையில் உள்ள பள்ளி நிர்வாகிகள், திருமதி. நெடுஞ்செழியனுக்கு லஞ்சமாக வைர நெக்லஸ் கொடுத்ததாக எம்.ஜி.ஆர். கூறிய புகாரையும், சர்க்காரியா கமிஷன் தள்ளுபடி செய்து விட்டது.

நாவலரின், லேட்டஸ்ட் சரிவு என்று அரசியல் விமர்சகர்களால் கூறப்படும் விஷயம், அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணிதான்! பொருந்தாத கூட்டணிக்கு ஜெ. ஏற்பாடு செய்த போது, பின்விளைவுகளை யோசிக்காமல், அறிவுறுத்தாமல் இருந்ததும் தொடர்ந்து ஜெயலலிதாவின் அடாவடி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருந்து வருவதும் நீண்ட கால அரசியல் அனுபவம் பெற்ற ஒருவரின் இயல்பாக இருப்பது கண்டு வியப்படையாத அரசியல் விமர்சகர்கள் இல்லை. ●

— கௌதம் ராம்





நெருங்கிய உறவுக்காரர்கள் மொய்த்திருந்தார்கள். எதையாவது பேச வேண்டும். அல்லது பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். சும்மா உட்கார்ந்திருக்க யாராலும் முடிவதில்லை.

திருமூர்த்தியின் அப்பா இறந்து பதினைந்து தினங்கள் தினம் தினம் இறந்து விட்டன. இன்று காரியம். காலை ஒன்பது மணிக்கே கூடை எடுத்துக் கொண்டு சுடுகாட்டுக்குப் போய், சடங்குகள் செய்து, கடன்! கழிந்தால் போதுமென்ற கணக்கில் முடித்தாயிற்று.

வீடு திரும்பி, பந்தி முடிந்து, தாம்பூலம் தரித்து, வராண்டாவில் பாய் விரித்து உட்கார்ந்து விட்டார்கள். சாக்கடை தேங்குவதிலிருந்து, சட்டமும் சர்க்காரும் தூங்குவது வரை பேசிக் கொண்டிருக்கிறார்கள். பேச்சு திருமூர்த்திக்கு எரிச்சலைத்தான் கூட்டிற்று. அப்பாவின் ஆத்மா சாந்தியடைய இன்னும் கொஞ்ச நேரம் சடங்கு செய்ய விட்டிருக்கலாம் என்றுதான் அவனுக்குத் தோன்றிற்று. வாத்தியாரை அவசரப்படுத்தி சுருக்க முடித்து விட்டார்கள்.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து கடைசியாய் திருமூர்த்தியைக் கடிக்க வந்தார்கள்.

"மூர்த்தி நீ எவ்ளோ படிச்சிருக்கே...?" கேட்டுக் கொண்டே எச்சில் துப்ப ஜன்னலுக்குப் போனார் திருவண்ணாமலை மாமா.

அவன் பதில் சொல்லவில்லை. வியர்த்தது. பதில் சொல்வதற்கு அவனுக்குள்ளிருந்து வார்த்தைகள் எதுவும் முளை விடவில்லை.

திருவண்ணாமலை மாமா எச்சில் துப்பி விட்டுத் திரும்பினார்.

"டென்த்!" திருமூர்த்தியின் மனைவி சாவித்ரிதான் சொன்னாள்.

"பாஸா, பெயிலா?"

சாவித்ரியும் தலைகவிழ்ந்து கொண்டாள்.


"பெயிலா?"

யாரும் பதில் சொல்லவில்லை.

மௌனமான சூழ்நிலைதான் பெரிய அவமானம் - பதில் சொல்வதால் உண்டாகும் அவமானத்தை விட...

நாராயணி கண்ணகி

இல்லறத் துறவி



"ஆமா, பெயிலு" திருமூர்த்தியே சொன்னா.ம

கழுத்தில் மாலை அணிவித்து, பலியிடுவதற்காக மத்தியில் நிறுத்தப்படும் ஆடு நினைவுக்கு வந்தது.

"எத்தனை சப்ஜெக்ட்?"

"ரெண்டு" சொல்லிவிட்டு எழுந்து நின்றான்.

"உட்காரு மாப்ள. உன் சங்கதிதானே பேசறோம்... இந்தக் காலத்துல யார்னா இப்படி இருப்பாங்களா? ரெண்டே ரெண்டு சப்ஜெக்ட் எழுதி பாஸ் பண்ண முடியாதா? பத்து, பதினைஞ்சி வருஷமா என்ன பண்ணிட்டிருந்தே...?" – திருமூர்த்தியின் செவிக்கு மட்டுமல்லாமல், மொத்த பேரின் செவிகளையும் தப்பாமல் துளைக்க வேண்டும் என்பதற்காக ஒலி பெருக்கலுடன் கேட்டார் திருவண்ணாமலை மாமா.

மூச்சை முட்டிக் கொண்டு ஆத்திரம் விரிந்தது. 'என்ன பண்ணிட்டிருந்தேனா... என் பொண்டாட்டி மூணு பெத்திருக்கா. அதுக்கு நான்தான் காரணம்.' இப்படி எதிர்

அமரர் கல்கி
நூற்றாண்டு
விழா சிறப்புச்
சிறுகதைப் போட்டியில்
ரூ. 10,000
முதல்
பரிசு பெறும் கதை

அம்பாய் பதில் சொல்ல வேண்டும் போல் கோபமாய் உருவெடுதத வார்த்தைகளைத் தனக்குள்ளேயே சிறை வைததான். சுத்தமாய் மழித்தெடுத்த வாயைச் சுற்றிய பகுதிகளைத் தடவிக் கொண்டான்.

"பொட்டப் பொண்ணு பி.ஏ. வரைக்கும் படிச்சிருக்கா... நீயும் இருக்கியே..."

சமையலறை வாசற்படிக்குள் நின்றிருந்த சரஸ்வதி வெட்கம் காட்டினாள். திருமூர்த்தியின் தங்கை. இப்போது அவள் காட்டிய வெட்கம் கொடுமை மிகுந்தது. அண்ணனைத் தரம் தாழ்த்திப் பேசுவதற்குத் தான் பயன்படுகிறோம் என்கிற வேதனையை வெளியே காட்ட முடியாத வெட்கம். தலையை மறைத்துக் கொண்டாள்.

"உட்காரு மாப்ள!"

திருமூர்த்தி உட்காரவில்லை. நின்றபடி சுவர் மேல் சாய்ந்து கொண்டான்.

"எண்ணி மூணு மாசத்துல உனக்கு வேலை வாங்கித் தர்றேன். அது என்னோட பொறுப்பு. என்ன மனுஷன்டா நீ! பெயிலுன்றியே... உங்கப்பனாட்டம் கேங்கி வேலையிலேயே சாவியா? பாப்பா மாதிரி டிகிரி முடிக்கலைன்னு கேக்கலை - டென்த் பாஸ் பண்ணி வைச்சிருக்கக் கூடாதா! பாஸ் பண்ணியிருந்தா டி.சி.யோ, ட்ரெயின் க்ளார்க்காவோ அழுக்குப் படாத வேலையில உட்கார வைச்சிருப்பேன். இப்பவும் குடி முழுகல. ரெண்டு சப்ஜெக்ட் எழுதி பாஸ் பண்ணிடு."

எதுவும் பதில் சொல்லாமல் வெளியே போனான் திருமூர்த்தி.

"என்ன நிமிரா போறான் பார்த்தியா? இவன் நல்லா இருக்கணும்னு நான் மாரடிக்கிறேன்." கோபம் காட்டிக் கொண்டே இன்னொரு வெற்றிலை எடுத்து காம்பு கிள்ளினார்.

"அவர் அப்படித்தான் பெரிப்பா, நீ கோபிச்சுக்காதே. நான் சொல்லி எழுத வைக்கிறேன்" - சாவித்திரி சொன்னாள்.

"என்னவோ செய்! சரஸ்வதி உங்கண்ணனுக்கு வீட்ல கொஞ்சம் சொல்லித் தா!"

ஜன்னலுக்குள்ளிருந்த சரஸ்வதி தலைநிமிரவில்லை.

பணிக்காலத்தில் பணியாளர் இறந்து விட்டால், இறந்தவரின் வாரி



ஜோதி கிருஷ்ணா, தயாரிப்பாளர் ஏ.எம். ரத்னத்தின் வாரிசு. பிளஸ் டூ முடித்திருக்கும் மீசை முளைக்காத இந்த வாலிபர் எழுதிய கதைதான் 'நட்புக்காக'. நாடாளுமன்றத் தேர்தலில் சந்தித்த தோல்வியால் துவண்டு போன சரத்துக்கு சத்தான டானிக்காக 'நட்புக்காக' படம் அமைந்ததில் பெரும் பூரிப்பு. அப்பாவிற்கு வசூலையும், சரத்திற்கு உற்சாகத்தையும் கொடுத்திருக்கும் ஜோதி கிருஷ்ணா என்ன சொல்கிறார்?

"ஆபீஸ்ல டிஸ்கஷன் நடந்துக்கிட்டிருந்தப்ப எனக்கொரு 'நாட்' தோணுச்சு. சிம்பிள் மேட்டர். முதலாளி, தொழிலாளி. அதை வச்சு ஒரு லைன் சொன்னேன். எல்லோருக்கும் பிடிச்சுப் போச்சு" என்கிற ஜோதி கிருஷ்ணாவிற்கு கிரிக்கெட் என்றால் உயிர். 'நட்புக்காக' சக்ஸஸ் என்றதும் ஜோதிகிருஷ்ணாவிடம் கதைகள் கேட்கப் பலர் தயார். ஆனால், ஜோதி கிருஷ்ணா தயாராயில்லை. ப்ளஸ் டூ முடித்தாயிற்று. கல்லூரிக்குப் போகலாமா? 'நட்புக்காக' ஓடியாயிற்று. கதை சொல்லப் போகலாமா? நடிக்கச் சொல்கிறார்கள். நடிக்கலாமா? டிசைடிங் அத்தாரிட்டியாக அப்பாவை கை காட்டி விட்டு, தானுண்டு தன் கிரிக்கெட் உண்டு என்று அலைந்து கொண்டிருக்கிறார் ஜோதி கிருஷ்ணா.

— மஹந்த்

கக்கு வேலை தருவது கருணை அடிப்படையிலான அரசாங்கத் திட்டம். அப்பா வேலை செய்த இரயில்வேயிலும் அந்தத் திட்டம் உண்டு. திருவண்ணாமலை மாமா வேலை வழங்குகிற மத்திய அரசாங்கம் அவர்தான் என்கிற மாதிரி பேசினார். அப்பா இறந்ததால் கிடைக்கும் செட்டில்மெண்ட் பணம், அம்மாவுக்கு இனி மாதா மாதம் வரப் போகிற பென்ஷன், வேலை கிடைத்ததும் திருமூர்த்திக்கு கிடைக்கும் மாதச் சம்பளம் எல்லாம் கணக்குப் போட்டார்கள்.

அப்பா இறந்து, இப்போது இல்லாது போன பொருளாதார இடத்தை நிரப்புவதற்குத் திருமூர்த்தியை இழுத்தார்கள். அவன் பெரிய வஸ்தாதாக வேண்டும் என்று அப்பா உயிர் வாழ்ந்த காலமெல்லாம் கண்ட கனவை நினைவாக்குவதற்கான மூலிகையை அப்பாவின் சாம்பலிலிருந்தே பிடுங்கி எடுத்தார்கள். திருமூர்த்தியின் வாய்க்குள் அடைத்தார்கள்.

திருமூர்த்தி வாயை இறுக மூடினான்.

ஊரும் உறவும் தலை உயர்த்தித்தான் பார்க்க வேண்டும். ஆறடிக்கும் மேலான உயரம். திடகாத்திரம். காது வரைக்கும் நீண்டு சுருண்டிருக்கும் மீசை - இவ்வளவும் இருந்தால் மட்டும் மற்றவர்கள் பார்வைக்கு மனுஷனாகி விட முடியாது. பணம் சம்பாதிக்கத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். பணம் மனுஷனுக்கான குறியீடாக எப்போதோ ஆகிவிட்டது.

திருமூர்த்திக்கு எட்டு வயது. படித்துக் கொண்டிருந்தான்.

மதிப்பெண் அட்டை காட்டியபோது, "தண்டக் கருமண்டா நீ. எல்லாப் பாடத்துலயும் பெயிலாகி வந்து நிக்கறே... எருமை மேய்க்கத்தான் லாயக்கு" என்று திட்டி, கையெழுத்துப் போட மறுத்து புளியஞ்சிமிறால் முதுகில் போட்டு அனுப்பி இருக்கிறார் அப்பா.

பள்ளிக்கூடம் போனால் ஆசிரியர் போடுவதற்கு முதுகு தாங்காதென்று, புத்தகங்களைத் தண்ணீர் போகாத ஏரிக் கால்வாயில் ஒளித்து விட்டு முனிசாமி பையனோடு எருமைகள் மேய்த்திருக்கிறான்.

ஒன்பதாம் வகுப்பை மட்டும் தொடர்ந்து மூன்று வருடங்களாக அனுபவித்து விட்டு பத்தாம் வகுப்புக்கு வந்தான். பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை.

"தடிமாடு. இனிமே படிக்கிறதுக்கு லாயக் கில்லை. லாரி கம்பெனில கிளீனரா சேத்துடறேன்."

தலையாட்டினான்.

"மட சாம்பிராணியாட்டம் மொத்த பாடத்துலயும் பெயிலுன்னு சொல்லாத! மதிக்க மாட்டாங்க. யார் கேட்டாலும்

மங்கையர் மலர்

ஆகஸ்ட் '98

◆ தூக்கம் பிரச்னையா, தூக்கமே, பிரச்னையா?

◆ ஆண்களுக்காக ஒரு வார்த்தை!



◆ மீண்டும் இணையலாம், தப்பில்லை!

◆ ஆன்மீக ஆடி

◆ குழந்தைப் பருவக் கோளாறுகள்

சந்தோஷ மூடில் இருந்தார் ராஜ்கிரண். இப்படியொரு தோல்வியை அவர் எதிர்பார்க்கவில்லைதான். ஆனாலும் தளர்ந்து விடவில்லை. போராடிப் பெற்ற வாழ்க்கை கண்ணாமூச்சி காட்டி விட்டுப் போனதில் சிறு கலக்கம்தான். "இதையெல்லாம் 'தலைமுறை' ஜெயிச்சுக் காட்டும். அதியமான் என்னை நம்பி இப்படி ஒரு படம் எடுக்குறதுல சந்தோஷப்படறேன். அதியமான் ஹீரோவா நான் ஹீரோவாங்கறது முக்கியமில்லை; ஆனா, கதைதான் அதைவிட முக்கியம்: அது இந்தப் படத்துல இருக்கு. 'தலைமுறை' மூலம் மீண்டும் வருவேன்ங்கறதை விட மீண்டு வருவேன்ங்றதுதான் உண்மை. எனக்கு ஜோடியா ரேவதி. அப்பப்பா! என்ன பவுர்புல் ஆர்ட்டிஸ்ட்! அவங்க கூட நடிச்சதை இப்ப நினைச்சாலும் சிலிர்ப்பா



• 'தலைமுறை' : ராஜ்கிரண், ரேவதி

இருக்கு" என்றார் ராஜ்கிரண்.

கடலில் மூழ்கியவரைக் கரையேத்தினது நான்தான் என்று இவர் அறிமுகப்படுத்திய வடிவேலு ஊரெல்லாம் சொல்லிக் கொண்டு திரிகிறாரே?

"ஏதோ உதவி பண்ணினது உண்மைதான். ஆனா, இப்படி தம்பட்டமடிச்சு ஊரெல்லாம் சொல்லுவான்னு தெரியாமப் போச்சு. தெரிஞ்சிருந்தா அவன்கிட்ட நயாபைசா வாங்கியிருக்க மாட்டேன். எல்லாம் நேரந்தான்" – இழந்ததைப் பற்றி மறந்து விட்டு இருக்கிற நம்பிக்கையில் இன்னும் தெம்போடுதான் இருக்கிறார் ராஜ்கிரண்.

— மஹந்த்

கணக்கு, இங்கிலீஷ் ரெண்டுலதான் போச்சுன்னு சொல்லு. அப்பத்தான் என் மரியாதை தேறும்."

தலையாட்டினான்.

அப்பா சொல்வதையெல்லாம் கேட்டான். அவர் சொல்வதெல்லாம் நல்லதற்கா? கெட்டதற்கா? என்று அவனால் கடைசி வரை புரிந்து கொள்ள முடியவில்லை. அப்பா சொல்லும் விஷயங்கள் என்றில்லை. அதற்குப் பின்னால் வாழ்க்கையில் யார் சொன்னதும் சந்தேகத்திற்கு உட்பட்டதாகவே இருந்தது. 'நல்லதற்குச் சொல்கிறார்களா, கெட்டதற்குச் சொல்கிறார்களா?'

பதிமூன்று வருடங்களுக்கு முன்பு அப்பா சொல்லிக் கொடுத்த பொய்யை இப்போதும் சொன்னான். 'கணக்குலயும், இங்கிலீஷ்லயும்தான் போச்சு.' அப்பா செத்துப் போனாலும் அவரின் மரியாதை சாகக் கூடாது. மொத்த சப்ஜெக்ட்டும் பெயிலென்று சொல்லக் கூடாது.

"வருஷமெல்லாம் படிச்சு ஒரு பாடமும் பாஸ் பண்ணலை. தனியா எழுதி பாஸ் பண்ணப் போறியா? வராதத வடம் கட்டி இழுக்காத. விட்டுடு" அப்பா சொன்னதும் லபக்கென்று போட்டுடைத்த பாடம். இப்போது நினைத்தாலும் பயம் கிளப்பிற்று.

பேயென நினைத்திருந்த பாடங்களிலிருந்து ஒருவழியாக விடுவித்த அப்பா. இன்னொரு வழியாக இன்னொரு பேயை அவனுக்குக் கட்டி வைத்தார். கல்யாணம் செய்து வைத்தார். அப்பா சொன்ன எதைத்தான் அவன் மறுத்திருக்கிறான்...?

"பொண்டாட்டி கட்டினாத்தான் இந்த பயக்குப் பொறுப்பு வரும்."

பொறுப்பு கூடினது அப்பாவுக்குத்தான். திருமூர்த்திக்கு மட்டுமில்லாமல் அவன் மனைவிக்கும், குழந்தைகளுக்கும் அப்பாவேதான் சம்பாதித்துப் போட்டார்.

"என் தலையெழுத்து! தடிக் கழுதையைப் பெத்ததுக்கு நான் நல்லாப் படணும்."

பெற்றது தவறென்று அப்பா எண்ணிக் கொண்டு, தவறுக்குத் தண்டனை என்று அப்பாவே குடும்பத்தைக் காப்பாற்றினார்.

திருமூர்த்தி லாரி டிரைவரானான். தொடர்ந்து இரண்டு தினங்கள் வீடு தங்கினதில்லை. தேங்காயோடு ஏற்றிக் கொண்டு வடநாட்டுப் பக்கம் போனானென்றால் திரும்புவதற்குப் பதினைந்து தினங்களாகிவிடும். ஒரு வாரம் ரெஸ்ட் எடுக்கலாம் என்று வீட்டுக்கு வருவான். வீட்டு இம்சை தாங்காமல் மறுநாளே வனவாசம் கிளம்பி விடுவான். பௌர்ணமி, அமாவாசை மாதிரி மாசம் ரெண்டு நாள் வீடு அவனைப் பார்க்கும்.

அப்பாவும் மகனுமாக, அம்மாவும் மகனுமாக, மனைவியும் கணவனுமாக எப்போதும் அவனுக்கு வாய்த்ததில்லை. எல்லோருமே எதிரியும் எதிரியும்தான்.

இரவு மீண்டும் சம்பந்தம் கலக்கும் சடங்கு. மாமனார் வீட்டிலிருந்து வந்த புது வேட்டியை மகாராஜா

(தொடர்ச்சி 76-ம் பக்கம்)

பொன்னியின் செல்வன்



நான்காம் அத்தியாயம்

நள்ளிரவில்

இரவு போஜனம் ஆன பிறகு வந்தியத்தேவன் கலங்கரை விளக்கின் தலைவரைத் தனிப்படச் சந்தித்து இலங்கைக்குத் தான் அவசரமாகப் போக வேண்டும் என்பதைத் தெரிவித்தான். தியாக விடங்கக்கரையர் என்னும் பெயருடைய அப் பெரியவர் தமது வருத்தத்தைத் தெரிவித்தார்.

"இந்தக் கரையோரத்தில் எத்தனையோ பெரிய படகுகளும் சிறிய படகுகளும் ஒருகாலத்தில் இருந்தன. அவையெல்லாம் இப்போது சேதுக்கரைக்குப் போய் விட்டன. இலங்கையில் உள்ள நமது சைன்யத்தின் உதவிக்காகத் தான் போயிருக்கின்றன. எனக்குச் சொந்தமாக இரண்டு படகுகள் உண்டு. அவற்றில் ஒன்றில் நேற்று வந்த இரண்டு மனிதர்களை ஏற்றிக் கொண்டு என மகன் போயிருக்கிறான். அவன் எப்போது திரும்பி வருவான் என்று தெரியாது. என்ன செய்யட்டும்?" என்றார்.

"அந்த மனிதர்கள் யார்? அவர்கள் ஒருமாதிரி ஆட்கள் என்று தங்கள் குமாரி கூறினாளே?"

"ஆமாம்; அவர்களைக் கண்டால் எனக்கும் பிடிக்கவில்லைதான். அவர்கள் யார் என்பதும் தெரியவில்லை; எதற்காகப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. பழுவேட்டரையரின் பனை இலச்சினை அவர்களிடம் இருந்தது. அப்படியும் நான் என் மகனைப் போகச் சொல்லியிருக்க மாட்டேன். ஆனால் என் மருமகள் மிகப் பணத்தாசை பிடித்தவள். பை நிறையப் பணம் கொடுப்பதாக அவர்கள் சொன்னதைக் கேட்டு விட்டுப் புருஷன் போக வேண்டும் என்று வற்புறுத்தினாள்...."



கல்கி கலெக்ஷன்

அமரர் கல்கி

"இது என்ன ஐயா, வேடிக்கை? வீட்டில் உலக அநுபவம் இல்லாத ஒரு சிறு பெண் சொன்னால், அதைத் தான் உங்கள் மகன் கேட்க வேண்டுமா?" என்றான் வந்தியத் தேவன். பிறகு சிறிது தயக்கத்துடன், "மன்னித்துக் கொள்ளுங்கள். அது தங்கள் குடும்ப விஷயம்!" என்றான்.

"அப்பனே! நீ கேட்டதில் தவறு ஒன்றும் இல்லை. என் குடும்பத்திற்குச் சாபக்கேடு ஒன்று உண்டு. என் மகன்..." என்று தயங்கினார்.

வந்தியத்தேவனுக்கு அப்போது சேந்தன் அமுதன் இக் குடும்பத்தைப் பற்றிக் கூறியது நினைவு வந்தது.

"தங்கள் மகனால் பேச முடியாதா?" என்றான்.

"ஆம்; உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றார் பெரியவர்.

சேந்தன் அமுதனையும் அவன் தாயாரையும் அவர்கள் வீட்டில் தான் தங்கியிருந்ததையும் பற்றி வந்தியத்தேவன் அவரிடம் கூறினான்.

"ஆகா! அந்த ஆள் நீதானா? உன்னைப் பற்றிச் செய்தி இங்கே முன்னமே வந்து விட்டது. உன்னை நாடெங்கும் தேடுகிறார்களாமே!"

"இருக்கலாம்; அதைப் பற்றி எனக்குத் தெரியாது."

"நீ ஏன் இலங்கைக்கு அவசரமாகப் போக விரும்புகிறாய் என்று இப்போது எனக்குத் தெரிகிறது."

"பெரியவரே! தாங்கள் நினைப்பது சரியல்ல. என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டும் நான் இலங்கைக்குப் போகவில்லை. அங்கேயுள்ள ஒருவருக்கு மிக முக்கியமான ஓலை ஒன்று கொண்டு போகிறேன். தாங்கள் வேண்டுமானால் அதைப் பார்க்கலாம்."

"தேவையில்லை. இளையபிராட்டி உன்னைப் பற்றி எழுதியிருப்பதே எனக்குப் போதும். ஆனால் இச்சமயம் நீ கேட்கும் உதவி என்னால் செய்ய முடியவில்லையே!"

"இன்னொரு படகு இருப்பதாகச் சொன்னீர்களே?"

"படகு இருக்கிறது. தள்ளுவதற்கு ஆள் இல்லை. நீயும் உன்னுடைய சிநேகிதனும் தள்ளிக் கொண்டு போவதாயிருந்தால் தருகிறேன்..."

"எங்கள் இருவருக்கும் படகு ஓட்டத் தெரியாது. எனக்குத் தண்ணீர் என்றாலே கொஞ்சம் பயம். அதிலும் கடல் என்றால்..."

"படகு ஓட்டத் தெரிந்தாலும் அநுபவம் இல்லாதவர்கள் கடலில் படகு ஓட்ட முடியாது. கடலில் கொஞ்ச தூரம் போய் விட்டால் கரை மறைந்து விடும். அப்புறம் திசை தெரியாமல் திண்டாட வேண்டி வரும்."

"என்னுடன் வந்தவனை நான் அழைத்துப் போவதற்கும் இல்லை. அவனை மூலிகை சேகரிப்பதற்காக இங்கே விட்டுப் போக வேண்டும். ஏதாவது ஒரு வழி சொல்லி நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்."

"ஒரு வழி இருக்கிறது. அது எளிதில் நடக்கக்கூடியதன்று. நீயும் முயற்சி செய்து பார்! அதிர்ஷ்டம் உன் பக்கம் இருந்தால்..."

"நான் என்ன செய்ய வேண்டும், பெரியவரே! சொன்னால் கட்டாயம் செய்கிறேன்" என்றான் வந்தியத்தேவன்.

"இந்தப் பகுதியிலேயே பூங்குழலியைப் போல் சாமர்த்தியமாகப் படகு தள்ளத் தெரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை. இலங்கைக்கு எத்தனையோ தடவை போய் வந்திருக்கிறாள். அவளிடம் நான் சொல்லுகிறேன்; நீயும் கேட்டுப் பார்!"

"இப்போதே கூப்பிடுங்களேன்; கேட்டுப் பார்க்கலாம்."


"வேண்டாம்; மிக்க பிடிவாதக்காரி. இப்போது உடனே கேட்டு 'முடியாது' என்று சொல்லி விட்டால், அப்புறம் அவளுடைய மனத்தை மாற்ற முடியாது. நாளைக்கு நல்ல சமயம் நோக்கி அவளிடம் நான் சொல்லுகிறேன். நீயும் தனியே பார்த்துக் கேள்!"

இவ்விதம் தியாக விடங்கக் கரையர் கூறிவிட்டுக் கலங்கரை விளக்கை நோக்கிச் சென்றார்.

அவருடைய வீட்டுத் திண்ணையில் வந்தியத்தேவன் படுத்தான். அவனுடன் வந்த வைத்தியர் மகன் முன்னமே தூங்கிப் போய் விட்டான். வந்தியத்தேவனுக்கும் நீண்ட பிரயாணம் செய்த களைப்பினால் தூக்கம் கண்ணைச் சுற்றிக் கொண்டு வந்தது. விரைவில் தூங்கிப் போனான்.

திடீரென்று தூக்கம் கலைந்தது. கதவு திறக்கும் ஓசை கேட்டது. களைத்து மூடியிருந்த கண்ணிமைகளைக்

கஷ்டப்பட்டு வந்தியத்தேவன் திறந்து பார்த்தான். ஓர் உருவம் வீட்டிற்குள்ளேயிருந்து வெளியேறிச் சென்றது தெரிந்தது. மேலும் கவனமாகப் பார்த்தான். அது ஒரு பெண்ணின் உருவம் என்று கண்டான். கலங்கரை விளக்கின் வெளிச்சம் அந்த உருவத்தின் மேல் விழுந்தது. ஆ! அவள் பூங்குழலிதான்! சந்தேகமில்லை.



அவள் என்னமோ நம்மிடம் சொன்னாளே? "நடுநிசியில் என்னைத் தொடர்ந்து வா! என் காதலர்களைக் காட்டுகிறேன்!" என்றாள். அது ஏதோ விளையாட்டுப் பேச்சு என்றல்லவா அப்போது நினைத்தோம்? இப்போது இவள் உண்மையிலேயே நள்ளிரவில் எழுந்து போகிறாளே? எங்கே போகிறாள்? காதலனையோ, காதலர்களையோ பார்க்கப் போவதாயிருந்தால் அப்படி நம்மிடம் சொல்லுவாளா? 'பின்தொடர்ந்து வந்தால், காட்டுகிறேன்' என்பாளா? இதில் ஏதோ மர்மமான பொருள் இருக்க வேண்டும்! அல்லது ஒருவேளை— எப்படியிருந்தாலும் பின்தொடர்ந்து போய் ஏன் பார்க்கக் கூடாது? நாளைக்கு இவளிடம் நயமாகப் பேசி இலங்கைக்குப் படகு தள்ளிக் கொண்டு வரச் சம்மதிக்கப் பண்ண வேண்டும். அதற்கு இப்போது இவளைத் தொடர்ந்து போவது உதவியாயிருக்கலாம். ஏதாவது இவளுக்கு அபாயம் வரக்கூடும்! அதிலிருந்து அவளைக் காப்பாற்றினால் நாளைக்கு நாம் கேட்பதற்கு இணங்கக்கூடும் அல்லவா?

வந்தியத்தேவன் சப்தம் செய்யாமல் எழுந்தான். பூங்குழலி போகும் வழியைப் பிடித்துக் கொண்டே போனான். சாயங்காலம் சேற்றுப் பள்ளத்தில் விழுந்த போது அடைந்த அநுபவம் அவனுக்கு நன்றாய் ஞாபகம் இருந்தது. அம்மாதிரி மறுபடியும் நேர்வதை அவன் விரும்பவில்லை. ஆகையால், பூங்குழலியை அவன் பார்வையிலிருந்து தவற விட்டு விடக் கூடாது.

கலங்கரை விளக்கிலிருந்து கொஞ்ச தூரம் வரை வெட்ட வெளியாக இருந்தது. ஆகையால் பூங்குழலியின் உருவமும் தெரிந்து கொண்டிருந்தது. அவள் போன வழியே போவதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. அவள் அருகில் போய்ப் பிடித்து விட வேண்டும் என்று எண்ணி விரைவாக நடந்தான். ஆனால் அது சாத்தியப்படவில்லை. இவன் வேகமாய் நடக்க நடக்க, அவளுடைய நடை வேகமும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இவன் பின்தொடர்ந்து வருவதை அவள் கவனித்ததாகவே தெரியவில்லை.

திறந்தவெளியைக் கடந்ததும் காடு அடர்ந்த மேட்டுப்பாங்கான பூமி வந்தது. நேரே அதன் பேரில் ஏறாமல் பூங்குழலி அந்த மேட்டைச் சுற்றிக் கொண்டே போனாள். மேடும் காடும் முடிந்த முனை



வந்தது. அந்த முனையை வளைத்துக் கொண்டு சென்றாள். வந்தியத்தேவனும் விரைந்து சென்று அந்த முனை திரும்பியதும் சற்றுத் தூரத்தில் அவள் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தான். "நல்ல வேளை!" என்று தைரியம் கொண்டான். ஆனால் அடுத்த கணத்தில் திடீரென்று அவளைக் காணவில்லை!

எப்படித் திடீரென்று மறைந்திருப்பாள்? இது என்ன மாயமா, மந்திரமா? அங்கே ஏதாவது பள்ளம் இருந்திருக்குமோ? ஓட்டமும் நடையுமாகப் போய்ச் சுமாராகப் பூங்குழலி எங்கே நின்று மறைந்தாள் என்று தோன்றியதோ, அந்த இடத்துக்கு வந்தான். அங்கே நின்று நாலா பக்கமும் பார்த்தான். மூன்று பக்கங்களில் அவள் போயிருக்க முடியாது. அவ்விடத்தில் காலை ஜாக்கிரதையாக ஊன்றி வைத்துப் பார்த்துச் சேறு கிடையாது என்பதையும் நிச்சயப்படுத்திக் கொண்டான். ஆகையால், மேட்டின் மேல் ஏறிக் காட்டுக்குள்ளேதான் போயிருக்க வேண்டும்.

இன்னும் கொஞ்சம் உற்றுப் பார்த்ததில், குத்துச் செடிகள் அடர்ந்த அந்த மேட்டில் ஏறுவதற்கு ஒற்றையடிப் பாதை ஒன்று இருப்பது தெரிய வந்தது. வந்தியத்தேவன் அதில் ஏறினான். ஏறும்போது திக் திக் என்று அடித்துக் கொண்டது. அங்கே கலங்கரை விளக்கின் மங்கிய வெளிச்சமும் வரவில்லை. மாலைப் பிறை முன்னமேயே கடலில் மூழ்கி மறைந்து விட்டது. மினுமினுத்த நட்சத்திரங்களின் வெளிச்சத்திலே வழி கண்டு பிடித்துப் போக வேண்டியிருந்தது. அந்த வழியையும் கொஞ்ச தூரத்துக்கு அப்பால் காணவில்லை. குத்துச் செடிகளும் குட்டை மரங்களும் பயங்கர வடிவங்களைப் பெற்றன. அவற்றின் நிழல்கள் கரிய பேய்களாக மாறின. செடிகளின் இலைகள் ஆடிய போது நிழல்களும் அசைந்தன. ஒவ்வொரு அசைவும் வந்தியத்தேவனுடைய நெஞ்சை அசைத்தது. அந்தக் கரிய இருளிலும் நிழலிலும் எங்கே என்ன அபாயம் காத்திருக்கிறதென்று யார் கண்டது? விஷ ஜந்துக்கள், கொடிய விலங்குகள் பதுங்கியிருந்து பாயலாம். அபாயம் மேலிருந்து வரலாம்; பக்கங்களிலிருந்தும் வரலாம்; பின்னாலிருந்தும் வரலாம். அடடா! இது என்ன இங்கே வந்து அகப்பட்டுக் கொண்டோம்? கையில் வேலைக் கூட எடுத்து வரவில்லையே!

அது என்ன சலசலப்புச் சத்தம்? அந்த மரத்தின் மேல் தெரியும் அந்தக் கரிய உருவம் என்ன? அந்தப் புதரின் இருளில் இரண்டு சிறிய ஒளிப் பொட்டுக்கள் மின்னுகின்றனவே, அவை என்னவாயிருக்கும்?

வந்தியத்தேவனுடைய கால்கள் அவனை அறியாமல் நடுங்கின. சரி! சரி! இங்கே என்ன நமக்கு வேலை? எதற்காக இங்கே வந்தோம்? - என்ன அறிவீனம்! உடனே இறங்கிப் போய் விட வேண்டியதுதான்!

இறங்கலாம் என்று எண்ணித் திரும்ப யத்தனித்த தருணத்தில் ஒரு குரல் கேட்டது. நெஞ்சைப் பிளக்கும் குரல்; பெண்ணின் குரல். ஒரு விம்மல் சத்தம். பிறகு இந்தப் பாடல் :

"அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக்கடல்தான் பொங்குவதேன்?
நிலமகளும் துயிலுகையில்
நெஞ்சகந்தான் விம்முவதேன்...?"

வந்தியத்தேவன் அம்மேட்டிலிருந்து கீழே இறங்கிச் செல்லும் யோசனையை விட்டு விட்டான். குரல் வந்த இடம் நோக்கி மேலே ஏறினான். விரைவில் மேட்டின் உச்சி தெரிந்தது. அங்கே அவள் நின்று கொண்டிருந்தாள். பூங்குழலிதான். பாடியது அவள்தான். வானத்தில் சுடர் விட்ட நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டு பாடினாள். அந்த விண்மீன்களையே அவளுடைய பாட்டைக் கேட்கும் ரஸிக மகா சபையாக நினைத்துக் கொண்டு பாடினாள் போலும்! நட்சத்திரங்களும் அந்த சோக கீதத்தைக் கேட்டு உடல் சிலிர்த்தன. நட்சத்திரங்களில் ஒன்று தூமகேது. அதிலிருந்து கிளம்பிய கதிரின் கற்றை நீண்ட தூரம் விசிறி போல் விரிந்து படர்ந்திருந்தது. மேட்டின் உச்சியில் அப் பெண்ணின் நிழல் வடிவமும், அவளுடைய குரலும் கீதமும், வானத்தில் தூமகேதுவும் சேர்ந்து வந்தியத்தேவனைத் தன் வயமிழக்கச் செய்தன. அவளுடைய கால்



கள் அவனை உச்சி மேட்டில் கொண்டு போய்ச் சேர்த்தன.

பூங்குழலிக்கு எதிரில் நேருக்கு நேராக அவன் நின்றான். அவளுக்குப் பின்னால், வெகு தொலைவு என்று காணப்பட்ட இடத்தில், கலங்கரை விளக்கின் சிவந்த ஒளி தோன்றியது. அதையொட்டி விரிந்த கடல் பரந்து கிடந்தது. கடலுக்கு எல்லையிட்டு வரையறுத்தது போல் வெள்ளி அலைக்கோடு நீண்டு வளைந்து சென்றது.

"வந்து விட்டாயா? கும்பகர்ணனைப் போல் தூங்கினாயே என்று பார்த்தேன்..."

"வீட்டுக் கதவு திறந்த சத்தம் கேட்டு விழித்துக் கொண்டேன். நீ விடு விடு என்று நடந்து வந்து விட்டாய்! திரும்பியே பார்க்கவில்லை. அம்மம்மா! உன்னைத் தொடர்ந்து ஓடி வருவது எவ்வளவு கஷ்டமாய்ப் போய் விட்டது!"

"எதற்காகத் தொடர்ந்து வந்தாய்?"

"நல்ல கேள்வி! நீதானே வரச் சொன்னாய்? மறந்து விட்டாயா?"

"எதற்காக வரச் சொன்னேன்? உனக்கு நினைவு இருக்கிறதா?"

"நினைவு இல்லாமல் என்ன? உன் காதலர்களைக் காட்டுவதாகச் சொன்னாய்! எங்கே உன் காதலர்கள்? காட்டு, பார்க்கலாம்!"

"அதோ பார்! உனக்குப் பின்னால் திரும்பிப் பார்!" என்றாள் பூங்குழலி.

ஐந்தாம் அத்தியாயம்

நடுக் கடலில்

வந்தியத்தேவன், திரும்பிப் பார்த்தான். அவனுடைய வயிற்றிலிருந்து குடல்கள் மேலெழும்பி அவன் மார்பை அடைத்தன. பிறகு, இன்னும் மேலே கிளம்பி அவன் தொண்டையையும் அடைத்துக் கொண்டன.

அவனுடைய தேகத்தில் ஆயிரம் மின்னல்கள் பாய்ந்தன. பழுக்கக் காய்ந்த ஒரு லட்சம் ஊசி முனைகள் அவன் தேகமெல்லாம் துளைத்தன. - அத்தகைய பயங்கரக் காட்சி அவன் கண்முன்னே காணப்பட்டது.

முடிவில்லாது பரந்திருந்த இருளில் அங்கங்கே பத்து, இருபது, நூறு அக்கினி குண்டங்கள் தோன்றின. அவற்றிலிருந்து புகை இல்லை; வெளிச்சமும் இல்லை. கீழே விறகு போட்டு எரித்து உண்டாகும் தீப்பிழம்புகளும் அல்ல. வெறும் நெருப்புப் பிண்டங்கள். பூமியிலிருந்து எப்படியோ

எழுந்து அலைவ நின்றன. திடீரென்று அவற்றில் சில பிண்டங்கள் மறைந்தன. வேறு சில தீப்பிண்டங்கள் புதிதாக எழுந்து நின்றன.

ஒரு பிரம்மாண்டமான கரிய இருள் நிறங் கொண்ட ராட்சதன். தனியாகத் தலை ஒன்று இல்லாமல் வயிற்றிலேயே வாய் கொண்ட கபந்தனைப் போன்ற ராட்சதன். ஆனால் அவன் வயிற்றில் ஒரு வாய் அல்ல; அநேக வாய்கள். அந்த வாய்களை அவன் அடிக்கடி திறந்து மூடினான். திறக்கும்போது வயிற்றிலிருந்து தீயின் ஜுவாலை வாய்களின் வழியாக வெளியே வந்தது. மூடும்போது மறைந்தது.

இந்தக் காட்சியைக் கண்ட வந்தியத்தேவனுடைய ஒவ்வொரு ரோமக்கால் வழியாகவும் அவனுடைய உடம்பின் ரத்தம் கசிவது போலிருந்தது. அப்படிப் பட்ட பீதி அவனை என்றைக்கும் ஆட்கொண்டதில்லை. பெரிய பழுவேட்டரையரின் பாதாள நிலவறையிலேகூட இல்லை.

அவன் பின்னால் "ஹா ஹா ஹா!" என்று ஒரு சிரிப்புக் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

பூங்குழலிதான்! வேறு ஒரு சந்தர்ப்பத்திலேயென்றால், அவளுடைய அந்தச் சிரிப்பே அவனுக்கு அளவில்லாத பயங்கரத்தை உண்டாக்கியிருக்கும். இப்போது அதே சிரிப்பு தைரியத்தை அளித்தது. இரத்தமும் சதையும் உடலும் உயிரும் உள்ள பெண் ஒருத்தி அவன் பக்கத்திலே நிற்கிறாள் என்பது பெரும் அபாயத்தில் ஒரு பற்றுக் கோல் போல உதவியது.

"பார்த்தாயா என் காதலர்களை?" என்று பூங்குழலி கேட்டாள்.

"இந்தக் கொள்ளிவாய்ப் பிசாசுகள்தான் என் காதலர்கள். இவர்களைப் பார்த்து சல்லாபம் செய்வதற்குத்தான் நள்ளிரவில் இந்த இடத்துக்கு நான் வருகிறேன்" என்றாள்.

இந்தப் பெண்ணுக்கு நன்றாகப் பித்துப் பிடித்திருக்கிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இவளுடைய உதவியைக் கொண்டு இலங்கைக்குப் போகிறது நடக்கிற காரியமா? இவ்வாறு வந்தியத்தேவன் எண்ணினான். அவனுடைய உள் மனத்திலிருந்து வேறு ஏதோ ஓர் எண்ணம் வெளி வரப் போராடிக் கொண்டிருந்தது. அது என்ன? அது என்ன? இந்தக் கொள்ளி வாய்ப் பிசாசுகளைப் பற்றிய ஏதோ ஒரு விஷயந்தான்.

"உன்னுடைய சிநேகிதன் சேந்தன் அமுதனால் இத்தகைய காதலர்களோடு போட்டியிட முடியுமா?" என்று பூங்குழலி கூறியது கிணற்றுக்குள்ளேயிருந்து வரும் குரலைப் போல் கேட்டது. ஏனெனில் அவனுடைய உள்ளம் அப்போது எதையோ ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தது. ஆ! கடைசியில் ஒரு பெரிய போராட்டம்; மனத்திற்குள்ளே தான். இதோ ஞாபகம் வந்துவிட்டது...

கந்தகம் கலந்த பூமிப் பிரதேசங்களில் தண்ணீர் வெகு காலம் தேங்கி நின்று சதுப்பு நிலமானால், அத்தகைய இடங்களில் இரவில் இம்மாதிரி தோற்றங்கள் ஏற்படும். பூமிக்குள்ளேயிருந்து கந்தகம் கலந்த வாயு வெளியில் வரும்போது நெருப்புப் பிழம்பு வருவது போலிருக்கும். சில சமயம் நீடித்து நிற்கும். சில சமயம் குப் குப் என்று தோன்றி மறையும். இந்த இயற்கைத் தோற்றத்தைக் கண்டு அறியாத மக்கள் பயப்படுவார்கள். கொள்ளி வாய்ப் பிசாசு என்று பயங்கரப் பெயர் கொடுத்துப் பீதி அடைவார்கள்.

இப்படிப் பெரியோர் சொல்லி அவன் கேள்விப்பட்டிருந்தது ஞாபகத்துக்கு வந்தது. பிறகு அவனுடைய அறிவுக்கும் பயத்துக்கும் போர் நடந்தது. அறிவு வெற்றி பெற்றது.

ஆனால் அதையெல்லாம் இச்சமயம் இந்தப் பிரமை பிடித்த பெண்ணிடம் சொல்லிப் பயனில்லை. எப்படியாவது அவளுக்கு நல்ல வார்த்தை சொல்லி அழைத்துக் கொண்டு போய் விட வேண்டியதுதான்.

"பெண்ணே! உன் காதலர்கள் எங்கும் போய் விட மாட்டார்கள். இங்கேதான் இருப்பார்கள். நாளைக்கும் அவர்களை வந்து பார்க்கலாம் அல்லவா? வீட்டுக்குப் போகலாம் வா!" என்றான்.

அதற்குப் பூங்குழலி மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை; விம்மி அழத் தொடங்கினாள்.

இது என்ன தொல்லை என்று வந்தியத்தேவன் எண்ணினான். பின்னர் சற்று

நேரம் சும்மா இருந்தான்.

"பெண்ணே! நாம் போகலாமா?" என்று மீண்டும் கேட்டான்.

விம்மல் நிற்கவில்லை.

வந்தியத்தேவனுக்கு அலுத்துப் போய் விட்டது.

"சரி; உன் இஷ்டம் போல் செய்! எனக்குத் தூக்கம் வருகிறது. நான் போகிறேன்" என்று சொல்லிவிட்டு இறங்கத் தொடங்கினான்.

பூங்குழலி உடனே விம்மலை நிறுத்தினாள். மேட்டிலிருந்து இறங்கத் தொடங்கினாள். நாலே பாய்ச்சலில் வந்தியத்தேவனுக்கு முன்னால் கீழே போய் நின்றாள்.

வந்தியத்தேவன் ஓடிப் போய் அவளைப் பிடித்தான்.

இருவரும் கலங்கரை விளக்கை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

இந்தப் பித்துப் பிடித்த பெண்ணை நம்பிப் படகில் ஏறுவதாவது! கடலைக் கடப்பதாவது? - ஆயினும் வேறு வழி இல்லையென்று தெரிகிறதே! ஏதாவது நல்ல வார்த்தை சொல்லிச் சிநேகம் செய்து கொள்ளப் பார்க்கலாமா?

"வானத்தில் வால் நட்சத்திரம் தோன்றுகிறதே! அதைப் பற்றி உன் கருத்து என்ன?"என்று பூங்குழலி கேட்டாள்.

"என் கருத்து ஒன்றுமில்லை. வால் நட்சத்திரம் தோன்றுகிறது; அவ்வளவு தான்!" என்றான் வந்தியத்தேவன்.

"வால் நட்சத்திரம் வானில் தோன்றினால் பூமியில் பெரிய கேடுகள் விளையும் என்று சொல்கிறார்களே?"

"அப்படித்தான் சிலர் சொல்லுகிறார்கள்."

"நீ என்ன சொல்லுகிறாய்?"

"நான் ஜோதிட சாஸ்திரம் படித்ததில்லை. ஜனங்கள் அப்படிச் சொல்லிக் கொள்வதுதான் எனக்குத் தெரியும்."

சற்று நேரம் மௌனமாக நடந்தார்கள். பிறகு பூங்குழலி, "சக்கரவர்த்திக்கு உடம்பு சுகமில்லை என்று சொல்கிறார்களே? அது உண்மைதானே?" என்றாள்.

இவள் அவ்வளவு பித்துக் குளிப்பெண் அல்ல என்று வந்தியத்தேவன் எண்ணிக் கொண்டான். கொஞ்சம் அவனுக்கு நம்பிக்கை பிறந்தது.

"நானே என் கண்ணால் பார்த்தேன். சக்கரவர்த்தி படுத்த படுக்கையாய்க் கிடக்கிறார். இரண்டு கால்களிலும் உணர்ச்சியே கிடையாது. ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது. அவரைக் குணப்படுத்த மூலிகை கொண்டு வரத்தானே நான் வந்திருக்கிறேன். பெண்ணே! எனக்கு நீ ஓர் உதவி செய்வாயா?" என்று கேட்டான்.

அதற்கு மறுமொழி சொல்லாமல், "சக்கரவர்த்தி அதிக நாள் உயிரோடிருக்க மாட்டார். சீக்கிரத்தில் இறந்து போய் விடுவார் என்று சொல்கிறார்களே, அது உண்மையா?" என்று கேட்டாள் பூங்குழலி.

"நீ இச்சமயம் உதவி செய்யாவிட்டால் அப்படி நடந்தாலும் நடந்து விடும். இலங்கையில் ஓர் அபூர்வ சஞ்சீவி மூலிகை இருக்கிறதாம். அதைக் கொண்டு வந்தால் சக்கரவர்த்தி பிழைத்துக் கொள்வாராம். நீ படகு தள்ளிக் கொண்டு இலங்கைக்கு வருவாயா?"

"சக்கரவர்த்தி ஒருவேளை இறந்து போனால் அடுத்தபடி யார் பட்டத்துக்கு வருவார்கள்?" என்று பூங்குழலி கேட்டது வந்தியத்தேவனைத் தூக்கி வாரிப் போட்டது.

"பெண்ணே! உனக்கும் எனக்கும் அதைப் பற்றி என்ன? யார் பட்டத்துக்கு வந்தால் நமக்கு என்ன கவலை?"

"ஏன் கவலை இல்லை? நீயும் நானும் இந்த இராஜ்யத்தின் பிரஜைகள் அல்லவா?"

இந்தப் பெண் பித்துப் பிடித்தவளே அல்ல. இவளிடம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். இவளுடைய விசித்திரமான செயல்களுக்கு வேறு காரணம் இருக்க வேண்டும்.

"ஏன் பேசாமலிருக்கிறாய்? அடுத்த பட்டத்துக்கு யார் வருவார்கள்?" என்று பூங்குழலி மீண்டும் கேட்டாள்.

"ஆதித்த கரிகாலருக்குத் தானே யுவராஜா பட்டம் கட்டியிருக்கிறது. அவர்தான் நியாயமாக அடுத்த பட்டத்துக்கு வர வேண்டும்."

"மதுராந்தகர், - அவருக்கு உரிமை



ஒன்றுமில்லையா?"

"அவர்தான் இராஜ்யம் வேண்டாம் என்று சொல்லி விட்டாரே?"

"முன்னே அப்படிச் சொன்னார்; இப்போது இராஜ்யம் வேண்டும் என்று சொல்கிறாராமே?"

"அவர் சொன்னால் போதுமா? பிரஜைகள் எல்லாரும் ஒப்புக் கொள்ள வேண்டாமா?"

"பெரிய மனிதர்கள் பலர் அவர் கட்சியில் இருக்கிறார்களாமே?"

"அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன். இவ்வளவும் உன் காது வரை



யில் வந்து எட்டியிருப்பதை நினைத்தால் எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது."

"சுந்தர சோழர் திடீரென்று இறந்து போனால் என்ன ஆகும்?"

"தேசமெல்லாம் பெருங்குழப்பம் ஆகி விடும். அதைத் தடுப்பதற்குத்தான் உன் உதவி இப்போது தேவையாயிருக்கிறது..."

"நான் என்ன உதவியைச் செய்ய முடியும்?"

"முன்னமேயே சொன்னேனே? நான் அவசரமாக மூலிகை கொண்டு வர இலங்கைத் தீவுக்குப் போக வேண்டும். அதற்கு நீ படகு வலித்துக் கொண்டு வர வேண்டும்."

"என்னை எதற்காக அழைக்கிறாய்? ஒரு பெண் பிள்ளையைப் படகு தள்ளும்படி கேட்க வெட்கமாயில்லையா?"

"வேறு யாரும் இல்லை என்று உன் தந்தை சொல்கிறார். உன் அண்ணன்கூட நேற்றுப் போய்விட்டானாமே?"

"அவன் போனால் என்ன? உனக்கு இரண்டு கைகள், உன்னோடு வந்தவனுக்கு இரண்டு கைகள் இல்லையா?"

"எங்களுக்குப் படகு வலிக்கத் தெரியாது..."

"படகு வலிப்பது என்ன மந்திர வித்தையா! துடுப்பைப் பிடித்து வலித்தால் தானே படகு போகிறது!"

"திசை தெரிய வேண்டும் அல்லவா? நடுக்கடலில் திசை தெரியாமல் போய் விட்டால்....?"

"நடுக்கடலில் திசை தெரியாவிட்டால் முழுகிச் சாகுங்கள்! அதற்கு நான் என்ன செய்யட்டும்?"

கலங்கரை விளக்கின் அருகில் அவர்கள் வந்து விட்டார்கள். வந்தியத்தேவனும் அத்துடன் அந்தப் பேச்சை நிறுத்தி விட விரும்பினான். மேலும் பேச்சை வளர்த்திப் பூங்குழலியின் மறுப்பை உறுதிப்படுத்தி விட அவன் விரும்பவில்லை. அவள் அவ்வளவு கண்டிப்பாக மறுமொழி சொன்ன போதிலும், அவளுடைய குரலும் பேச்சின் தோரணையும் அவனுடைய உள்ளத்தில் சிறியதொரு நம்பிக்கைச் சுடரை உண்டாக்கியிருந்தன.

இரண்டாம் முறை படுத்த பிறகு வெகு நேரம் வந்தியத்தேவனுக்குத் தூக்கம் வரவில்லை. ஏதேதோ எண்ணங்களினால் அவனுடைய உள்ளம் வெகுவாகக் குழம்பிக் கொண்டிருந்தது. நாலாம் ஜாமத்தின் ஆரம்பத்திலேதான் தூங்கினான்.

தூக்கத்தில் வந்தியத்தேவன் கனவு கண்டான். பாய் மரம் விரித்த சிறிய படகில் பூங்குழலியும் அவனும் எதிரெதிராக அமர்ந்திருந்தார்கள். நாலாபுறமும் கடல்; எங்கு நோக்கினாலும் ஜலம். இனிய பூங்காற்று. படகு அக்காற்றில் மிதப்பது போலப் போய்க் கொண்டிருந்தது. பூங்குழலியின் முகம் அழகே வடிவமாகப் பொலிந்தது. சுருண்ட மயிர் நெற்றியில் ஊசலாடிக் கொண்டிருந்தது. சேலைத் தலைப்புப் பறந்தது. எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம் என்பதெல்லாம் வந்தியத் தேவனுக்கு மறந்து போய் விட்டது. பூங்குழலியுடன் படகில் போவதற்காகவே இத்தனை நாள் பிரயாணம் செய்து வந்ததாகத் தோன்றியது. ஒன்றே ஒன்று குறைவாயிருந்தது. அது என்ன? அது என்ன? ஆ! பூங்குழலியின் பாட்டு! சேந்தன் அமுதன் சொல்லியிருந்தான் அல்லவா?

"பெண்ணே! உன் பவழவாயைத் திறந்து ஒரு பாட்டுப் பாட மாட்டாயா?" என்றான் வந்தியத்தேவன்.

"என்ன சொன்னாய்?" என்று பூங்குழலி புன்னகையுடன் கேட்டாள். ஆகா! அந்தப் புன்னகை ஏழு உலகமும் பெறாதா?

"உன் கனிவாயைத் திறந்து ஒரு கீதம் இசைக்க மாட்டாயா என்றேன்."

"கீதம் இசைத்தால் எனக்கு என்ன தருவாய்?"

"உன் அருகில் வந்து உன் அழகிய கன்னத்தில்..."

பூங்குழலி உடனே தன் மடியிலிருந்து ஒரு கூரிய கத்தியை எடுத்துக் கொண்டாள். கத்தி பிடித்த கையை ஓங்கினாள்.

"இதோ பார்! அந்தப் பாய் மரத்துக்கு இப்பால் ஓர் அணுவளவு நீ வந்தாலும் உன்னை இந்தக் கத்தியால் குத்தி விடுவேன். கடல் மீன்கள் மிக்க பசியோடிருக்கின்றன!" என்றாள்.

(தொடரும்)



சென்னை அகராதி

(உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள நமது ஆயிரக்கணக்கான நேயர்களில், பலர் என்றாவது ஒருநாள் சென்னைப்பட்டணத்திற்கு வந்து பார்க்க வேண்டுமென்னும் எண்ணங் கொண்டவர்களாயிருக்கலாம். அத்தகையோரின் நன்மைக்காக இன்று இவ்வகராதியை வெளியிடுகிறோம்)

அரசியல்:- இது ஒருவகைச் சூதாட்டம். சென்னை நகரின் பிரபல வக்கீல்கள் பலரும், இன்னும் வேலையற்ற பிரபுக்கள் சிலரும் இந்தச் சூதாட்டத்தில் ஈடுபடுகிறார்கள். ''பொது ஜனங்கள்'', ''வாக்காளர்'', ''ஏழை எளியவர்கள்,'' ''ஒடுக்கப்பட்டவர்கள்'' முதலியோர் இந்த ஆட்டத்தில் பணமாக வைக்கப்படுகிறார்கள். ஆட்டத்தில் கெலிப்பவர்களுக்கு கௌரவ மாஜிஸ்ட்ரேட் பதவி முதல், நிர்வாக சபை அங்கத்தினர் பதவி வரையில் கிடைக்கலாம்.

ஆனந்தம்: – சென்னை நகரைப் பற்றிய அகராதியில் இந்த வார்த்தைக்கு நியாயமாக இடமிருக்கக் கூடாது. ஆனால் தங்கசாலை வீதி 244-ம் நெம்பர் கட்டடத்தில், சென்னையின் இந்த நற்பெயரைக் கெடுப்பதற்குச் சதியாலோசனை செய்து, மாதந்தோறும் ''ஆனந்த விகடன்'' என்னும் தூதனை அனுப்பி வருகிறார்கள்.

இல்லறம்:- இந்த அறம் சென்னையில் மிக மேலான முறையில் நடந்து

அமரர் கல்கி

வருகிறது. பெண்டாட்டியின் மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தும் உத்தமக் கணவர்களையும், புருஷனை விஷமிட்டுக் கொல்லும் பதிவிரதா சிரோமணிகளையும் சென்னையில் காணலாம்.

ஈகை: – சென்னை வீதிகளில் நடமாடும் குஷ்டரோகிகளும், க்ஷயரோகக்காரர்களும் இந்தச் சிறந்த தர்மத்தைக் கடைபிடித்துத் தங்கள் நோய்களை எல்லாருக்கும் தாராளமாய் வழங்கி வருகிறார்கள். மற்றப்படி சென்னையில் "ஈகை"யைக் காண்பது சிறிது பிரயாசையான காரியந்தான்.

உலக்கை:– அரிசி குத்தும் இயந்திரங்கள் வந்த பிறகு சென்னையில் இந்த ஆயுதம் மிகவும் அபூர்வமாயிருந்து வருகிறது. எனினும், தங்கசாலைத் தெருவிலுள்ள கற்பரசிகள் சிலர் வீட்டின் பணமிழந்த மைனர்களுக்கு இந்த ஆயுதத்தினால், அடிக்கடி பூஜை நடப்பதுண்டென்று அறிகிறோம்.

ஊமை:– சென்னைச் சட்டசபை அங்கத்தினரில் 100-க்கு 70 பேர் இந்த இனத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லப்படுகிறது.

எக்ஷாபிராண்டி:–

தீவிரமாக மதுவிலக்கை ஆதரிக்கும் சென்னை தினசரிப் பத்திரிகைகள் சிலவற்றில் இந்தச் சரக்கின் விளம்பரங்களைக் காணலாம். நேயர்கள் அவ்விளம்பரங்களைப் பார்த்து இதன் மகிமைகளை நன்கு தெரிந்து கொள்க.

ஏகாதசி:- சென்னை நகரின் வக்கீல்களிடமும், வைத்தியர்களிடமும் ஒருமுறை சிக்கிக் கொண்டவர்கள், பின்னர் தங்கள் வாணாள் முழுதும் தினந்தோறும் மேற்படி விரதம் அனுஷ்டிக்க வேண்டி வரும். ஒரு குழி நிலமாவது, ஒரு தம்பிடி காசாவது பாக்கியிருக்கும் வரையில் அவ்வக்கீல்களும் வைத்தியர்களும் உம்மை விட மாட்டார்கள்.

ஒன்று:- சென்னைப் பட்டணத்திலுள்ள மார்வாரிகளிடம் கடன் வாங்கியவர்கள் தப்பிப் பிழைப்பதற்கு வழி ஒன்றே ஒன்றுதான். கழுத்தில் கல்லைக் கட்டிக் கொண்டு வங்காளக் குடாக் கடலில் விழுவதுதான் அந்த வழி.

ஓடு: – மௌண்ட் ரோட்டிலுள்ள வெள்ளைக்காரர் கடைகளுக்குள் ஒருவன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு புகுந்து விட்டால், வெளியே வந்ததும் கையில் எடுத்துக் கொள்ள வேண்டியது ஓடு.

ஔடதம்:- முற்காலத்தில் இது நோய் போக்கும் சாதனமாயிருந்ததாகச் சொல்லப்படுகிறது. தற்போது சென்னையில் ஒரு சிலர் ஊரைக் கொள்ளையடிப்பதற்கு சாதனமாயிருந்து வருகிறது.

O :- ஆங்கிலேயர் முதன் முதலில் சென்னைக்கு வந்தபோது ரூபாய் அணா பைசா மூன்று இனத்திலும் கொண்டு வந்த பணத்தை இது கட்டிக் காட்டுகிறது.

(ஆனந்த விகடன், ஜூன் 14, 1929)

புது வாழ்வு பெற்றது!

வெகு காலமாய் நின்று போய்க் கிடந்த ஆசியாவின் அதிர்ஷ்டச் சக்கரம் சமீபகாலமாகச் சுழல ஆரம்பித்திருக் கிறது!

கொஞ்சம் வேகமாகவும் சுழல ஆரம்பித்திருக்கிறது!

இல்லாவிட்டால் ஆறு மாதங்களுக்குள் மூன்று நாடுகள் சுதந்தரம் பெற முடியுமா?

முன்னர் இந்தியா சுதந்தரத்தை இழந்ததால், இலங்கையும் சுதந்தரத்தை இழந்து கிடந்தது. பர்மாவின் சுதந்தரமும் பறி போயிற்று.

இப்போது இந்தியா அன்னிய ஆதிக் கத்திலிருந்து விடுதலை பெற்று விட்டதால், அதையடுத்து இலங்கையும் பர்மாவும் விடுதலை பெற்று விட்டன.

பாரத நாடு சுதந்தரத்தை இழந்த பின், பர்மாவோ அல்லது இலங்கையோ தன் சுதந்தரத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை.

இந்தியா சுதந்தரம் பெற்ற பின், பர்மா விலோ அல்லது இலங்கையிலோ தன்னு டைய ஆதிக்கத்தை நிலை நிறுத்த பிரிட் டிஷ் சாம்ராஜ்யத்தினால் முடியவில்லை.

இதிலிருந்து சந்தேகத்துக்கு இடமின்றி ஒரு விஷயம் புலனாகிறது.

அதாவது பர்மா, இலங்கை போன்ற பல ஆசிய நாடுகளின் வாழ்வு இந்தியா வின் வாழ்வையே பொறுத்திருக்கிறது என்பதுதான்.

இந்தியா தாழ்ந்தால் மற்ற ஆசிய நாடுகளுக்கு வாழ்வில்லை; இந்தியா வாழ்ந்தால் மேற்படி நாடுகளுக்குத் தாழ் வில்லை.

ஆசியாவின் சுதந்திர மாளிகைக்கு இந்தியாதான் அஸ்திவாரம் என்பதை ஆசிய நாடுகளின் தலைவர்களும் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

❖ ❖ ❖

சென்ற வருஷம் ஆகஸ்டு மாதம் 15உ பாரத நாடு சுதந்தரம் பெற்றது. நவம்பர் மாதத்தில் இலங்கை சுதந்தரம் பெற்றது.

இந்த வருஷம் ஜனவரி மாதம் 4-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை விடியற்காலம் சுபயோக சுப முகூர்த்தத்தில் பர்மா சுதந்தரம் பெற்றிருக்கிறது!

பர்மா கவர்னராக இருந்த சர் ஹியூபர்ட் ரான்ஸ் பர்மாவின் நிர்வாகத்தை பர்மியத் தலைவர்களிடம் ஒப்படைத்து விட்டு, அன்றே கப்பலேறி விட்டார்.

பர்மா சர்க்கார் காரியாலயத்திலிருந்து கீழே இறக்கப்பட்ட பிரிட்டிஷ் கொடி யையும் அவர் கையோடு எடுத்துக் கொண்டு போய் விட்டார்.

ஜெயபேரிகைகள் முழங்க, கோவில் மணிகள் கலகலவென்று ஒலிக்க, பர்மியர் கள் சுதந்தர விழாவை அலங்கார வைப வங்களுடனும் ஆனந்தப் பரவசத்துட னும் அமோகமாகக் கொண்டாடியிருக் கிறார்கள்.

அவ்வாறு புது வாழ்வு பெற்றுள்ள பர்மாவுக்கு இருதய பூர்வமாக வாழ்த்துக் கூறுகிறோம்.

(கல்கி, ஜனவரி 11, 1948 இதழில்)

முதல்



திருச்சிராப்பள்ளி பெரிய கடைத் தெருவில் ஒரு கட்டடத்தின் மச்சில் இலவச வாசகசாலை ஒன்று இருந்தது. (இப்போது இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது.) நாலு பீரோக்கள் நிறையப் புத்தகங்கள் இருந்தன. பெரும்பாலும் ஆங்கிலப் புத்தகங்கள்தான். அவற்றில் தேசிய இயக்கம் சம்பந்தமான புத்தகங்கள் அதிகம் இருந்தன.

அறையின் நடுவில் நீளமான மேஜை ஒன்று போட்டிருந்தது. இரு புறத்திலும் சில கையில்லாத நாற்காலிகள் கிடந்தன. அவற்றில் ஒன்றில் உட்கார்ந்து "லோகமான்ய திலகர் வழக்கு" என்ற புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தேன்.

இன்னும் ஐந்தாறு பேர் அச்சமயம் அந்த இலவச வாசகசாலையில் இருந்தார்கள். மேஜையின் அருகில் கிடந்த நாற்காலிகளில் உட்கார்ந்து அவர்களில் சிலர் பத்திரிகையும் சிலர் புத்தகமும் படித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மனிதர் அப்போது மச்சுப்படி ஏறி மேலே வந்தார். வருகையில் அவரை ஒருவரும் கவனிக்கவில்லை. வந்ததும் நாற்காலியில் உட்காருவதற்குப் பதிலாக நடுவில் போட்டிருந்த நீள மேஜையின் முனையின் மேல் உட்கார்ந்தார். உடனே எல்லாரும் அவரைக் கவனித்தார்கள். நானும் பார்த்தேன். அறிவும் ஆற்றலும் ஆத்திரமும் தன்னம்பிக்கையும் அவருடைய முகத்தில் சுடர் விட்டுப் பிரகாசித்தன. பொதுவாக நல்ல அறிவாளி என்றும் ஆனால் ஏதோ கோபமாயிருக்கிறார் என்றும் தோன்றியது. கோபத்துக்கு அத்தாட்சி உடனே கிட்டியது.

வாசகசாலையின் மானேஜர் ஒரு சாதுவான அப்பாவி மனிதர். அவர் புது மனிதரின் அருகில் வந்து, "ஸார்! மேஜை மேல் உட்காரக் கூடாது. இறங்கி, நாற்காலியில் உட்காருங்கள்!" என்றார்.

இப்படிச் சொன்னவரை ஒரு தடவை பார்த்து விட்டுப் புதிதாக வந்தவர் வேறு பக்கம் நோக்கினார். பதில் சொல்லவும் இல்லை; கீழே இறங்கவும் இல்லை.

வாசக சாலை மானேஜர் மறுபடியும், "என்ன சார், நான் சொல்கிறது காது கேட்கவில்லையா?" என்றார்.

உடனே கிளம்பிற்று சொற்பிரவாகம்.

"காது கேட்கிறது ஓய், கேட்கிறது. என்னைக் கீழே இறங்கத்தானே சொல்கிறீர்? என்னை எப்படியாவது கீழே இறக்கி விடப் பார்க்கிறீர். அவ்வளவுதானே? இதனால்தான், ஸ்வாமி இந்தியா இப்படி அடிமைப்பட்டுக் கிடக்கிறது. ஒருவரையொருவர் நாம் கீழே இறக்கி விடவே பார்த்துக் கொண்டிருக்கிறோம். மேலே தூக்கி விடுவதற்கு விருப்பம் இல்லை. விருப்பம் இருந்தாலும் சக்தி இல்லை. கீழே இறக்கி விடுவதென்றால், நீ முந்தி, நான் முந்தி! இறங்க மாட்டேன் சுவாமி! இறங்க மாட்டேன். அதற்காக என் தலையை வெட்டித் தஞ்சாவூருக்கு அனுப்பி விடுவதாயிருந்தால் அனுப்பிக் கொள்ளும். உம்மால் ஆனதைப் பாரும்!"

வாசகசாலை மானேஜர் குறுக்கிட்டு "என்ன ஸார்! ரொம்ப ரொம்பப் பேசுகிறீர்களே!" என்றார்.

"ஆமாம். சுவாமி! ரொம்பத்தான் பேசுகிறேன். ஏன் பேசக் கூடாது? நான் பேசக் கூடாது என்று சொல்ல

நீர் யார் என்று கேட்கிறேன்! இந்த தேசத்திலே பிறந்ததற்கு வெறுமனே பேசக் கூடவா சுதந்தரம் இல்லை! வெள்ளைக்காரன்தான் பேசக் கூடாது என்று வாய்ப்பூட்டு போடுகிறான்! நீர் வேறே பேசக் கூடாது என்கிறீர். அந்த அடக்குமுறையெல்லாம் என்னிடம் பலியாது. நான் பேசத்தான் பேசுவேன். நீர் கேட்டால் கேளும். இல்லாவிட்டால் காதில் பஞ்சை வைத்து அடைத்துக் கொள்ளும். என்னைப் பேசக் கூடாது என்று நீர் என்ன சொல்வது? அப்படித்தான் பேசுவேன். இந்தியாவிலே பிறந்தவனுக்குப் பேசக் கூடவா சுதந்தரம் இல்லை? ஊதுகிற சங்கை நான் ஊதிக் கொண்டுதான் இருப்பேன். பொழுது விடியாவிட்டால் அதற்கு நான் பொறுப்பில்லை!''

புயல் அடித்து இடி இடித்து மின்னல் மின்னி மழை பெய்து விட்டது போலிருந்தது. பாவம்! அந்த வாசகசாலை மானேஜர் வெலவெலத்துப் போனார். சற்று நேரம் மௌனம் குடி கொண்டிருந்தது. மேஜை மீது பிடிவாதமாக உட்கார்ந்திருந்த அந்த மனிதர், பக்கத்திலே நான் கையில் வைத்துக் கொண்டிருந்த புத்தகத்தைப் பார்த்தார்.

''ஓகோ! இந்தப் பிள்ளையாண்டான் திலகர் பிரசங்கம் படிக்கிறான், திலகர் பிரசங்கம்! இங்கிலீஷை 'இம்ப்ரூவ்' செய்து கொள்வதற்காகப் படிக்கிறான். இந்தப் புத்தகமே தமிழிலே இருக்கட்டும்; படிக்க மாட்டான். தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை பிரசங்கங்களை யாராவது புத்தகம் போட்டிருக்கிறார்களா? கிடையாது! போட்டிருந்தாலும் யாராவது படிப்பார்களா? தமிழ்ப் புத்தகம் என்றால் கையினாலேயே தொட மாட்டோம். இந்த வாசக சாலையிலே இவ்வளவு புத்தகம் இருக்கிறதே? நல்ல தமிழ்ப் புத்தகம் ஒன்றாவது இருக்கிறதோ? – இல்லை! தமிழனைப் போலத் துப்புக் கெட்டவன் இந்த உலகத்திலேயே கிடையாது. தமிழன் வேறு எந்த பாஷை வேணுமானாலும் படிப்பான்; தமிழ் மட்டும் படிக்க மாட்டான். 'தமிழிலே என்ன ஸார், இருக்கிறது?' என்று வெட்கமில்லாமல் கேட்பான். தான் தமிழன் என்ற சுரணையே கிடையாது. இத்தனை பேர் நீங்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்களே! என்னென்னமோ பிரமாதமாய்ப் படிக்கிறீர்களே! சுப்பிரமணிய பாரதி என்று யாராவது கேட்டிருக்கிறீர்களா? அவர் எங்கே இருக்கிறார், என்ன செய்கிறார் என்று யாருக்காவது தெரியுமோ? – என்ன சுவாமி, எல்லாரும் சும்மா உட்கார்ந்திருக்கிறீர்களே! பேச மாட்டேன் என்கிறீர்களே! வாயைத் திறக்க மாட்டேன் என்கிறீர்களே? பதில் சொல்ல மாட்டேன் என்கிறீர்களே! – சரிதான்! என் பேச்சு ஒருவர் காதிலும் ஏறவில்லை போலிருக்கிறது! பின்னே நான் எதற்காகத் தொண்டையைப் பறி கொடுக்க வேணும்? செவிடன் காதிலே சங்கு ஊதுகிறவன் ஊதட்டும்! என்னாலே முடியாது, சுவாமி; என்னாலே முடியாது! நான் யாராவது காது கேட்கிற மனுஷன் இருக்கிறானா என்று தேடிப் பார்க்கிறேன். மானேஜர் ஸார்! இதோ மேஜையிலிருந்து இறங்கி விட்டேன். உமக்குத் திருப்திதானே? மனது குளிர்ந்து விட்டதோ இல்லையோ? மேஜையிலிருந்து மட்டும்

எழுத்தாளர்

அமரர் கல்கி

இறங்கவில்லை; இந்த மச்சிலேயிருந்தும் இறங்கி விடுகிறேன். உம்முடைய மேஜையை நன்றாய்த் துடைத்து வைத்துக் கொள்ளும்! மேஜையை நான் எடுத்துக் கொண்டு போய்விடவில்லை; நன்றாய்ப் பார்த்துக் கொள்ளும்."

இவ்விதம் சொல்லிவிட்டு அந்த மனிதர் தடதடவென்று இறங்கிப் போனார். அவர் கூறியதையெல்லாம் மேலே நான் எழுத்துக்கு எழுத்து சரியாக எழுதியிருப்பதாகச் சொல்லவில்லை. முப்பது வருஷத்துக்கு முந்தைய கதை. பேச்சின் தோரணை மட்டும் உண்மை. வார்த்தைகளில் சில வ.ரா.வின் வார்த்தைகளாக இருக்கலாம்.

ஆம், வாசகசாலைக்கு வந்து விட்டுப் போனவர் பேராசிரியர் வ.ரா. அவர்கள்தான். அவர் போனவுடனே அங்கிருந்த மற்றவர்கள் பேசியதிலிருந்து அந்த விவரம் தெரிந்து கொண்டேன்.

"இவர் யார் அப்பா, இந்த மனுஷர்? பொல்லாத பேர்வழியாயிருக்கிறாரே?" என்றார் ஒருவர்.


"தெரியாதா? திருப்பயணம் வ. ராமசாமி ஐயங்கார். பாரதியாரின் பக்தர். கொஞ்ச நாள் புதுச்சேரியிலிருந்தார்."

"புதுச்சேரியிலிருந்து இப்போது வந்து விட்டாரோ? எதற்காக வந்தார்?"

"அது எனக்குத் தெரியாது. ஸ்ரீரங்கம் கே.வி. ரங்கசாமி ஐயங்காரிடம் இவருக்குக் கொஞ்சம் பழக்கம் உண்டு. ஒருவேளை அவரைப் பார்க்க வந்திருப்பார்!"

அன்றைக்கு ஸ்ரீ வ.ரா. அவர்களைப் பற்றி நான் தெரிந்து கொண்டது அவ்வளவுதான். ஆனால் அதுவே அப்போதைக்குப் போதுமானதாயிருந்தது. என்றைக்கும் மறக்க முடியாதபடி வ.ரா. என் மனத்தில் பதிந்து விட்டார். ○

(வ.ரா. மணிவிழாவில், அவருக்குப் பொற்கிழி அளிக்க நிதி திரட்டும் விதமாக ஜூலை 18, 1948 கல்கி இதழில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி.)



இந்தப் பெண் ஏன் மயக்கமடைந்து சரிகிறாள் தெரியுமா? ரேஷன் கடை முன்பு பல மணி நேரம், மைல் கணக்கில் நீண்டுள்ள கியூவில் மழையிலும், வெயிலும் நின்றதால்தான். இந்தோனேஷியாவில் பொருளாதார சீர்குலைவுக்குப் பிறகு அத்யாவசியப் பண்டங்கள் கூட கிடைப்பது அரிதாகி விட்டது.

டைம்ஸ் ஆஃப் இந்தியாவிலிருந்து: பெங்களூர் அ. சங்கரன்



• வித்யா ஜெகன்னாதன்

ராஜ் டீ.வியில் தினமும் இரவு பத்து மணிக்கு ஆங்கிலச் செய்தி ஒளிபரப்பாகிறது. மற்ற இரு தனியார் தமிழ் சானல்களிலும் இல்லாத அம்சம் இது.

"ராஜ் டீ.வியின் டாப் - 5 நிகழ்ச்சிகளில் ஆங்கிலச் செய்தியும் ஒன்று" என்கிறார் ராஜ் நியூஸ் (ஆங்கிலம்) ஆலோசகரான கே.பி. கனில். இங்கே ஆங்கிலச் செய்தி வாசிப்பவர்கள் கிடைப்பது ரொம்ப கஷ்டமாய் இருக்கிறதாம். தற்போது ராஜ் நியூஸ் (ஆங்கிலம்) வாசிப்பவர்கள் பற்றிய சிறு குறிப்புகள் இங்கே.

சங்கீதா பாண்டே :

சின்னத் திரை, சங்கீதாவுக்குப் புதிதில்லை. ஏற்கெனவே தேசிய ஒளிபரப்பு, மெட்ரோ (தூர்தர்ஷன்) ஜெயின் டீ.வி. ஹோம் டீ.வி.

இங்கிலீஷில் ஒரு ஹோமணாரணி!!

என்று நிகழ்ச்சிகள் வழங்கிய அனுபவம் கொண்டவர். பிறந்து வளர்ந்ததெல்லாம் டெல்லியில். விமானப்படை அதிகாரியின் மகள். பிரிட்டிஷ் ஏர்வேஸ் அதிகாரியின் மனைவி.

டெல்லியில் இருந்தபோது டீ.வி நிகழ்ச்சிகள், ரேடியோ நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகளில் தொகுப்புரை வழங்குவது என்று படு பிசியாக இருந்தவர். திருமணமாகி, சென்னைக்கு வந்து இரண்டு வருஷமாகப் போகிறது.

• ஐஸ்வர்யா



• வித்யா பாலகிருஷ்ணன்

• சங்கீதா பாண்டே

"சென்னைக்கு வந்த புதிதில், மொழிப் பிரச்னை. ஒவ்வொரு நிமிடமும் ஒரு யுகமாய் நகரும். ரொம்ப போரடித்தது. கேஷுவலாய் என்னைப் பற்றிய விவரங்களை, பிஜு, ருக்கு என்கிற மாடல் கோ - ஆர்டினேட்டர்களிடம் கொடுத்திருந்தேன். அவர்கள் மூலம்தான் எனக்கு ராஜ் நியூஸ் வாசிக்கும் வாய்ப்பு வந்தது. ரொம்ப மகிழ்ச்சியுடன் இப்போது நியூஸ் படிக்கிறேன்" என்று கூறும் சங்கீதா எல்.கே.ஜி, யூ.கே.ஜி படித்தது சென்னையில்தான். அதன் பின் ஷில்லாங், லக்னோ, அலகாபாத், டெல்லி என்று அப்பாவின் உத்தியோகத்துக்கு ஏற்பப் பல ஊர் மாற வேண்டியிருந்தது. இவர் சட்டம் படித்தாலும், பிராக்டீஸ் செய்யாமல் மீடியா பக்கம் வந்து விட்டார்.

இவரது ரேடியோ, டீ.வி. நிகழ்ச்சிகளின் போது, பிரபலங்கள் பலரை பேட்டி கண்டிருக்கிறார். குஷ்வந்த் சிங், சத்ருகன் சின்ஹா, மிலன் சோமன், மது சாப்ரே, பாண்டிட் குயின் டைரக்டர் சேகர் கபூர், மணிசங்கர் அய்யர் என்று பட்டியல் நீளுகிறது.

"பிரபல மாடல் மிலன் சோமனை, ஒரு சினிமா தியேட்டரில் விளம்பரப்படம் எடுத்துக் கொண்டிருந்த போது சந்தித்தேன். இரண்டாம் காட்சி சினிமா முடிந்த பின் நடந்த அந்த ஷூட்டிங்கில், நள்ளிரவில் அவரை பேட்டி கண்டது வித்தியாசமான அனுபவம்! சத்ருகன் சின்ஹா, பேட்டியில் நகைச்சுவை பஞ்ச்களுடன் பதில் சொன்ன விதம் என்னை மிகவும் கவர்ந்தது. பர்சனாலிடி என்ற கோணத்தில், சேகர் கபூரை சுமார் ஒன்னரை மணி நேரம் பேட்டி கண்ட பின், அவர் தங்கியிருந்த ஓட்டல் ரெஸ்டாரண்டில் காப்பி அருந்தினோம். அப்போது, கேஷுவலாக நான் பாண்டிட் குயின் படம் பற்றிப் பேசினேன். நான் அந்தப் படத்தைப் பார்க்கவில்லை என அறிந்ததும், "இன்னும் என் படத்தைப் பார்க்காமல் என்னை பேட்டி காண வந்து விட்டாயா?" என்று கோபமாகக் கேட்டார். அதை மறக்க முடியாது.

"ஜெயின் டீ.வி.க்காக பிசினஸ் செய்தி வாசித்தது கலவையான அனுபவம். ஜெயின் டீ.வி. மாஸ்கோவிலிருந்து ஒளிபரப்பாகிக் கொண்டிருந்ததால், என்னை மாஸ்கோவுக்கே அனுப்பிவிட்டார்கள். இரண்டு மாதம் அங்கேயே தங்கி, செய்தி வாசித்தேன். ஜெயின் டீ.வியைச் சேர்ந்த சுமார் பதினைந்து பேர்களுக்காக, தனி அபார்ட்மெண்ட், சமையல்காரர், வேலைக்கு ஆள் என்று சகல வசதிகளுடன் அங்கே ஏற்பாடு செய்திருந்தனர். மொழி தெரியாது! ஒளிபரப்பு

நிலையம், தங்கிய இடம் எல்லாம் மாஸ்கோவின் இயற்கை அழகு நிரம்பிய புற நகர்ப் பகுதி. அதிகம் வெளியில் சுற்ற முடியாது. எனவே, சாப்பிடுவது, செய்தி படிப்பது, தூங்குவது, அரட்டை இதுதான் அன்றாட வாழ்க்கையாக இருந்தது!'' என்கிறார்.

வித்யா பாலகிருஷ்ணன்:

குட்ஷெப்பர்ட் கான்வென்ட்டில் படித்த இவர், இப்போது படிப்பது பல் மருத்துவம். இந்தப் படிப்பைத் தேர்ந்தெடுத்தது ஏன் என்ற கேள்விக்கு பதில்: ''மெடிகல் சீட் கிடைக்கவில்லை, டென்டல் காலேஜில் இடம் கிடைத்தது; சேர்ந்து விட்டேன்.'' பளீர் பற்கள் தெரியச் சிரிக்கிறார்! (என்ன பேஸ்ட் உபயோகிக்கிறீங்க மிஸ்?)

அப்பா, பன்னாட்டுக் கம்பெனியொன்றின் துணைத் தலைவர். நியூஸ் படிக்க விண்ணப்பிக்கும்படி ஊக்கப்படுத்தினவர்கள் அம்மாவும், அப்பாவும். வித்யாவுக்கு வாய்ப் பாட்டு, வீணை எல்லாம் தெரியும். பேப்பரில் விரும்பிப் படிப்பது ஸ்போர்ட்ஸ்.

வித்யா ஜகன்னாதன்:

ராணுவ அதிகாரியின் மகளான இவரது ஆரம்பப் படிப்பெல்லாம் பெரும்பாலும் வடக்கே. கடந்த ஐந்தாண்டுகளாய்த் தான் சென்னையில் வாசம். எத்திராஜ் கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றவர்.

இவரது அம்மா, டீ.வியில் ரீனி கன்னா, கீதாஞ்சலி அய்யர் போன்றோர் செய்தி வாசிப்பதை ரசித்து, மகளும் செய்தி வாசிப்பாளராக வேண்டும் என்று ரொம்ப ஆசைப் பட்டாராம்! ராஜ் டீ.வியில் ஆங்கில நியூஸ் படிக்கத் தேர்வானபோது, அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம்.

''எத்திராஜ் கல்லூரியில் மாணவிகள் நடத்திய பத்திரிகையின் ஆசிரியராய்ப் பணியாற்றிய அனுபவம், பல்வேறு மேடை நிகழ்ச்சிகளில் 'காம்பியரிங்' செய்த அனுபவம், எல்லாம் சேர்ந்து, நியூஸ் வாசிப்பை டென்ஷன் இல்லாமல் ஆக்கி விட்டன'' என்கிறார் வித்யா ஜெகன்னாதன்.


• கே.பி. சுனில்

நடிகை ராதிகா தயாரித்த நிகழ்ச்சிக்காக, அரவிந்த்சாமியை பேட்டி கண்டதுதான் இவருக்கு முதல் சின்னத் திரை அனுபவம். ஆரம்ப நாளைய செய்தி வாசிப்பை, டேப்பில் பதிவு செய்து, மறுபடி போட்டுக்காட்டி, சில சிறு தவறுகளைச் சுட்டிக் காட்டி திருத்தம் சொல்வாராம் அப்பா ஜகன்னாதன்! ஒரு விஷயம், வித்யா தமிழ்ப் பெண்தான். ஆனால் தமிழ் எழுதப் படிக்கத் தெரியாது!

ஐஸ்வர்யா:

இவர் முகத்தைப் பார்த்தால், செய்தி வாசிப்பாளர் ஷோபனா ரவியின் சாயலாய் இருக்கிறதே என்று உங்களுக்குத் தோன்றினால்.... கரெக்ட்! ஷோபனா ரவியின் மகள் இவர். சட்டக் கல்லூரியில் இரண்டாம் வருடம் படிக்கும் மாணவி. அப்பா ரவியைப் பின் பற்றி சட்டம் படிக்கிறார்; அம்மாவைப் பின்பற்றி, நியூஸ் படிக்க வந்திருக்கிறார்.

ஐஸ்வர்யாவின் பாட்டி ஜானகி, சென்னை தூர்தர்ஷனில் செய்தி ஆசிரியராகப் பணிபுரிந்தவர். அவர் அளித்த ஊக்கம்தான், ஐஸ்வர்யாவைச் செய்தி படிக்க வரச் செய்துள்ளது.

இங்கிலீஷில் ஒரு ஷோபனா ரவி! ●

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

அட்டை & வண்ணப்படங்கள் : **ஸ்ரீஹரி**

3

மனதில் உனது ஆதிக்கம்

இரவு ஒன்பது மணியிருக்கும். பாலா மொட்டை மாடியில் உலாத்திக் கொண்டிருந்தான். நல்ல இருட்டு. மெல்ல நகர்ந்து கைப்பிடிச் சுவருக்கு வந்தான். கீழே எட்டிப் பார்த்தான். வீட்டின் முன் வாசல் திண்ணையில் பவானி இன்னும் உட்கார்ந்து கொண்டுதான் இருந்தாள். ஆடாமல், அசையாமல் ஒரு சிலை மாதிரி. திண்ணையில் விளக்கு எரியவில்லை. தெருவிளக்குக்கூட எரியாமல்தான் இருந்தது. சுற்றிலும் முக்கால் இருட்டுக் கவ்வின பிரதேசமாக அது இருக்க, பவானியின் உருவம் அத்தனை தெளிவாய்த் தெரியவில்லைதான்.

இருட்டை ஊடுருவிக் கொண்டு பாலா அவளிருக்கிற திசையையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அங்கிருந்து பார்த்தால் அவன் உருவம் அவளுக்குத் தெரியுமா என்று யோசனை ஓடியது. ஒருவேளை தெரியலாம். தெரியாமலும் இருக்கலாம். அவனை மாதிரியே பவானியும் இருட்டுக்குள் அசைகிற அவன் உருவத்தில் கண் பதித்திருக்கலாம்.

பவானி பலத்த யோசனையிலிருக்கிறாள் என்று தெரிந்தது. கிணற்றடியில் பாலா அந்தக் கேள்வியைக் கேட்டதற்கப்புறமிருந்து அவள் மனநிலை திடீரென்று மாறி விட்டிருந்ததும் புரிந்தது.

இன்னும் பதில் கிடைக்காமல் அந்தக் கேள்வி அப்படியே நிற்கிறது. இரண்டு தினங்களாகி விட்டது. அவசரப்பட்டு விட்டோமோ என்று தோன்றியது. சட்டென்று ஒரே நாளில் ஒரே நிமிடத்தில் முடிவு எடுக்கலாம்தான். செயல்படுத்துவதில் ஏன் நிதானம் இல்லாமல் போய் விட்டது?

நேற்றும் முந்தா நாளுமாய் அவள் வீட்டுக்குப் போவதை பாலா தவிர்த்து விட்டான். இன்றும்கூட அப்படியே. ரொம்ப சங்கடமாய் உணர்ந்தான். ஏதோ தப்பு செய்து விட்ட மாதிரி. நிஜமாகவே அது தப்பா என்று தெரியவில்லை. சரோஜாம்மாவுக்கும், வேணு மாமாவுக்கும் தெரிந்தால் என்ன நினைப்பார்கள்? 'ச்சே' என்றிருக்குமா? எதிர் வீட்டில் தனியே தங்கியிருந்த அவனுக்கு ஒரு வீட்டுச் சூழ்நிலையை உருவாக்கித் தந்த இடம் அவர்கள் வீடு. நான் செய்த காரியம் அவர்களுக்குத் துரோகம் என்றாகி விடுமா?

ஒரே குழப்பமாக இருந்தது. பவானி என்ன நினைக்கிறாள் என்று தெரியவில்லை. சம்மதம் வருமா என்று சந்தேகமாய் இருந்தது. ஆனால் யோசிக்கிறாள் என்று மட்டும் புரிந்து போயிற்று. யோசிக்கட்டும். ஒரு நல்ல வாழ்க்கை வேண்டுமென்கிற விருப்பம் அவளுக்கு இல்லாமல் போகாது.

சடசடவென சில தூறல்கள் விழ ஆரம்பித்தன. கொஞ்சம் பலமாய். மழை வந்துவிடும்போல் இருந்தது.

மறுபடி பார்க்கும்போது பவானி எழுந்து உள்ளே போவது தெரிந்தது.

திடீரென்று பாலா வாழ்க்கை ரொம்ப போரடிப்பதுபோல் உணர்ந்தான். எங்கேயாவது போக வேண்டும், யாரையாவது பார்க்க வேண்டும், ஏதாவது செய்ய வேண்டும் என்கிற மாதிரி எண்ணங்கள் ஓடின. சீனி வேறு ஊரில் இல்லை. ஆபீஸ் வேலையாய் மங்களூர் போயிருக்கிறான்.

அன்று சாயங்காலம் வீட்டுக்கு வந்ததும் முகம் கழுவிக் கொண்டு நேராய் பவானி வீட்டுக்குப் போனான். சரோஜாம்மா அல்லது வேணு மாமா யாருடனாவது உட்கார்ந்து ரொம்ப நேரம் ஏதாவது கதை பேசிக் கொண்டிருக்க வேண்டும். மனம் போனபடிக்கு ஏதாவது கதையளந்து கொண்டிருக்க வேண்டும் என்று ஆசையாய் இருந்தது. சமீபமாய் ஏனோ அவன் உணரும் தனிமைக்கு எப்படியாகிலும் முட்டுக்கட்டை போட

சித்ரன்

வேண்டுமென்றிருந்தது.

வழக்கத்துக்கு மாறாய் வீடு வெறிச் சோடியிருக்க, பவானி மட்டும் உள் முற்றத்தில் உட்கார்ந்து காய் நறுக்கிக் கொண்டிருந்தாள்.

"வாங்க" என்றாள்.

"அப்பா, அம்மா எங்க?" என்று பாலா தயக்கமாய்க் கேட்டான்.

"கோவிலுக்குப் போயிருக்காங்க..."

"நீ போகலையா?"

"இல்ல..."

"ஏன் பவானி?"

"பிடிக்கலை..."

பாலா இருக்கலாமா, போகலாமா என்று யோசித்தான். பவானியுடன் தொடர்ந்து வேறு விஷயங்கள் பேசிக் கொண்டிருக்க முடியுமா என்று தெரியவில்லை. அவள் பேச்சு மிக சகஜமாகத்தான் இருக்கிறது. முகத்தில் புன்னகையிருக்கிறது. அவளை அவன் தப்பாய் நினைத்துக் கொண்டிருப்பதன் அடையாளம் எதுவும் இல்லை.



"சரி அப்புறமா வர்றேன்..." என்று சொல்லிக் கிளம்பினான்.

முற்றத்தைத் தாண்டுவதற்குள் "பாலா" என்று கூப்பிட்டாள் பவானி.

பாலா நின்றான்.

"என்ன பவானி?" என்று கேட்டுத் திரும்பி வந்தான்.

பவானி கூப்பிட்டாளே தவிர எதுவும் பேசாமல் மௌனமாயிருந்தாள். பாலா காத்திருந்தான். அவள் எதுவோ சொல்ல நினைக்கிறாள் என்று புரிந்தது.

பாலாவுக்கு மனத்தில் சின்னக் குறுகுறுப்பு ஓடியது.

பவானி லேசாய்த் தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். மெதுவாய் வாய் திறந்தாள்.

"பாலா... அன்னைக்குக் கேட்டீங்களே? இணத்தடியில்?"

"ஆமாம்..." அவனுக்கு ஜிலீரென்றது.



''உன் காதலி ரொம்ப பத்தினியா?''

''ஆமாம். பீச்சில்கூட கண்ணகி சிலைக்குப் பக்கத்தில்தான் வெயிட் பண்ணுவா!''

— எஸ். மோகன்

"அந்த விஷயம் இன்னும் மனசுல இருக்கா?"

"ம்.."

"சொல்றேன்னு தப்பா நினைச்சுடாதிங்க. அதை மெதுவா நீங்க மறந்துடறதுதான் நல்லது."

அவளின் அந்த வாக்கியத்திலேயே ஏமாற்றத்தின் ஆரம்ப வரி ஒன்று அவனுக்குள் நகர ஆரம்பித்து விட்டது. குழப்பமாய் அவளைப் பார்த்தான்.

"நீங்க எம் மேல வெச்சுட்டிருக்கிற அக்கறைக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை. உங்களைப் போல நல்ல மனுஷனைக் கட்டிக்க எந்தப் பொண்ணும் குடுத்து வெச்சிருக்கணும். ஆனா.."

"சொல்லு பவானி.."

"கல்யாணத்துக்கப்புறம் சந்தோஷத்துக்கும், சுகத்துக்கும் பதிலா நிறைய கிடைச்சது வேதனையும், வலியும்தான். உங்களுக்கே எல்லாம் தெரியும். எல்லாத்தையும் உதறிட்டு நான் இப்போ வீட்டோட வந்து இருக்கிறதும் அதனாலதான். இப்ப நிம்மதியா இருக்கு. சந்தோஷமா இருக்கு. ஆனா நீங்க திடீர்னு இப்படிக் கேட்பீங்கன்னு நினைக்கலை. அதிர்ச்சியாயிருந்தது."

"இப்பக்கூட நீ சரின்னு சொல்லு. உன்னை மகாராணி மாதிரி வெச்சுக்கறேன் வாழ்நாள் பூரா.." என்றான். குரல் மிக உடைந்து வந்தது.

"இல்லைங்க. அதப்பத்தியெல்லாம் யோசிச்சுப் பாக்கற மனநிலைல நான் இப்ப இல்லை. எல்லா விஷயத்திலேயும் ஒரு வெறுப்பு வந்துடுச்சு தெரியுமா? மனசு வெறுமையா இருக்கு. எந்த முடிவும் என்னால சட்டுனு எடுத்துற முடியாதுன்னு தோணுது."

"யோசி பவானி. நான் காத்திருக்கேன்.."

"வேண்டாம் பாலா. ரெண்டு நாளா நான் ரொம்ப யோசிச்சிட்டேன்."

"அப்ப என் நினைப்பை நான் மறந்துடணும் இல்லையா.."

"......"

"சொல்லும்மா.."

"உங்களுக்கு ஏமாற்றமா இருந்தாலும் என் பதில் அதுதாங்க. மறந்துடுங்க. உங்களை எனக்குப் பிடிக்கும். ஆனா வேற எந்தக் கோணத்திலும் யோசிச்சுப் பார்த்ததில்லை. வேணாம். உங்க மேல இருக்கிற மதிப்பும், ஸ்நேகமும் என்னைக்கும் மாறாது.. ஆனா இது வேண்டாம்.."

"அம்மாவும், அப்பாவும் என்ன நினைச்சுக்குவாங்களோன்னு பயப்படறியா?"

"அதில்லை. உண்மையைச் சொல்லணும்னா என் புருஷன் என்னைக்காவது என்னைப் புரிஞ்சுக்கிட்டு என்னைத் தேடி வருவார்னு தோணுது. அவர் மாறிடுவார்னு தோணுது. எல்லாத்துக்கும் ஒரு சின்ன இடைவெளி தேவையாயிருக்கு. அதான் இது. எனக்கு நம்பிக்கையிருக்கு. அவர் கூடவே நல்லபடியா ஒரு வாழ்க்கை இருக்குன்னு மனசுல ஏதோ சொல்லுது. இந்த நிலைமைல எப்படி உங்க எண்ணத்துக்கு சம்மதிக்க முடியும் பாலா..?"

பாலாவுக்குள் துளிர்த்திருந்த காதல் செடி இலை கருகி சுருள்வதை உணர்ந்தான். அவனை முழுதாய் ஏமாற்றம் கவ்விக் கொண்டது. முகம் இருண்டு தொண்டை வறண்டு விட்டது. கைகள் நடுங்கின.

லேசாய் பனிக்கிற கண்களுடன் பவானி அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

பாலா மெல்ல தோள்களைக் குலுக்கி "ஆல் த பெஸ்ட்" என்றான்.

ஒரு வாரம் இறுக்கமாய்க் கழிந்தது. கடந்து போன விஷயங்களின் பாதிப்பு இன்னும் மிச்சம் இருந்தன. அவ்வளவு எளிதாய் சுதாரித்துக் கொண்டு அதிலிருந்து மீண்டு வந்து விடவும்

முடியவில்லை. திடீரென்று எதையோ நினைத்து அது கிடைக்காமல் போனதின் பாதிப்பு. மனதை எப்படியாவது தேற்றித்தானாக வேண்டும்.

திடீரென ஒருநாள் காலை அப்பா ஊரிலிருந்து வந்தார். வந்ததும் வராதது மாய் திட்டினார். "எத்தனை லெட்டர் போட்டேன். ஒன்னுக்காவது பதில் போட்டியா?" என்றார். "உன்னைக் கையோடு கூட்டிட்டுப் போகலாம்னு வந்திருக்கேன்."

"எதுக்குப்பா?"

"எதுக்கா? நடராஜ் மாமாவுக்கு என்னால இனி பதில் சொல்ல முடியாது. நீயே அவர் கிட்ட நேர்ல வந்து என்ன சொல்லணுமோ அத சொல்லிடு... இப்பவே கிளம்புற நீ!"

பாலாவுக்கு ஊருக்குப் போய் ஒரு வாரம் இருந்துவிட்டு வந்தாலென்ன? என்று எண்ணம் எழுந்தது. அப்பாவுக்கோ நடராஜ் மாமாவுக்கோ என்றில்லை. இப்பொழுதிருக்கிற மன நெருக்கடியில் கொஞ்சம் மாறுதல் கிடைத்தால் தேவலாம் என்று பட்டது. ஊரிலிருந்து வரும்போது புதியதாய் குழப்பங்கள் இல்லாத பாலாவாய் வர வேண்டும்.

"சரி... கிளம்புங்க... போகலாம்..." என்றான். கிளம்பும்போது பவானி வாசற்படியில் நின்று டாட்டா காட்டினாள். அவனுக்கு லேசாய்க் கண் கலங்கியதை யாருக்கும் தெரியாமல் மறைத்துக் கொண்டான்.

அப்பா அவனை சும்மா கூட்டிக் கொண்டு வரவில்லை என்று பிற்பாடு தெரிந்தது. அவனுக்கும், நடராஜ் மாமா பெண் தேவகிக்கும் ஜாதகப் பொருத்த மெல்லாம் பார்த்து வைத்திருந்தார்கள். "உன் சம்மதம்தாண்டா பாக்கி" என்றார்கள்.

அப்பா அவனை வலுக்கட்டாயமாய் நடராஜ் மாமா வீட்டுக்குக் கூட்டிப் போனார். மாமாவுக்கு அவன் வருகை ஏக சந்தோஷமாயிருந்தது.

இவனைப் பார்த்த மாத்திரத்தில் தேவகி வெட்கப்பட்டு சமையலறையை விட்டு வெளி வரவேயில்லை. அதற்கப்புறம் தடபுடலான உபசரிப்பு. எல்லாம் அவனுக்காக. அவன் பொருட்டு நிகழ்பவை. ஒன்று மட்டும் புரிந்து போயிற்று. பாலா தேவகியை கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதை அவனைத் தவிர எல்லோரும் தீர்மானித்து வைத்திருக்கிறார்கள். அவனும் தலையாட்டி விடுவான் என்ற நம்பிக்கையில் காத்திருந்தார்கள்.

"சரி" என்று சொல்லி விடலாமா என்று யோசனை ஓடியது.

சொல்லலாம். அதற்கு முன்பாக பவானியை ஒரு தடவை, ஒரே ஒரு தடவை பார்க்க வேண்டும் என்று தோன்றியது. எண்ணம் ஆவலாக மாறி அடுத்த நாள் 'வெளியே போய்ட்டு வர்றேன்' என்று மட்டும் சொல்லிவிட்டு பஸ் ஏறியே விட்டான். திரும்பி வந்து 'எங்க போன?' என்று யாராவது கேட்டால் ஏதாவது சொல்லிச் சமாளித்து விடலாம் என்று தோன்றிது.

சுமார் ஒன்றரை மணி நேரப் பயணம் தான். ஆனால் போனபோது பவானி வீட்டில் இல்லை. சரோஜாம்மா மட்டும் இருந்தாள். இவனை திடீரென்று பார்த்ததில் ஆச்சரியப்பட்டாள்.

"பவானியோட புருஷன் நேத்து வந்திருந்தார். அவ கூட ரொம்ப நேரம் தனியா பேசிட்டிருந்தார். வீட்டுக்குப் போலாம்னு கூப்பிட்டார் போல. நல்ல

"என் பையன் 'காந்தி' மாதிரின்னு அடிக்கடி சொல்வீங்களே... இப்ப என்ன செய்யறான்?"

"பதிமூணு வயசாச்சி... கல்யாணம் செய்து வைங்க'ன்னு சொல்றான்..."

– ராஜி



விதமாத்தான் நடந்துக்கிட்டார். ஏதோ காம்ப்ரமைஸ் ஆயிருக்கும் போல. பவானியும் ரொம்ப யோசிச்சிட்டு இன்னைக்கு காலைலதான் அவர்கூட கிளம்பிப் போனா. நேத்து நைட் கூட அவர் இங்கதான் ஸ்டே பண்ணியிருந்தாரு...''

''கேக்கவே ரொம்ப சந்தோஷமாயிருக்கு...''

உதடுகள் அப்படிச் சொன்னதே தவிர மனசுக்குள் அந்த விஷயத்தின் சாரம் என்னவோ பண்ணியது.

ஒரு இழப்பின் சுமை மாதிரி, ஒரு மன விரிசல் மாதிரி ஏதேதோ உணர்வுகள் அவனை ஆக்ரமித்தன.

பாலா மறுபடி திரும்பி ஊருக்கு வந்தான். அம்மாவிடம் போய் ''நடராஜ் மாமாகிட்ட நான் சரின்னு சொன்னதா சொல்லுங்க...'' என்றான். அம்மாவுக்கு ஆச்சரியமும், பூரிப்பும் தாங்கவில்லை. ''என் சமத்துடா நீ'' என்று கொஞ்ச ஆரம்பித்தாள்.

நடராஜ் மாமாவுக்கும் சந்தோஷம்தான். உடனே வருகிற நல்ல நாளில் நிச்சயதார்த்தம் வைத்துக் கொள்ளலாம் என்றார். அப்பா அதை வழி மொழிந்தார்.

பாலா எஸ்.டி.டி போட்டு கம்பெனிக்கு பதினைந்து நாள் லீவு சொன்னான்.

அவன் நிச்சயதார்த்தத்திற்கு சரோஜாம்மாவும், வேணு மாமாவும் வந்திருந்தார்கள். தேவகியைப் பார்த்துவிட்டு, ''உனக்கேத்த பொண்ணுடா...'' என்றார் வேணு மாமா. பாலா மிதமாய் சிரிக்க மட்டும் செய்தான்.

நிச்சயதார்த்தம் முடிந்த இரண்டாவது நாள் சீனி போன் பண்ணினான்.

''பாலா... பவானி தூக்கு போட்டுக்கிட்டு தற்கொலை பண்ணிட்டாடா...''

(தொடரும்)



நிஜமா நாயகா?

ஆகஸ்ட் பத்தாம் தேதியிலிருந்து 'மருதநாயக'த்தின் படப்பிடிப்பு தொடங்குகிறது. இதற்காக லொகேஷன் பார்க்க ஊர் ஊராகப் போய்க் கொண்டிருக்கிறார் கமல். காரைக்குடிக்கு ஒரு ட்ரிப் அடித்து விட்டுத் திரும்பியவர் மறுநாளே கொச்சினுக்கு விமானமேறி விட்டார். கூடவே ஆங்கிலப்பட ஸ்டன்ட் டைரக்டர் ஜிம் கேரி மற்றும் செகன்ட் யூனிட் டைரக்டர் ஒருவர். இவரும் ஹாலிவுட்காரர்தான்.

இல்லை. 'மருதநாயகம்' அதனால்தான் திரையுலகம் நடத்திய பேரணியில் கமல்
படும் என்று ஒரு ஆங்கிலத்தில் படமாக்கப்பட்டு பின் தமிழில் டப் செய்யப்
காலமாக. நிஜமா வதந்தி உலவ ஆரம்பித்திருக்கிறது — சபீ
நாயகா?
— மஹேந்த்

10 கார்கள்

உட்பட பல லட்சம் பரிசு!

ஒரு கிலோ தங்கம் ◆

30 கலர் டி.வி ◆ 30 வாஷிங்மெஷின் ◆ 30 ரெப்ரிஜிரேட்டர் ◆

வெள்ளி ◆ பட்டு ◆

இரு சக்கர வாகனங்கள் ◆

சி.டி. பிளேயர்கள் வாட்ச்கள் ◆

etc.,etc., ◆

பரிசு மேளா

வழங்குகிறது

தினமலர்

தீபாவளி மலர் '98

◆ 11 வது ஆண்டு படைப்பு ◆ தரமான தயாரிப்பு

3 புத்தகங்கள் ◆

8 சுவாமிகளின் வண்ணப் படங்கள் ◆


கைநிறைய 'தரமான' இலவச பொருட்கள் ◆

தினமும் வாங்க கூடிய பொருட்கள் மீது உண்மையான' தள்ளுபடி கூப்பன். ◆

கதைகள், படக்கதைகள், பயணக்கட்டுரை, அதிசய-செய்திகள், கவிதைகள், அழகியவண்ண புகைப்படங்கள், சினிமா செய்திகள், சுவையான துணுக்குகள், சிரிப்புகள் என்று வருடம் முழுவதும் வைத்திருந்து படிக்கும் வகையில் 3 புத்தகங்களிலும் ஏராளமான விஷயங்கள்...

விலை ரூ.65/-

உங்கள் பகுதி தினமலர் ஏஜன்ட் அல்லது புத்தக கடைகளில்
உங்கள் பிரதிக்கு முன்பதிவு செய்து ரசீதை பத்திரப்படுத்துங்கள்.



கண்களில் அச்சான ஓவியம்!

✉ அட்டைப் படத்தில் அச்சாகியிருந்த பூங்குழலியின் ஓவியம் என் கண்களிலும் அச்சாகி விட்டது.

கோயமுத்தூர்-14, ஏ.எஸ். இராமசாமி.

✉ வையவனின் 'முகவரி தொலைந்த முகங்கள்' சிறுகதை மாறுபட்ட இருவேறு துருவங்களை வெளிச்சப்படுத்தியது. வையவனின் படைப்பு என்றாலே ரயில்வே ஸ்டேஷன் வந்து விடுமோ?

நெய்வேலி, க. சுந்தர்.

✉ கோபிநாத் முதுகாடு எவ்வளவு பெரிய மேஜிக் நிபுணராக இருந்தென்ன! அவருடைய மனைவியின் மேஜிக் பற்றி வியந்து புகழ்ந்தது படித்து யாரும் மேஜிக் செய்யாமலே சிரித்து ரசித்தேன்!

மதுரை, நெல்லை வி. சிவா.

✉ 'கோடி கோடியாய் நஷ்டம்; கூடை கூடையாய்த் துன்பம்' என்ற தலையங்கம், மத்திய அரசின் கையாலாகாத்தனத்தைக் காட்டிய தோடு, அது என்ன செய்திருக்க வேண்டுமென் பதையும் வலிமையாக அறிவுறுத்தியது.

மதுரை-9, இரா. கல்யாணசுந்தரம்.

✉ "கோடி கோடியாய் நஷ்டம்; கூடை கூடையாய்த் துன்பம்", மிகச் சிறந்த படப்பிடிப்பு. ஆனால் பிற துறை ஊழியர்களைப் போல் தபால் துறையினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது நியாய-தர்மமே அல்ல" என்பதும், பொறுத்திருந்து கோரிக்கைகளை அடைவோம் என்ற எண்ணம் தபால் துறை யூனியன் தலைவர்களுக்காவது இருந்திருக்கலாம் என்ற தங்கள் கருத்தும் ஏற்புடையதல்ல... பகுதி நேர ஊழியர் என்பதால் சலுகைகள், உரிமைகள் அளவுதான் குறையும். முழுமையாக மறுக்கக் கூடாது என்ற நியாயம் பொன் விழா ஆண்டில் நிறைவேற வேண்டும் என்பதால்தான் வேறு வழியின்றிப் போராடினோம். உறுதிமொழிகளை இன்னும் நம்புகின்றோம்.

சென்னை-20, அ. சோமசுந்தரம்,
தலைவர்,
தேசிய ஆர்.எம்.எஸ். & எம்.எம்.எஸ்.
ஊழியர் சங்கம் 3ம் பிரிவு.

✉ 12.7.98 இதழில் "செய்திகள் வாசிப்பது சந்தியாவின் சிஷ்யர்கள்" எனும் சுவைமிக்க கட்டுரையில், நிறைவாக "உங்கள் முணுமுணுப்பின் சப்தம் தூர்தர்ஷன் வரை போய் விழட்டும்" என்ற சொற்கள் கண்ணில் பட்டன. இதிலும் தூர்தர்ஷனை இழுத்திருப்பதில் ஆச்சரியமோ, ஆத்திரமோ, வருத்தமோ ஏற்படவில்லை. இன்று பல்வேறு செயற்கைக் கோள் தொலைக்காட்சிகளில் காட்சி தரும் பலரும்- சந்தியா உள்பட- தூர்தர்ஷன் தயாரிப்புதான் என்பதைக் கட்டுரையாளர் மறந்துவிட்டாரா!


எச். ராமகிருஷ்ணன்,
இணை இயக்குநர் (செய்தி)
சென்னைத் தொலைக்காட்சி

✉ உண்மையான காதல் என்னென்ன உயர்வுகளைத் தரும் என்பதை இருபத்தேழு வாரங்களாக இனிமையான எதிர்பார்ப்புகளுடன் தந்திருந்தார் பட்டுக்கோட்டை பிரபாகர். பாராட்டுகள்!

நெய்வேலி, க. ஸ்ரீகாந்த்.

✉ 'நான் உன்னை சுவாசிக்கிறேன்' தொடரைப் படித்து முடித்தபோது, அரவிந்த் கேரக்டர் என்பது கற்பனைக் கதாபாத்திரமல்ல; நம்மைத்தான், நம்மைப் போன்ற எண்ணற்ற இளைஞர்களது உணர்வுகளைத்தான் அப்படியே வெளிக்கொண்டு வந்திருக்கிறார் என்கிற உணர்வு ஏற்பட்டது. இது வெறும் வார்த்தை ஜாலமல்ல; நிதர்சனமான உண்மையேதான்!

போடிநாயக்கனூர், எஸ். சையது முகமது.



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
சென்னை- 600 063. தொலைபேசி : 2376129



ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 50 மாணவர்களும் 20 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலை சிற்றுண்டி (70 பேருக்கு)	ரூ.	500/-
மதிய உணவு (இனிப்புடன்)	ரூ.	1,000/-
இரவு சிற்றுண்டி	ரூ.	750/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	300/-
ஒரு மாணவனுக்கு ஓரண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	6,000/-
குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	40,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/DD/MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.

வருமான வரி விலக்கு (**Section 80 G**) உண்டு


ADCHOICE

● வைகுண்டம், சென்னை – 61.
? 'வட்டமேஜை' வெள்ளையர் ஆட்சியை ஞாபகப்படுத்துகிறது. வாசகர் கடிதங்களுக்கு வேறு பெயர் சூட்டுங்களேன்...?
! வெள்ளையர் ஆட்சி நம் சரித்திரத்தின் ஓர் அங்கம். அது ஞாபகம் வருவதில் தவறில்லை. வட்டமேஜை என்பது எல்லோருக்கும் சரியாசனம் தருகிற வசதியான அமருமிடம். அதனால்தான் அப் பெயர்.


● என். பாலகிருஷ்ணன், மதுரை – 1
? தங்கபாலுவை நீக்கிவிட்டு திண்டிவனம் ராமமூர்த்தியைத் தலைவராக்கியதன் மூலம் தமிழகத்தில் காங்கிரஸ் வளரும் என்று சோனியா நினைக்கிறாரா?
! அட்லீஸ்ட், ராமமூர்த்தியாவது வளருவார் என்று எதிர்பார்க்கிறாரோ என்னவோ!

● ப. இராம்முருகன், சென்னை – 81.
? தமது பிறந்த நாளில், 'கவியரசு பட்டத்தைத் துறக்கிறேன். அதைக் கண்ணதாசனுக்கே சமர்ப்பிக்கிறேன்' என்று வைரமுத்து சொல்லியிருக்கிறாரே?
! வழங்கப்பட்டபோதே மறுத்திருந்தால் பிரச்னைகளையும் தவிர்த்திருக்கலாம், மதிப்பும் உயர்ந்திருக்கும்.

● ஆர். சரோஜா, நாட்டரசன்கோட்டை...
? 'கருத்து வேறுபாடுகளைப் பேசித் தீர்த்து விட்டோம். எனவே பி.ஜே.பி. கூட்டணி அரசு ஐந்து ஆண்டு பதவியில் நீடிக்கும்...' என்று வாஜ்பேய் சொல்கிறாரே...?
! டிஸ்மிஸ் பிரச்னை என்ற கரடிப் பிடி வழுவி விடவே அப்படிப் பேசியிருப்பார். காவிரிப் பிரச்னையை வைத்து ஜெ கிடுக்குப் பிடி போடுவார் என்று அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார்.



• கிடுக்கிப்பிடியில்



• எதிர்பார்ப்பு...

● வி.எஸ். இராமு, செம்பட்டி.
? மத்திய அரசின் நிதிச் சிக்கனத்துக்கு யோசனை அளித்தால் பத்தாயிரம் ரூபாய் பரிசாமே? உங்கள் யோசனைகள் என்னென்ன...?
! ஒன்றென்ன, பத்தாயிரம் யோசனைகள் வழங்கலாம்... எதுவுமே காரிய சாத்தியமல்ல என்று ஒதுக்கி விடுவார்கள். தப்பித் தவறி யாருக்காவது பரிசு தந்தாலும் அவர் யோசனை நிறைவேற்றப்பட மாட்டாது என்பது நிச்சயம். ஐம்பது ஆண்டுகளில் இது மாதிரி ஸ்டண்ட் எத்தனையோ பார்த்து விட்டோம்.

● எம். இராஜேந்திரன், லால்குடி.
? தூர் வாரும் பணியில் முதல்வர் வெகு தீவிரம் காட்டுகிறாரே?
! கட்சிக்குள்ளும் காட்ட வேண்டும்.

● வாசுதேவன், மும்பை – 86
? ஒப்பிடுக – சினிமா உலகில் அன்று ஜெயலலிதா – அர

மேடம் 356க்கு நீங்க சொம்பனம் யார்...?



• அன்றும்...
•... இன்றும்!



சியல் உலகில் இன்றைய ஜெயலலிதா...?

! அன்று: நடித்துப் பணம் சம்பாதித்தார். இன்று பணம் 'பண்ணி விட்டு' நடிக்கிறார்!

● நா. பாலசுப்ரமண்யம், சென்னை – 101.

? ஏர் இந்தியாவுக்கு ஒரு நாளைக்கு ஒரு கோடி நஷ்டமாமே?

! ஏர் இந்தியாவுக்கா..? நமக்குங்க! உங்களுக்கு, எனக்கு.. ஒவ்வொரு இந்தியனுக்கும்!

● இ. மகராசன், கடமலைக்குண்டு.

? அணு விஞ்ஞானி சிதம்பரத்துக்கு அமெரிக்கா 'விசா' மறுக்கப்பட்டிருப்பது பற்றி...?

! சட்டாம்பிள்ளை அமெரிக்காவின் சிறு பிள்ளைத்தனம்.

● கே.ஆர். உதயகுமார், சென்னை – 1. ❒

? மகாத்மாவைக் கொன்ற கோட்சேவைப் பெருமைப்படுத்தும் வகையில் நாடகம் எடுக்கப்பட்டதை மத்திய அரசு முதலிலேயே தடுத்திருக்கலாமே..?

! ஜனநாயகத்தின் கருத்துச் சுதந்தரம் இத்தகைய முயற்சிகளை அனுமதிக்கிறது. அரக்கர்களை ஹீரோவாக்கும் புராண நாடகங்களை ஆர்.எஸ். மனோகர் போட்டிருக்கிறாரே! இந்த நாடகத்தைப் பொருத்த மட்டில் பிரச்னை, வெகு சீக்கிரம் – அதுவும் சுதந்தரப் பொன்விழா ஆண்டில் – அது எழுதப்பட்டதுதான் – அதிலும் ஆர்.எஸ்.எஸ். சார்புள்ள பி.ஜே.பி ஆட்சி நடக்கும்போது.. நாடகம், நாடகம் என்ற முறையில் – மக்களால் அங்கீகரிக்கப்பட இன்னும் காலம் கனியவில்லை. எனவே முன் யோசனையுடன் அரசு தடுத்திருக்கலாம்தான்.

● காசிதாசன், ஒசூர்.

? பாசமென்பது பகையாக மாறுவது எப்போது?

! பாசத்துக்குரிய நபரை உடைமையாகக் கருதத் தொடங்கும்போது.

● வி. விஜய், சென்னை – 4.

? இன்று பிரதமர் வாஜ்பேயிக்கு மேடம் 356 சிம்ம சொப்பனம். மேடம் 356க்கு யார்...?

! நீதிமன்றம்!

● அ. முஸ்தபா, தக்கோலம்.

?மாறுதலுக்கு நீங்கள் எங்களிடம் ஒரு கேள்வி கேளுங்களேன்?

! ஒரே கட்டுரையை நன்றாயிருக்கிறது என்று ஒரு வட்டமேஜை கடிதத்திலும், 'படுமட்டம்' என்று இன்னொரு கடிதத்திலும் முஸ்தபா எழுதுவது ஏன்..?




• டு லேட்!

● கே.என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்றால், வன்முறைக்குத் தீர்வு வன்முறை தானா...?

! முள்ளை முள்ளால் எடுப்பது உடனடி நிவாரணம்; செருப்பு அணிவது நிரந்தரத் தீர்வு. அப்படித்தான் வன்முறை விஷயமும்.



• 'இசை'வான கருத்து!

● எம். மோஹன், கோவை – 38.

? சன் தொலைக்காட்சியில், கால்கேட் சப்தஸ்வரங்கள் நிகழ்ச்சியில், உமையாள்புரம் சிவராமன் கர்நாடக இசையை மிஞ்ச உலகில் வேறு எந்த இசையும் கிடையாது என்று உறுதி படக் கூறினார். இக்கருத்தில் உங்களுக்கு உடன்பாடா?

! உடன்பாடுதான். கர்நாடக இசை என்பது இறை உணர்வும் இசையும் மொழியும் அழகான ராக – தாள சேர்க்கையில் இழைகின்ற உணர்வுப் பிரவாகம். விஞ்ஞான ரீதியான ஒரு கட்டுக் கோப்புக்குள் கற்பனைக்கும் கடல் போல இடமளிக்கும் ஓர் ஆச்சர்யம்.



• காவிரி முதல் கட்சி வரை

● மு. புஷ்பராசன், பெங்களூர் – 4

? ஜெயலலிதாவின் புகழை அழிப்பதற்காகவே தாங்கள் (கல்கி) அவதாரம் எடுத்திருப்பதாக என் நண்பர் கூறுகிறார்...?

! அவர் புகழை அழிக்க வேறு யாராவது ஏன் வர வேண்டும்..? அதைத்தான் அவரே செய்து கொண்டிருக்கிறாரே!

❒ ரூ.50 பரிசு பெறுபவர்:

கே. ஆர். உதயகுமார்,
61. தையப்ப முதலி தெரு.
சென்னை 600 001

அக்காவின் வீட்டுக்குப் போனபோது அவள் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தாள். குழந்தைகள் இரண்டும் விளையாடிக் கொண்டிருந்தன. அக்கா என்னைப் பார்த்தாள். 'வா' என்றாள். அதில் எந்தவித உற்சாகமும் இல்லை. ஆனால் குழந்தைகள் இரண்டும்– என்னையும், என் குழந்தையையும் பார்த்து உற்சாகம் கொப்பளிக்க 'சித்தி' என்று ஓடிவந்தன.

"தம்பி பாப்பா" என்று ஓடிவந்து– என் குழந்தையைத் தூக்க முயற்சித்தது. அக்காவுக்கு இரண்டுமே பெண் குழந்தைகள். குழந்தைகள் என் பையனைத் தூக்கிக் கொண்டு ஓர் ஓரமாய் விளையாடப் போயின. அக்கா டீ.வி.யை அணைப்பதா இல்லை என்னிடம் பேசிக் கொண்டிருப்பதா என்று யோசித்து என்னிடம் பேசுவதைக் காட்டிலும் டீ.வி. பார்ப்பதே தனக்குப் பிடித்தமான விஷயம் என்பது போல் டீ.வி. பக்கம் பார்வையைத் திருப்பினாள்.

உட்காரச் சொல்லவில்லை. எப்போதும் அப்படித்தான். ஆனாலும் நான் உட்கார்ந்து கொண்டேன். ஆனால், அக்கா உட்கார்ந்து இருக்கும் அந்த குஷன் சோபாவில் அல்ல. சோபாவில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு லேசாய் சாய்ந்து அமர்ந்து இருப்பது– ஒரு கம்பீரத்தைத் தரும். சோபாவில் அமர்வதற்குக் கூட ஒரு தகுதி வேண்டும் என்று கருதுபவள் நான். சோபாவில் நான் அமர்ந்தால்– உட்கார்ந்து இருப்பது தெரியுமோ, தெரியாதோ?

சோபாவிற்குப் பக்கத்தில் இருந்த ஒரு ஸ்டூலில் உட்கார்ந்தேன். பையில் வைத்து இருந்த பிஸ்கெட் பாக்கெட் ஞாபகத்திற்கு வந்தது.

"நித்யா, வித்யா.. இங்க வாங்க. இந்தாங்க பிஸ்கெட்" என்று சொன்னதும்– அக்கா குழந்தைகள்– என் பையனையும் தூக்கிக் கொண்டு ஓடி வந்தன.

"அய்யோ.. தம்பிய கீழ போட்டுடாதீங்க."

குழந்தைகளின் கையில் கொடுத்த பிஸ்கெட் பாக்கெட்டை– அக்கா வாங்கிக் கொண்டாள்.

"இந்த ப்ராண்ட் பிஸ்கெட் இதுகளுக்குப் பிடிக்காதே."

ஒவ்வொருமுறையும் பிஸ்கெட் வாங்கி வரும் போதெல்லாம் அக்கா இப்படியே சொல்வது வழக்கம். இது கொஞ்சம் விலை குறைச்சலான ரகம். ஒரு பாக்கெட் நான்கு ரூபாய். பத்து ரூபாய் கொடுத்து வாங்க வசதி இல்லை. பத்து ரூபாய்க்கு எவ்வளவோ செலவு உள்ளது. அதோடு இங்கு வருவதே பணத்தை எதிர்பார்த்துத்தானே?

"அத்தான் இன்னும் கடையில் இருந்து வரலையாக்கா?"

அக்கா ஏதும் பேசவில்லை. டீ.வி. சப்தத்தில் நான் கேட்டது அக்கா காதில் விழவில்லையோ?

திரும்ப அக்காவிடம் கேட்கத் தயக்கமாய் இருந்தது. தயக்கம் என்பதைவிட பயம் என்று சொல்லலாம். அக்கா எடுத்தெறிந்து ஏதாவது பேசிவிடலாம். அதான் பயம். எப்போதும் பேசுவது தான். ஆனால் பயம் ஏற்படுவதைத் தவிர்க்க இயலவில்லை.

அக்கா நைட்டி அணிந்து இருந்தாள். நைட்டிக்கு மேல் அக்கா அணிந்திருந்த இரண்டு செயின்களும் கண்டு விரல் கனத்திற்கு இருந்தன. அக்கா ரொம்பவும் வசதியாய் இருப்பதில் சந்தோஷமே. ஆனால் சின்ன வயசில் அக்கா, தங்கை என்று பின்னிப் பிணைந்து இருந்த பாசம்–சினேகம் எதுவும் இப்போது இல்லை!

உறவு

வாழ்க்கையை நினைத்தால் வியப்பாய் உள்ளது. ஆனால் அதை ஊன்றிக் கவனித்தால் எல்லாம் சுயநலமாய்த்தான்



● யோகி

உள்ளது. நான் இங்கு வருவது அக்காவுக்குப் பிடிப்பதில்லை. காசு கேட்டு தொல்லைப் படுத்துவதாய் நினைக்கிறாள். அக்காவை இதற்காகக் குற்றம் சொல்ல முடியுமா?

திரும்பவும் அக்காவிடம், "அக்கா... அத்தான் இன்னும் வரலையா" என்று கேட்டேன்.

அக்கா ரிமோட் மூலம் வால்யூமைக் குறைத்தாள்.

"நா என்ன செவிடின்னு நினைச்சியா... காதுல விழுது. வர்ற நேரம்தான். வந்ததும் எதுக்கு வந்தியோ அத வாங்கிட்டுப் போ" என்று சுள்ளென்று பேசிவிட்டு வால்யூமைக் கூட்டினாள். நான் பேசாமல் உட்கார்ந்து இருந்தேன். இனி எதுவும் கேட்க என்ன இருக்கிறது?

"சனியன்களா... சத்தம் போடாதிங்க" என்றாள் அக்கா- குழந்தைகளைப் பார்த்து. குழந்தைகள் கொஞ்சம் சப்தம் போட்டு விளையாடிக் கொண்டு இருந்தன. குழந்தைகள் என்றால் சப்தம் இடும். குதூகலத்துடன் குதிக்கும். ஆடும், பாடும்.. அதற்காக சனியன் என்று சொல்வதா. அவள் தன் குழந்தைகளை சனியன் என்று சொல்லவில்லை. என்னையும், என் குழந்தையையும் சொன்னதாய்த்தான் தோன்றியது.

அக்காவின் கோபக் குரல் கேட்டு என் குழந்தை வீறிட்டு அழ ஆரம்பித்தது. பயந்து போயிற்று போலும்! எழுந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு, "இதோ பாரு மாடு.." என்று டீ.வி.யில் வந்த ஒரு மாட்டைக் காட்டிக் கொண்டு வராண்டாவுக்கு வந்தேன். "இதோ பாரு ஸ்கூட்டர்... டர்ன்னு போகுதா... நாமளும் போவோம். பெரியப்பாவும் இது மாதிரி ஸ்கூட்டர்ல தான் வருவாரு" என்றேன். குழந்தை அழுகையை நிறுத்தியது. சிரித்தது.

ஆனால் என்னால் அழுவதை நிறுத்த இயலாது. வாய்விட்டு அழுதால் தான் அழுவதாய் அர்த்தமா? வராண்டாவில் இருந்தவாறே ஹாலில் இருந்த சுடிகாரத்தில் மணி பார்த்தேன். மூன்று மூன்றரைக்கு மேல்தான் கடையில் இருந்து அத்தான் வருவார். கஷ்டமாய்த்தான் உள்ளது. ஒவ்வொரு மாசமும் இங்கு வந்து பணம் வாங்கி கொண்டு போக...

ஆனாலும் வேறு வழியில்லை. கார்மெண்ஸில் இருந்து வரும் தொள்ளாயிரம் ரூபாய் சம்பளம் வீட்டுச் செலவுக்கு சரியாய்ப் போய்விடுகிறது. அதுவும் கூட இப்போதுள்ள விலைவாசியில் இழுத்துக்கோ, பறிச்சுக்கோ என்றுதான் உள்ளது. இங்கு அத்தான் கொடுக்கும் எண்ணூறு ரூபாய்தான் கணவரின் வைத்திய செலவுக்கு சரியாய் உள்ளது.

நன்றாகத்தான் இருந்தார். ஒரு ஆறு மாசம் முன் திடீர் என்று புத்தி பிசகி- சித்த சுவாதீனம் அற்றுப் போனார். நம்பத்தான்

முடியவில்லை. ஆறுமாசம் முன் வரை அவர்தான் வேலைக்குப் போய் சம்பாதித்து குடும்பத்தைத் தாங்கினார். ஒரு ப்ரஸ்ஸில் வேலை பார்த்து வந்தார். நல்ல சம்பளம் தான். எந்தக் கெட்டப் பழக்கமும் கிடையாது.

அப்பாவுக்கு என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. ஏற்கெனவே பிறந்த வீட்டில் ரொம்பக் கஷ்டம். இன்னும் ஒரு தங்கை இருக்கிறாள். என்னை வேறு வைத்துக் கொள்ள முடியுமா? தையல் வேலை தெரியும். பக்கத்தில் உள்ள கார்மெண்ஸில் வேலைக்குச் சேர்ந்தேன். சம்பளம் குடும்பச் செலவுக்கு சரியாய் வந்தது. வைத்திய செலவுக்கு? அப்பாவிடம் கேட்டபோது அவரால் கொடுக்க இயலவில்லை.. மகள் கேட்டுக் கொடுக்க முடியவில்லையே என்று வருந்தினார். அக்காவின் வீட்டுக்காரரிடம் சொல்ல- அத்தான் இவரின் மருத்துவ செலவை ஏற்றுக் கொள்வதாய்ச் சொன்னார். நல்ல மனதுக்காரர். சொந்தமாய் ஸ்டேஷனரி ஸ்டோர்ஸ் வைத்துள்ளார். நல்ல வருமானம். என் கல்யாணத்துக்குக் கூடப் பெருமளவு உதவி பண்ணினார்.

''உனக்கு ஏதாவது உதவின்னா என்கிட்ட கூச்சமில்லாமல் கேளு. மாமாவால் தரும் சூழ்நிலை இல்ல. அவரைத் தொல்லை படுத்த வேண்டாம்'' என்றார். அப்பாவை வைத்து மாசம் ஐநூறு ரூபாய் தருவதாய்ச் சொன்னார். வாங்கக் கூச்சமாகத்தான் இருந்தது. போன மாசம் இவரின் உடல் நலத்தைப் பார்க்க வந்தார். மருந்து மாத்திரைகளின் விலையைப் பார்த்து "எழுநூறு ரூபாய் தர்றேன் இனி" என்றார்.

எனக்கு அழுகை வந்தது. "என் தலையெழுத்து- இப்படியாயிடுச்சே" என்றேன்.

"என்கிட்ட வாங்க உனக்கு இஷ்டம் இல்லையா? இல்லை, கையேந்த வேண்டி இருக்கேன்னு வருந்தறியா"என்று கேட்டார்.

ஆனால் எனக்கு அழுகை வந்ததற்கான காரணம் வேறு.

அக்கா சொன்னாள்: "நீங்க இப்படிக் கொடுத்தா மத்தவங்க தப்பா நினைப்பாங்க."

"நீ தப்பா நினைக்கறியா" என்று இவர் கேட்டதற்கு பதில் சொல்லவில்லையாம். எனக்குள்ள, எங்களுக்குள்ள பிரச்னைகள் எதுவுமே தெரியாமல், என் கணவர் இடீர் என்று சிரிப்பதும், தானாகப் பேசிக் கொள்வதுமாய்...

இவருக்கு குணமாகுமா... குணமாகாதா... எவ்வளவு நாளைக்கு அக்காவின் வீட்டிற்கு வந்து அத்தானைத் தொந்தரவு பண்ணப் போகிறேனோ? ஒரு கட்டத்தில் அவர்களுக்கே வெறுப்பாகி, சலிப்பாகி விடாதா? பணம் கொடுக்கா விட்டால் கூடப் பரவாயில்லை. அக்கா கொஞ்சம் அனுசரணையாய்ப் பேசினால் எனக்கு அது நிம்மதியைத் தராதா?

"ஹை... அப்பா வந்துட்டார்..." என்று அக்காவின் குழந்தைகள் குதிக்க, சுய நினைவு பெற்றேன். அத்தான் வந்து விட்டார். ஸ்கூட்டரில் இருந்து இறங்கினார்.

"ஹலோ பாஸ்" என்று குழந்தையின் கன்னத்தைத் தட்ட, குழந்தை சிரித்தது.

"இப்போ தேவலையா - கண்ணனுக்கு" என்று கேட்டவாறு வராண்டாவைத் தாண்டினார். நான் ஒதுங்கி நின்றுக் கொண்டேன்.

அத்தான் டைனிங் டேபிளை நோக்கிச் சென்றார். அக்காவின் குழந்தைகள் என் குழந்தையை உப்பு மூட்டை தூக்கிக் கொண்டு போயின. சிரிப்பும் கும்மாளமும், சந்தோஷமுமாய்க் குழந்தைகளின் வாழ்க்கை. பிள்ளைப்பிராயம் ஞாபகத்திற்கு வந்தது. அக்கா என்னை இப்படித் தூக்கிக் கொண்டு போய் இருக்கிறாள். அப்போதெல்லாம் நான் குண்டாய் இருப்பேன்... அக்கா ஒல்லியாய் இருப்பாள். என்னை அக்காவால் தூக்க இயலாது... ஆனால் சுமை என்று ஒருபோதும் நினைத்தது கிடையாது.

அத்தான் டைனிங் டேபிளில் என் குழந்தையை உட்கார வைத்து, குழந்தைக்கு ஊட்டி விட்டவாறே தானும் சாப்பிட்டார். பிறகு பெட்ரூமுக்குள் சென்றார். பணத்தை எடுத்து வந்து அக்காவின் கையில் கொடுத்து 'உன் தங்கைகிட்ட கொடுத்துடு' என்றார்.

அக்கா வந்து கொடுத்தாள். பணம் வாங்கியபோது ஏதனாலோ அழுகை வந்தது. அக்கா, "இந்த நடிப்பெல்லாம் இங்க வேண்டாம்" என்றாள்.

"சீ... சும்மா இரு..." என்றார் அத்தான்.

'இனி இங்கே வரக் கூடாது' என்று உறுதியாகத் தோன்றியது - எப்போதும் போலவே. ⭘

கொசுக்களின் எதிரி;
ஆரோக்கியத்தின் நண்பன்!

இனிமேல் இல்லை கொசு தொல்லை
உங்கள் வீட்டு ஜன்னல் மற்றும் பாத்ரூம்
வெண்டிலேஷன்களுக்கு
NETLON கொசுவலையைப்
பொருத்துங்கள்.

MURUGAPPA GROUP

NETLON
INSECT SCREEN

இது NETLON INDIA-வின்
(A Division of Parrys Co, Ltd)
தரமான தயாரிப்பு

உத்திர வாதம் உண்டு

B.B. Marketing,
28, Mahatma Gandhi Salai,
Kumaran Nagar, Padi,
Chennai - 600 050.
Phone : 624 8273 (24 Hours)

Authorised Service Centre of Netlon India

மூலிகை மணி கண்ணப்பர் கண் மருத்துவமனை

கிட்டப் பார்வை, தூரப் பார்வை குறைபாடுகள் நீங்க, கண்ணாடி இல்லாமல் கண் பார்வை பெற, அறுவை சிகிச்சை இல்லாமல் (CATARACT) கேடராக்ட் சிகிச்சை, 96 வித கண் நோய்கள், டயாபடீஸ், இரத்த கொதிப்பு, ஆஸ்த்துமா, இருதய சிறுநீரக, சரும நோய்கள் முதலான உடல் நோய்களுக்கு மூலிகைமணி வேலூர் Dr. கண்ணப்பரின் 45 வருட அநுபவ, பின்விளைவுகளற்ற தமிழ் சித்த மருத்துவ சிகிச்சை பெறலாம்.

Dr. கண்ணப்பர் பாபு R.M.P.
(Govt. Regd.)
Regd. Head Office :
அன்னை சகுந்தலா அகம்
22/1, 2வது பாலாஜி அவென்யூ,
திருமலைப்பிள்ளை ரோடு, தி.நகர்,
சென்னை-600 017.
(044)8264699, 8283556
(வித்யோதயா பள்ளி எதிரில்).

மூலிகை மணி கண்ணப்பரின் தரமான மூலிகை மருந்துகள் இங்கு கிடைக்கும்
மதுரை, ஈரோடு, சேலம், பெங்களூர், திருச்சி, தஞ்சாவூர், கோவை முகாம் உண்டு.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்
புதிய ஆன்மீகச் சுற்றுலா.

தொண்டை நாட்டு திருப்பதிகள்.

(காஞ்சி வைணவத் திருத்தலங்கள்)

வழிபடும் ஆலயங்கள்

அருள்மிகு சொன்னவண்ணம் செய்த பெருமாள், அருள்மிகு விளக்கொளி பெருமாள், அருள்மிகு அழகிய சிங்கப் பெருமாள், அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள், அருள்மிகு விஜயராகவப் பெருமாள், அருள்மிகு பாண்டவதூதர் பெருமாள், அருள்மிகு வரதராஜப் பெருமாள், அருள்மிகு ஆதிவராகப் பெருமாள், அருள்மிகு வைகுண்டநாதப் பெருமாள், அருள்மிகு பவளவண்ணப் பெருமாள், அருள்மிகு உலகளந்த பெருமாள், அருள்மிகு சந்திரசூடப் பெருமாள்.

கட்டணம் ரூ. 130/- (சென்னையிலிருந்து) சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்.

விற்பனை பிரிவு
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்,
4, ஈ.வெ.ரா. சாலை, பார்க் டவுன், சென்னை - 600 003.
தொலைபேசி எண் : 584356 / 560294 / 8547335 / 8547346.
பேக்ஸ் எண் : 044-561385

தலைமை அலுவலகம்
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்,
25, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, சென்னை-600 004.
தொலைபேசி எண் : 8547335/8547344/8547346.
பேக்ஸ் எண் : 044-8546620.

DIPR 1015 DISPLAY 98

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

வழக்கமாவே துணிச்சல்காரர் தான் நீங்க. இந்த வாரம் அது அதிக மாவும். நம்பிக்கையும் கூடும். தொலை தூரச் செய்தியொன்றும் உங்களை உற்சாகப்படுத்தும். முக்கியமான சில திட்டங்கள் இந்த வாரம் நிறைவேற சான்ஸ் இருக்கு. சிலர் செயற்கரிய செயலை செஞ்சு எதிரிங்களையே கலங்க அடிப்பீங்க. பிசினஸ்மேன், கமிஷன் ஏஜெண்ட் ஆகியோரா இருந்தா இந்த வாரம் கொழுத்த ஆதாயம்தான். பொதுவாப் பார்த்தா அலைச்சலை உங்களால தவிர்க்க முடியாது. பணப் புழக்கம் சுமார்தான். இரவுப் பயணமா இருந்தா தள்ளிப் போடுங்க.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

மத்தவங்க உங்களை ஓஹோன்னு பாராட்டற அளவுக்கு ஏதாவது செய்வீங்க. பண நிலைமை திருப்தியாவே இருக்கும். அம்மணிகளுக்கு இந்த வாரம் ஷாப்பிங் யோகம்தான். சிலருக்கு புரமோஷன் உறுதி. மாசச்சம்பளக்காரர்களுக்கும் ஒரு புதுப் பாதை தெரியும். ஆனாக்கூட பொதுவா யாருகிட்டயும் வீண் விவாதம் வெச்சுக்காதீங்க. பேச்சுல நிதானம் காட்டுங்க. சிலர் உடல் நலத்துல எச்சரிக்கை காட்டணும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் வாங்கலை ஒத்திப் போடுங்க. பயணத்துல அக்கறை காட்டுங்க.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

வியாபாரத்துறை மற்றும் கலைத் துறையில் உள்ளவர்களுக்கு இது ஆதாயமான வாரம். பெண்கள் ஏதாவதொன்றை - அட்லீஸ்ட் ஒரு பர்ஃப்யூம் பாட்டிலாவது வாங்கியே தீருவார்கள். வக்கீல்கள், போலீஸ் துறையினருக்கு சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். பொதுவாகப் பார்த்தால் வீடு, மனை, நிலம் போன்ற விஷயங்களுக்கு நேரம் சரியில்லை. வெளிநாட்டுலேர்ந்து வர்ற செய்தி நல்ல சேதியாயிருந்தாலும் முடிவெடுக்கறதுல கவனம் முக்கியம். எதையும் ஒரு தடவைக்கு இரண்டு தடவையா சிந்திச்சுச் செயல்படறதுதான் நல்லது.

கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

பண விஷயம் உங்களுக்குத் தாராளமா இருக்கறதோட, எதிர்பாராத சில திடீர்ப் பண வரவுகளுக்கும் சான்ஸ் இருக்குங்க. வியாபாரிங்களுக்கு முன்னேற்றம்னா, எழுத்தாளர்கள், கவிஞர்களுக்கு வளர்ச்சிக்கான பாதை தெரியற வாரம். ஆனாலும் பொதுவாப் பார்த்தா, உடல் நலம் பாதிக்கறதுக்கு சான்ஸ் இருக்கு. குடும்பத்துல சின்னச் சின்ன சலசலப்பு வரலாம்; விட்டுக் கொடுத்துப் போனா பிரச்னை இருக்காது. கொடுக்கல், வாங்கல் சங்கதியெல்லாம் இந்த வாரம் வேண்டவே வேண்டாம். எதுவானாலும் சிரத்தையோடும் கவனத்தோடும் செயல்படுங்க.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

கிரக சஞ்சாரம் உங்களுக்குச் சாதகமா இல்லாததால, அலைச்சலும், வீண் செலவுகளும் உடல் நல பாதிப்பும் வர்றதுக்கு நிறைய சான்ஸ் இருக்கு. ரொமகன் வாழ்க்கை ரொம்பவும் சாதாரணமாத்தான் இருக்கும். புது ஆளுங்ககிட்ட பழகும்போது ஜாக்கிரதையா இருக்கணும். நிர்வாகத் துறைல இருக்கறவங்க ரொம்பவே கவனமா செயல்படணும். கவர்மெண்ட் சமாசாரம் ஏதும் இருந்தா அதால உங்களுக்குத் தொல்லைகள் வரலாம். அவசியமானால் தவிர, பயணத்தை கேன்ஸல் பண்ணிடுங்க.

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


அரசுப் பணியாளர்களுக்குப் பிரச்னை இருக்காது. அரசியல்வாதிகளுக்கு மதிப்பும் அந்தஸ்தும் உயரும். இயந்திரம் தொடர்பான தொழில் செய்யறவங்களுக்கு ஆதாயமான வாரம். போலீஸ், ஆர்மிகாரங்களா இருந்தா, துணிச்சலான காரியங்களுக்காகப் பாராட்டைப் பெறலாம். ரியல் எஸ்டேட் விஷயங்கள்ல லாபமே கிடைக்கும். சிலர் சாதனை செய்யறதுக்கும் சான்ஸ் இருக்கு. பண விஷயமும் திருப்தியாகவே இருக்கும். தொழிலாளர்களுக்கு இந்த வாரம் சரியில்லை. எதிலும் நிதானம் காட்டணும். டூ வீலர்ல போற எல்லாருமே எச்சரிக்கையா இருக்கணும்.

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

இது வரைக்கும் பணக் கஷ்டத்தாலே


நடக்குமென்பார், நடக்கும்!

சிரமப்பட்டீங்களா, கவலையை விடுங்க. இந்த வாரம் எல்லாம் சரியாயிடும். கடன் தொல்லைகளையும் ஒழிச்சுக் கட்டிடுவீங்க. சின்னச் சின்னக் குழப்பங்கள் வரும்னாலும் அதையெல்லாம் சமாளிச்சிடுவீங்க. புது நண்பர்களால அல்லது வெளிநாட்டு நண்பர்களால உங்களுக்குப் பிரயோஜனம் இருக்கும். கவர்மெண்ட்ல உங்களுக்குக் காரியம் ஏதும் ஆகவேண்டியிருந்தா, இந்த வாரம் சுலபமா ஆயிடும். புனிதமான நிகழ்ச்சிகளில் கலந்துக்கிற வாய்ப்பும் இருக்கும். ஸ்பெகுலேஷன் விஷயத்துல மட்டும் உஷாரா இருக்கணும்.



விருச்சிகம் : *(விசாகம் 4 - ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியிருக்கேன்னு அலுத்துக்காதீங்க. அதுக்குத் தகுந்த பலன் நிச்சயமா கிடைக்கும். மதிப்பு, அந்தஸ்தெல்லாம் ஓகோன்னு உயரும். பொருளாதார விஷயத்திலும் பிரச்னை இல்லை. கொடுக்கல், வாங்கல், ஷேர் மார்க்கெட், ஸ்பெகுலேஷன் விஷயங்களும் இந்த வாரம் ஓகோதான்! இருந்தாலும் கூடப் பிறந்தவங்களால சின்னச் சின்ன சங்கடங்கள் ஏற்பட்டு விலகும். மின்சாரம், எரிபொருள், இயந்திரம் தொடர்பான வேலைகளில் இருப்பவர்கள் எச்சரிக்கையா இருக்க வேண்டியது அவசியம். ஸ்தல யாத்திரைகளுக்கும் சான்ஸ் இருக்கு.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

எந்தக் காரியமா இருந்தாலும் கண்ணுல வெளக்கெண்ணெய் விட்டுக்கிட்டுச் செய்யணும். இல்லேன்னா உங்களைக் கவுத்துடும். அலைச்சலைத் தவிர்க்கவே முடியாது. அதனால உடல் நலத்துல கவனமா இருக்கணும். சொந்தக்காரங்களா இருந்தாலும் சரி, நண்பர்களா இருந்தாலும் சரி எல்லார்கிட்டயும் பக்குவமா நடந்துக்க வேண்டியது அவசியம். எதிர்ப்புகள், குறுக்கீடுகள்னு வந்தாலும் பதற்றப்படாம இருந்தா சாமர்த்தியமா சமாளிக்கலாம். கொடுக்கல், வாங்கல் விவகாரங்கள்ல ரொம்பவே உஷாரா இருக்கணும்.



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

ஒரு புதுத் தெம்பும் தன்னம்பிக்கையும் வந்து, வர்ற சங்கடங்களையும் தொல்லைகளையும் சமாளிப்பீங்க. உங்களோட திட்டங்களெல்லாம் நிறைவேறுகிற சூழ்நிலைகள் இந்த வாரம் கனிந்து வரும். இருந்தாலும் குடும்ப நிலை திருப்திகரமா இருக்காது. பொருளாதார விஷயமும் திருப்தியா இருக்காது. முக்கியமான தேவைகளுக்குக் கடன் வாங்கற சூழ்நிலையும் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்குத் திடீர் இட மாற்றத்துக்கு சான்ஸ் இருக்கு. புது முயற்சிகள் இந்த வாரம் வேண்டாம். பயணத்துலயும் எச்சரிக்கையா இருக்கணும். நாக்கைக் கட்டுப்படுத்த முடியாம, அனாவசியமா எதையும் முழுங்கி வைக்காதீங்க.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்களோட வாக்கு சாதுர்யமும் செயல் திறமையும் உங்களை ஓகோன்னு கொண்டு போகும். குடும்பத்துலயும் குதூகலத்துக்குப் பஞ்சமிருக்காது. அரசு ஊழியர்கள், நிர்வாகத் துறையில் உள்ளவர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் கதவைத் தட்டிக்கிட்டு தானே வந்து சேரும். வியாபாரிகளுக்கும் வளர்ச்சிதான். ஆதாயமே பார்க்கலாம். ஆனாலும் எச்சரிக்கையா இல்லேன்னா சின்னச் சின்னப் பிரச்னைகள் வரும். விழிப்போட இருந்தீங்கன்னா எந்தச் சவால் வந்தாலும் ஈஸியா ஜெயிச்சிடுவீங்க.



மீனம் : *(பூரட்டாதி 4 -ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்க தோற்றத்திலயே ஒரு வசீகரம் கூடும். விருந்து - கேளிக்கைன்னு மனம் இழுக்கும். ஆனாலும் உஷாரா இருங்க. வியாபாரம், மற்ற தொழில்கள் எதுவானாலும் ஓரளவுக்குத்தான் பலன் இருக்கும். வாகன விஷயத்தில் கஷ்டம் நஷ்டமும் வர்றதுக்கு சான்ஸ் இருக்கு. குடும்பத்துல சின்னதா சலசலப்பு வரும். வீண் அலைச்சலும் இருக்கும். பொருளாதார விஷயம் சாதாரணம்தான். கொடுக்கல், வாங்கல் விஷயத்துல ரொம்பவே எச்சரிக்கை தேவை. தேக ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்துங்க. அதிகாரிகளோட அதிருப்திக்கும் சான்ஸ் இருக்கு. ●



சிம்மராசிக் காரரான எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி தொலைதூரப் பயணங்களை இந்த வாரம் தவிர்க்கறது நல்லது.

(40–ம் பக்கத் தொடர்ச்சி...)

வுக்குக் கிரீடம் சூட்டிய மாதிரி, திருமூர்த்தியின் தலையில் பின்னல் போட்டார்கள். கொண்டாடினார்கள். திருமூர்த்தி இனி சாதாரணமானவனில்லை. 'இரயில்வே எம்ப்ளாயி!' கையெழுத்துப் போட்டால் சம்பளம். திருமூர்த்தி செத்துப் போனாலும் மகளுக்குப் பென்ஷன் உண்டு. வேலை உண்டு.

சடங்கு முடிந்ததும் மீண்டும் போதையுடன் கூடிற்று சபை.

"பொட்டப்புள்ள டிகிரி படிச்சிருக்காளாம். எவன் வீட்டுக்கோ போய் கழுவறவதான...! இவன் படிச்சிருக்கக் கூடாதா? காங்கி வேலதான் கிடைக்கப் போகுது. தண்டவாளத்தைத் தூக்கிப் போடற வேலைதான். சரஸ்வதி மட்டும் ஆம்பளைன்னா அவளுக்குத்தான் வேலை வாங்கித் தருவேன்" திருவண்ணாமலை மாமாவுக்கு போதை கூடிற்று.

சரஸ்வதி ஏதோ ஒரு அறைக்குள் சிறை போனாள். தன்னை முன்னிறுத்தி அண்ணனை அவமானப்படுத்துவதைத் தாங்க முடியாமல் தலைமறைவானாள்.

அன்றைய நீல விளக்கொளி இரவு, திருமணமானதிலிருந்து சந்திக்காத இரவாய் திருமூர்த்திக்கு அமைந்தது. முதலிரவில் கூட காட்டாத நாணங்களை இப்போது காட்டினாள் மனைவி. பேச்சில் நிறையக் கொஞ்சல்.

"ஏங்க செட்ல்மெண்ட் பணம் மூணு லட்சம் வருமா?" நெஞ்சில் கோலம் போட்டாள். காதருகே வாய் வைத்துக் கேட்டாள்.

'உனக்கெல்லாம் எதுக்கு மீசை? ஆயிரம் ஆயிரமா சம்பாதிக்கிற சம்பளக்காரனாட்டம்...! கல்யாணமான நாள்ல இருந்து ஒரு புடைவை எடுத்துத் தந்ததுண்டா?' – இத்தனை நாளும், வழக்கமாக அவள் பாடிய ஒப்பாரி தான் காதுக்குள் இருந்தது.

"என்னங்க எது கேட்டாலும் உம்முனு பதில் சொல்லாம இருக்கீங்க... .மாமா செத்த துக்கம் போலையா? அதையே நினைச்சிருந்தா எப்படி? எனக்குத் துக்கம் இல்லையா? மாமா நல்லதுதான் செஞ்சிருக்கார். இத்தனை நாள் உங்களை கரிச்சிக் கொட்டினாலும் இப்போ நல்லது செஞ்சிருக்கார். ரிட்டையரானதுக்கப்புறம் செத்திருந்தா உங்களுக்கு வேலை கிடைக்குமா? வேலையில் இருக்கும்போதே செத்திருக்கார். உங்களுக்கு வேலை கிடைக்கணும்னுதான்..."

வாய் திறக்கவில்லை.

மீசை இருந்த இடத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டான். காரியத்துக்காக காலையில் மழித்து விட்டார்கள். காது வரைக்கும் நீண்டு வளர்ந்திருந்த மீசை. இனி மழிக்கவோ நீட்டவோ வேண்டாமென்று தோன்றிற்று. மனைவியின் வார்த்தைகளை அவன் வாங்கிக் கொள்ளவில்லை.

படுக்கையில் இருக்க முடியவில்லை. வீட்டில் கூட இருக்க முடியவில்லை. எல்லாமே பொய்யாக, எல்லோரும் பொய்யர்களாக இருப்பது போல் தோன்றிற்று.

சடக்கென்று படுக்கையிலிருந்து எழுந்தான்.

"ஏங்க...?"

"நான் லாரிக்குப் போறேன்."

அறை வாங்கின மாதிரி எழுந்து உட்கார்ந்தாள். கனவுகளும், கற்பனைகளும் தூள் தூளாய்ச் சிதறின.

திருமூர்த்தி உள்ளே நிற்கவில்லை. எழுந்து வேகமாய் வெளியே வந்தான்.

ஹாலில் தூங்கிக் கொண்டிருந்த மாமாவை எழுப்பினான். அவர் பெரிய கொட்டாவியுடன் எழுந்து உட்கார்ந்தார்.

"போதை தெளிஞ்சுதா?"

முறைத்துப் பார்த்தார். "என்னடா பேசறே?"

"ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு குறை மாமா. எனக்குப் படிப்பேறாதது குறை. உங்களுக்குக் குடிப்பழக்கம் குறை. எனக்குப் பணம் சம்பாதிக்கத் துப்பில்லை. நீங்க இருந்த சொத்தையெல்லாம் வித்து, குடிச்சிட்டீங்க..."

"டேய், என்னையே எதுத்துப் பேசறியா?" கொஞ்சமாய் போதை மிச்சம் இருந்தது. கண்கள் சிவந்து மின்னின.

"கோபிச்சுக்காத மாமா. நான் வேலைக்குப் போறேன். லாரி டிரைவர் வேலைக்குத் தான்... சொல்லிட்டுப் போகத்தான் எழுப்பினேன்."

மாமா கண்கள் உருட்டிப் பார்த்தார்.

"என் படிப்புக்கேத்த வேலை. என் புத்திக் கேத்த வேலை லாரி ஓட்றதுதான் மாமா. உங்களை இன்னொண்ணு கேட்கறேன், தப்பா நினைக்க மாட்டீங்களே... அப்பாவுக்கு நான் மட்டும்தான் பொறந்தேனா? தங்கச்சி பொறக்கலை...? என்னைப் பத்தியே பேசறீங்களே... அப்பாவோட பணத்துல, அப்பாவோட வேலையில தங்கச்சிக்கும் ஏன் உரிமை இல்லை? பொண்ணா பொறந்ததால அவளைக் கண்டுக்காம விடறது என்ன நியாயம்? சரஸ்வதி பையனா பிறந்திருந்தா என்னை ஒதுக்கிட்டு அவளுக்குத்தான வேலை வாங்கித் தந்திருப்பீங்க... கஷ்டப்பட்டு நல்லா படிச்சிருக்கா... திறமை இருக்கு; அதை மதிக்கணும் மாமா... அப்பா வேலையைத் தங்கச்சிக்கு வாங்கித் தாங்க... என் புத்திக்கு லாரிதான் லாயக்கு. கவலைப்படாதீங்க. இனிமே சிக்கனமா செலவழிச்சி வீட்டுக்குக் காசு தந்திடறேன்."

மாமா பதில் பேச முடியாமல் தடுமாறினார்.

திருமூர்த்தி சட்டை எடுத்து மாட்டிக் கொண்டு வெளியே வந்தான். நிலா வெளிச்சத்தில் நடந்தான். ●



ஆஸ்துமாவா? எஸ்னோபீலியாவா? சைனஸா? காசநோயா?

இனி கவலையே வேண்டாம்



மூக்கில் நீர் வடிதல், சளி, தும்மல், மூக்கடைப்பு, இருமல், மூச்சுத்திணறல், உடல்மெலிதல், மலச்சிக்கல், பசியின்மை, உடல் நடுக்கம், நரம்பு தளர்ச்சி இவைகளை ஆரம்ப காலத்தில் கவனிக்காவிட்டால் மேலே கூறிய நோய்கள் ஏற்படும். இவைகள் ஏற்பட காரணம், நம் உடலிலுள்ள சிறுநீரகங்கள் இரத்தத்திலுள்ள கழிவு நீரைப் பிரித்து வெளியேற்றுகின்றன. சிறுநீரகங்களில் வடிகட்டும் பகுதியில் உப்புப் படிவங்களால் ஏற்படும் குளிர்ச்சித் தன்மையால் சுருக்கம் ஏற்படுவதினாலே, கழிவு நீர் முறைப்படி முழுவதும் இரத்தத்திலிருந்து பிரிக்கப்பட முடியாமல் இரத்தத்திலேயே ஓரளவு கலந்து இருந்து விடுகிறது. அடுத்தாற் போல் இரத்தம் மார்புப் பகுதியில் உள்ள நுரையீரலில் சுரக்கும் நீருடன் கலந்து சுத்தப்படுத்தப்படுகிறது. சுத்தப்படுத்தப்படும் போது பிரிக்கப்படும் கழிவுநீர், தும்மல் மூலம் மூக்கில் நீராக வெளியேறுகின்றது. இந்நீர் இறுகி மூக்கடைப்பு ஏற்படுகிறது. மூக்குச்சிந்தும் போது இது மூக்குச்சளியாக வெளியேறுகின்றது. இம்முறைகளில் வெளியேற்றப்படாத எஞ்சிய கழிவு நீரே நுரையீரலில் படிந்து விடும் கபம் எனப்படுவதாகும். மேலும் உடலில் தூய்மையான இரத்த உற்பத்தியும், சீரான இரத்த ஓட்டமும் இருந்தால்தான் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் பழுதடையாமல் நல்ல நிலைமையில் இருக்கும். வேப்பிலை, துளசி, அத்தி, அருகம்புல், வில்வம் போன்ற தெய்வீக மூலிகைகளுடன், அற்புத மருத்துவ குணம் கொண்ட ஆடாதொடை, கற்பூரவல்லி, தூதுவளை, கீழாநெல்லி போன்ற மூலிகைகளை உட்கொள்வதால் உடலில் தூய்மையான இரத்த உற்பத்தியும், சீரானதடையற்ற இரத்த ஓட்டமும், நோய் எதிர்ப்பு சக்தியும், ஒவ்வாமை (Allergy)யால் ஏற்படும் நோய்களையும் பக்க விளைவு பின் விளைவு இன்றி குணப்படுத்துவது உறுதி ! மேலும் ஆலோசனைக்கு -

தெய்வீக மூலிகை வைத்தியர்கள்



தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, S/o.Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B. No: 30, No: 3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ : 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பிரின்ஸ் மேனர் பக்கத்தில் கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8 ✆ : 6424285, 6427638

Singapore Enquiry : Mrs. Renuka, Blk 101, #04, -176, Jurong East Street-13, Singapore - 600 101. ✆ : 0065 - 5621218

1998 வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மருந்தினைப் பெற முகாம் விவரம்.

(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2-ந் தேதி	- வேலூர் (N.A.)	பிற்பகல்	1 to 2 மணி வரை ஹோட்டல் கன்னா (லக்கா), 16, ஆஃபீஸர்ஸ் லைன், ✆ : 0416 / 23060.
2-ந் தேதி	- காஞ்சிபுரம்	மாலை	5 to 6 ராஜம் லாட்ஜ், பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு, ✆ : 04112 / 22519.
1,3,10,17,18,19,20,27,28-ந்தேதி - சென்னை		காலை	9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி	- கடலூர் (S.A.Dt.)	காலை	9 to 11 ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 / 30707, 30717
4-ந் தேதி	- விழுப்புரம்	பிற்பகல்	2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில், ✆ : 04146 / 22962.
4-ந் தேதி	- திருவண்ணாமலை	மாலை	5 to 6 ராதா லாட்ஜ் பஸ் நிலையம் எதிரில் ✆ : 04175 / 22536.
9-ந் தேதி	- பெங்களூர்	காலை	11 to 12.30 ஹோட்டல் பிராட்வே, (கல்பனா தியேட்டர் அருகில் கெம்பே கவுடா ரோட் ✆ : 2266374
9-ந் தேதி	- ஓசூர்	மாலை	3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 / 22699.
12-ந் தேதி	- சேலம்	காலை	11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 / 448333.
12-ந் தேதி	- ஈரோடு	மாலை	4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424 / 226611 / 12 / 13 / 14/15/16/17/18
13-ந் தேதி	- கோயம்புத்தூர்	காலை	9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம் ✆ : 0422 / 302211, 302220
14-ந் தேதி	- மதுரை	காலை	9 to 11 ஹோட்டல் கிரான்ட்ஸ் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ : 0452 / 743941
14-ந் தேதி	- தஞ்சாவூர்	மாலை	5 to 6 அசோகா லாட்ஜ், ✆ : 04362 / 30021 / 30022
15-ந் தேதி	- திருச்சி	காலை	9 to 11 ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில், ✆ : 0431 / 460545.
15-ந் தேதி	- நாமக்கல்	பிற்பகல்	2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, ✆ : 04286 / 20433
22-ந் தேதி	- தர்மபுரி	காலை	9 to 10 ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், ✆ : 04342 / 60226.
22-ந் தேதி	- திருப்பூர்	பிற்பகல்	2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ், ✆ : 0421 / 740416.
22-ந் தேதி	- உடுமலைபேட்டை	மாலை	6 to 7 குறிஞ்சி லாட்ஜ், பஸ் நிலையம் எதிரில் ✆ : 04252 / 24353.
23-ந் தேதி	- திண்டுக்கல்	காலை	9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம் ✆ : 27017.
23-ந் தேதி	- தூத்துக்குடி	மாலை	5 to 6 ஹோட்டல் ஆம்னின், தேவர் புரம் ரோடு, ✆ : 0461 / 327780
24-ந் தேதி	- திருநெல்வேலி	காலை	9.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சித்தாபதி, மதுரை ரோடு, ✆ : 0462 / 333312.
24-ந் தேதி	- நாகர்கோவில்	பிற்பகல்	2 to 3 ஹோட்டல் சரண்யா, மீனாட்சிபுரம், ✆ : 04652 / 25688.
25-ந் தேதி	- விருதுநகர்	காலை	9 to 10 அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 / 45537.
25-ந் தேதி	- கரூர்	பிற்பகல்	2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், நுகன் பஜார், ✆ : 63763.

Dr.CKM
DIVINE HERBAL CENTRE

தகவல்: டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 23 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு M.O. அல்லது D.D. அனுப்பவும்.

7-ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 6 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589



யூடிஐ-ன் மன்த்லி இன்கம் பிளான் 98 (III)

ஆண்டிற்கு 12.5% என்றவாறு உறுதியான மாதாந்தர வருமானத்தை 5 ஆண்டுகளுக்கும் அளிக்கிறது

ஆண்டிற்கு 13.25% வட்டியுடன் வருடாந்தர வருமானம் மற்றும் க்யூமுலேடிவ் தேர்வுகளுடன்.

யூடிஐயின் மன்த்லி இன்கம் பிளான் 98 (III) ஒரு பாதுகாப்பான, கூடவே மதிப்புமிகு முதலீடு ஆகும். இதன் சிறப்பம்சங்கள்:

- **தேர்வுகள்:** மாதாந்தர வருவாய், வருடாந்தர வருவாய் மற்றும் க்யூமுலேடிவ் தேர்வுகள்.
- **மாதாந்தர வருவாய் தேர்வு:** ஆண்டிற்கு 12.5% அனைத்து 5 ஆண்டுகளுக்கு மாதாந்தரமாக வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டிற்கான பின் தேதியிட்ட மாதாந்தர வருவாய் விநியோக வாரண்டுகள் முன்கூட்டியே உங்களுக்கு அனுப்பப்படும்.
- **வருடாந்தர வருவாய் தேர்வு:** ஆண்டிற்கு 13.25% உறுதிப்படுத்தப்பட்ட வருடாந்தர வருவாய் அனைத்து 5 ஆண்டுகளுக்கு.
- **க்யூமுலேடிவ் தேர்வு:** ரூ. 5000 குறைந்தபட்சம் ரூ. 9314 ஆகிறது முதிர்வடையும்போது.
- **மூலதன மதிப்புயர்வு:** மூன்று தேர்வுகளிலும் மூலதன மதிப்புயர்வுக்கு வாய்ப்பு உண்டு.
- **காலவரை:** அனைத்து மூன்று தேர்வுகளுக்கும் 5 ஆண்டுகள்.
- **பாதுகாப்பு:** திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத் தொகை முதிர்வடையும் போது பாதுகாப்பாக இருக்கும் என உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ள ரிட்டர்ன் மற்றும் முதிர்வடையும் போது மூலதன பாதுகாப்பு ஆகியவை யூனிட் டெவலப்மெண்ட் ரிசர்வ் ஃபண்டின் உத்தரவாதம் பெற்றுள்ளது. காலவரைக்கு முன்பே மறு கொள்முதல் செய்ய விரும்பினால் இந்த உத்தரவாதம் பொருந்தாது. மேலும், இத்தகைய கொள்முதல்களின் மறு கொள்முதல்விலை அப்போது நிலவிவரும் என்ஏவி அடிப்படையில் அமையும்.
- **லிக்விடிட்டி:** 3 ஆண்டுகளுக்குப் பிறகு என்ஏவி அடிப்படையிலான விலையில் திரும்ப வாங்கும் வசதி கூடவே எக்ஸ்சேஞ்ச்-ல் பட்டியலிடும் வசதி - அனைத்து மூன்று தேர்வுகளுக்கும் கீழ்.
- **குறைந்தபட்ச முதலீடு:** மாதாந்தர வருவாய் மற்றும் வருடாந்தர வருவாய் தேர்வுகளின் கீழ் ரூ. 10,000 மற்றும் க்யூமுலேடிவ் தேர்வின் கீழ் ரூ. 5,000. உச்சவரம்பு ஏதும் இல்லை.
- **வரிச்சலுகைகள்:** வருமான வரிச்சட்டம் 1961 பிரிவுகள் 80L, 48 மற்றும் 112-ன் கீழ்.
- **மூலத்தில் வரிக்கழிப்பு:** வருமான வரிச்சட்டம் 1961-ன் படி.

அதோடு வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு 54 இஏ-ன் கீழ் மூலதன லாப வரிவிலக்கு

பிளான் ஆகஸ்ட் 19, 1998 வரை நடப்பிலிருக்கும்

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் வளமான எதிர்காலத்திற்காக.

CWDL UTI TAM - 104.98

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: யூடிஐ அலுவலகங்கள் சென்னை போன்: 517101/517190 மதுரை போன்: 38186 திருச்சி போன்: 760060
கோவை போன்: 214973 யூடிஐ பேங்க் லி. சென்னை போன்: 8231085-89 மற்றும் முக்கிய பிரதிநிதிகள் ஏஜெண்டுகள்.

• நாடக அரங்கில் கலவரம்

அரை நூற்றாண்டுக்கு முன் மகாத்மாவின் குரலை ஒரேயடியாக மௌனிக்க வைத்த பாவத்துக்கு நாது ராம் கோட்ஸே வட்டியும் முதலுமாக இன்று அனுபவிக் கிறான். ''மீ நாதுராம் கோட்ஸே போல்தோய்'' (நான் நாதுராம் கோட்ஸே பேசுகிறேன்) என்று அவன் பேச ஆரம்பித்த உடனேயே அவன் குரல்வளையை அமுக்கி விட்டார்கள்!

நாதுராமை எண்ணத்தில் கருத்தரித்த பிரதீப் தால்வியும், தயாரிப்பாளர் உதய் துராத்தும், 18 ஆண்டுக் காலம் அதை மேடையில் பிரசவிக்கக் காத் திருந்தனர். (பழைய, காங்கிரஸ் அரசு அனுமதிக்கவில்லை.) இப் போது, காத்தது வீண் போகாமல், மேடையில் உதித்தவுடன் நாதுராம் வீராவேசமாகப் பேசி னான்... அதுவும் எத்தகைய பேச்சு?

"உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்ள காந்திஜிக்குப் பழச்சாறு தேவையில்லை; அகதிகளாய்



கொதிக்கிறது மும்பை... வெடிக்கிறது பூகம்பம்!

இங்கே விரட்டப்பட்டிருப்பவர்களின் குருதியைக் குடிக்கட்டும்..."

"இரத்தத்துக்கு ரத்தத்தாலும், உயிருக்கு உயிராலும், வன்முறைக்கு வன்முறையாலும் தான் பதில் சொல்ல முடியும்..."

"அஹிம்சை என்பது நம்மை ஹிம்சைப் படுத்துவதற்குத்தான்."

...போன்ற கனல் தெறிக்கும், இன்றைய அரசியல் சூழ்நிலையில் கலவரத்தை ஏற்படுத்தக்கூடிய, காரசாரமான பேச்சு!

முதல் முறை, தாதரிலுள்ள சிவாஜி மந்திரில் நாடகம் அரங்கேறியபோது எக்கச்சக்கமான கைதட்டல்கள்!

"பாராட்டியது அனைத்தும் கோட்ஸே வின் உறவினர்களும், அவன் சார்ந்திருந்த ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தினரும்தான். கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்த ஒரு கும்பலுக்கு, ஒவ்வொரு வசனமும் தெரிந் திருந்தது. நாதுராம் பேச ஆரம்பிக்கு முன் னரே இவர்கள் கைதட்ட ஆரம்பித்து விட் டனர்" என்பது, பார்வையாளர் ஒருவரின் வாக்குமூலம்!

ஏதோ நாதுராமின் சொந்தக் கருத்து என்ற அளவில் விட்டிருந்தாலும் பரவா யில்லை; அவன் செய்கையை, காவல் துறை யினரும், ஜெயிலரும் நியாயப்படுத்தும் ("நான் மட்டும் நீதிபதியாக இருந்திருந்தால், நாதுராமை விடுதலை செய்திருப்பேன்") வசனங்கள் வேறு!

இத்தனைக்கும் பிறகு, உஷா மேத்தா போன்ற பழுத்த காந்தியவாதிகளால் சும்மா இருக்க முடியுமா? நேராகப் பிரதமருக்கே 'வார்னிங்' கொடுத்து விட்டார்.

கொஞ்ச காலமாக உப்புச் சப்பில்லாமல் அரசியல் நடத்திக் கொண்டிருந்த காங்கிரஸ்காரர்களுக்கும் நாதுராம் நாடகம் ஊறுகாயாய் அமைந்தது. முரளி தேவ்ரா, 500 தொண்டர்களுடன் நாடகம் நடக்க இருந்த சிவாஜி மந்திர் முன் போராட்டம் நடத்தத் தயாரானார். அதற்குள் பார்லி மெண்டில் இந்த நாடகம் பற்றிய கூக்குரல் அதிகமாக, பிரதமர் ஆவன செய்வதாக அவசர வாக்குறுதியளித்தார்.

இங்கே கலாசார அமைச்சர் பிரமோத் நாவல்கர் மீது ஆவேசமாக எல்லோரும் பாய்ந்தனர். "அரசியல் விமர்சன நாடகங் களையும், தரக்குறைவான காமெடிகளை யும் தடைவிதித்தவர்கள், எப்படி நாது ராமைப் பேச விட்டனர்?" எனக் கோபப் பட்டனர்.

நவால்கரும் வேறுவழியின்றி, 'நாடகத் தைப் பார்த்து விட்டுத் தீர்ப்பளிக்கிறேன்' என அரங்கை நோக்கிப் புறப்பட்டு விட் டார்.

இவரைக் கண்டதும், தியேட்டர் வாயிலில் கலாட்டா செய்து கொண்டிருந்த கூட்டத்துக்கு வெறிபிடித்து விட்டது. போஸ்டர்கள், பானர்களை எல்லாம் கிழித் தெறிந்து, பார்வையாளர்கள் கையிலிருந்த டிக்கெட்டுகளைப் பறித்து, இவருக்கெதி ராக கோஷமெழுப்பி, அந்தப் பக்கம் சென்ற 'பெஸ்ட்' பஸ் மீது கல்லெறிந்து.. ஏக ரகளை!


போலீஸ் தடியடியில் ஈடுபட, பாலா நந்தகாவ்கர், விஜய லோகே போன்றோர் தலைமையில் சிவசேனை ஆதரவாளர்கள், "நாடகத்துக்குத் தடைவிதிக்க இந்தக் காங்கிரஸ்காரர்கள் யார்? நாடகம் நடந்தே தீரும்! நிறுத்தப்பட்டால் வேறெந்த நாடகத் தையும் நடக்க விட மாட்டோம்" என்று எதிர் குரல் எழுப்பி, புதிய திருப்பத்தை உரு வாக்கினர். ராஜ்தாக்கரேவிடமிருந்து வேறு, நாடகத்தை நடத்தும்படி நவால்கருக்கு ஃபோன் பறந்தது!

இது காந்தி - நாதுராம் மோதலா? காங்கிரஸ் - சிவசேனை சண்டையா என்று புரியாமல் குழம்பி, புதிய நாடகத்தின் க்ளைமாக்ஸுக்காகக் காத்து நின்றனர் அப்பாவி ஆடியன்ஸ்!

கடைசியில், மத்தியிலிருந்து 'பிரஷர்' அதிகரித்ததால், "நாடகம் நடத்தப்படமாட் டாது" என்று மாநில அரசு 'அஃபிஷிய லாக' அறிவித்து விட்டது! இதில் வேடிக்கை என்னவென்றால், மகாத்மா பிறந்த மாநில மான குஜராத்தில், இதே நாடகத்தின் குஜராத்தி வடிவம், ஒன்றரையாண்டுகளாக, 60-க்கும் மேற்பட்ட முறை, எந்த முணுமுணுப்புமில்லாமல் அரங்கேறியிருக் கிறது!

மும்பையிலிருந்து :

ஜேயார்



- ஜூனியர் தேஜ்

Ruchi

ருசி ஊறுகாய்கள் வீட்டில் செய்த சுவை போல




RUCHI AGRO PRODUCTS PRIVATE LIMITED

50, GIRIAPPA ROAD, CHENNAI - 600 017. PH. 8269290, 8269438, 8241348

இன்டர்நெட் பூத் அமைக்க அழைக்கிறோம்!

தொழில் முனைவோர் அனைவரும் இன்டர்நெட் பூத் அமைக்கலாம்

இளைஞர்களே! நீங்கள் சாதனை படைக்க ஒரு அரிய வாய்ப்பு. இதோ ஒரு புதிய, வேகமாக வளர்ந்து வரும் தொழில் இன்டர்நெட் பூத். இனி வேலை வாய்ப்பு இல்லையெனில் கவலை வேண்டாம். சுயமாக சம்பாதிக்க நினைக்கும் இளைஞர்களே! வளர்ந்து வரும் கணிப்பொறி யுகத்தில் இன்டர்நெட் பூத் அமைத்து நீங்களும் அதிவேகமாக முன்னேறலாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



இன்டர்நெட் பூத் அமைக்க விருப்பம் உடையவர்களுக்கு தொழில் ரீதியான கம்ப்யூட்டர் பயிற்சியும், இன்டர்நெட் நிலையம் நடத்துவதற்கான முழுப் பயிற்சியும் நாங்கள் அளிக்கிறோம். இன்டர்நெட் பூத் அமைத்து தருகிறோம்.

ரூ. 75,000/- முதலீட்டில் மாதம் ரூ.20,000/- சம்பாதிக்கலாம்.

SPANCO INNOVATIVE TECHNOLOGIES

31, (1 Floor), South West Boag Road,
(Near) Krishnan Koil, T.Nagar, Chennai - 17.
✆ 4331207 Pager; 9628441868 Fax: 044-4331207



சிதைந்து
சிதிலப்பட்டுக்
கொண்டு
இருக்கிறது வீடு
இப்பொழுதெல்லாம்
முன்றிலில் நெல் காய்வதில்லை
அணில்கள் ஓடி
விளையாடுவதில்லை
பட்டாளையில்
ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்ததும்
குருவிகள் கூடுகட்டிப் பறந்து
கொண்டிருந்ததும்
பண்டொரு காலம் என்றானது
அடகுக்குப்
போயிருக்கிறது திருவிளக்கு

அடுக்களையில்
அவசியத்துக்கு மட்டுமே எரிகிறது
நெருப்பு
பசும்பாலெல்லாம் கனவாக
நெய்வாசமெல்லாம் நினைவாகத்தான்
விருந்து
எதிர்கொள்ளவும் முடியவில்லை
விருந்துக்குப்
போக முடிவதுமில்லை, வெட்கம்
கெட்டு.

பாழடைந்து கிடக்கிறது
புழக்கடைத்
தோட்டம்
வீட்டைச் சிறிது காலமாகவே
விலைபேசிக் கொண்டிருக்கிறோம்
ஈன கிரயத்துக்கே
கேட்கிறார்கள்.
தாத்தாதான்
தெய்வமாக இருந்து
காப்பாற்றி வைத்துக்
கொண்டிருக்கிறார்
இன்னமும் அழிந்து போகாது.

— விக்கிரமாதித்யன்

HMVயின் பெருமைமிகு வெளியீடு

திருமதி நித்யஸ்ரீ அவர்கள் தனது தேனினும்
இனிய குரல் வளத்தில் பாடி
வெளிவந்துள்ள கேசட்.



திருமதி D.K. பட்டம்மாள் பாடிய காலத்தால்
என்றென்றும் அழியாத பிரபலமான
12 பாடல்களை, அவரது இசை வாரிசான
நித்யஸ்ரீ அவர்கள் இந்த கேசட்டில்
உங்களுக்காக பாடியுள்ளார்.

RPG

அனைத்து கேசட் கடைகளிலும் கிடைக்கும்

HMV

குறையொன்றுமில்லை 69

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

அக்னியில் போட்டது எப்படி விருத்தியாகும் என்று கேட்டால் பூமியைப் பற்றியும் விவசாயமாகிற காரியம் பற்றியும் உதாரணம் சொல்வது தகுமா? – இந்தக் கேள்வியுடன்தான் போன வாரம் நிறுத்தினேன்.

உபநிஷத்தில் பாருங்கள்... ஒன்றினுடைய தோற்றம் மற்றொன்றிலிருந்து என்று பஞ்ச பூதங்களின் தோற்றம் குறித்து அழகாகச் சொல்லியிருக்கிறது.

ஆகாசத்திலிருந்து வாயு உண்டாயிற்று
வாயுவிலிருந்து அக்னி உண்டாயிற்று
அக்னியிலிருந்து ஜலம் உண்டாயிற்று
ஜலத்திலிருந்து ப்ருத்வி என்கிற இந்த பூமி உண்டாயிற்று.

ஆகவே பூமிக்கு மூலம் எது...?

ஜலம்! ஜலத்துக்கு மூலம் எது? – அக்னி! பூமிக்கு காரணம் எது? அக்னி. அக்னிக்கு காரியம் எது என்று கேட்டால் பூமி!

பூமி காரியம், அக்னி காரணம்! காரணத்திலிருக்கிற குணமானது காரியத்திலேயும் இருக்கும்.

மண்ணுக்கு இருக்கிற குணம் அதிலிருந்து தோன்றிய பானைக்கும் உண்டு.

பூமியில் நாம் கண்கூடாகப் பார்க்கிறோம் பல மடங்கு விருத்தி அடைவதை. காரியமாகிற பூமியிலே இது நமக்குத் தெரிவதாலே, காரணத்தில் இருக்கும் குணம்தான் காரியத்திலும் இருக்கும் என்பதும் சாஸ்திர திருஷ்டியாகத் தெரிவதனாலே, காரணத்திலும் அந்த குணத்தை ஏற்க வேண்டும்.

அக்னியில் சேர்க்கப்படக் கூடிய வஸ்து பன்மடங்கு விருத்தியாகிப் போய்ச் சேர்கிறது.

காரணமாகிற எந்த பரப்ரும்மத்தை நாம் உணர வேண்டுமானால் அவனால் உண்டான காரியமாகிற இந்த உலகத்தைக் காட்டித் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் சாஸ்திரம் சொல்கிறது.

இங்கேயும், காரணமான பூமியைப் பார்த்தோமானால், காரியமாகிற அக்னியின் ஆற்றலை – பல்மடங்கு விருத்தி செய்யும் ஆற்றலை அறியலாம்.

கண்கூடாக, நேராகப் பார்க்காவிட்டாலும் அது சாத்தியம் என்று தெரிகிறது.

ஆகையினாலே, எல்லாவற்றையும் ஸ்தூலக் கண் கொண்டுதான் பார்க்க வேண்டும் என்பதில்லை... சாஸ்திரக் கண் கொண்டு பார்த்தால்தான் சில விஷயங்கள் புலப்படும்.

சாந்தோக்ய உபநிஷத்தில் ஒரு கதை...

ஆசார்யன் சிஷ்யனை உப்பு கொண்டு வரச் சொல்கிறார்.

'இது என்ன?' என்று கேட்கிறார்.

"உப்பு" என்கிறான் அவன்.


'ஜலத்திலே போடு' என்கிறார்.

ஜலத்தில் போட்டால் உப்பு கரைந்து போய்விடுகிறது. 'உப்பு எங்கே? இருக்கிறதா?' என்று கேட்டால் 'இல்லை' என்கிறான் சிஷ்யன்.

ஏன்?

கண்ணாலே பார்க்க முடியவில்லை என்பதால்!

பார்த்தபோது 'உப்பு' என்று சொன்னான். கண்ணால் பார்க்க முடிந்தது. ஜலத்திலே போட்டுக் கரைத்த பிற்பாடு உப்பு இல்லை என்கிறான்!





அருள்வாக்கு

என்ன கார்யம், கடமை பண்ணினாலும் பாரத்தை அவன் தலையில் போட்டுவிட வேண்டும். பட்டுக்கொள்ளாமல், ஆனாலும், பெர்ஃபெக்டாகப் பண்ண வேண்டும். இதுதான் நிஷ்காம்ய கர்மா. அவன் தலையில் போடுவது என்பதுதான் பக்தி. அப்புறம் அவனுடைய தலையிலே போட எந்த பாரமும் இல்லாமல் ஜீவனுடைய கர்மச் சுமை முழுதும் தீர்ந்து போய்விடும். 'தான் எதுவும் பண்ணாதவன், தன்னை எதுவும் என்னவும் பண்ண முடியாது' என்ற நிலைக்கு ஜீவன் வாஸ்தவமாகவே போய்விடுவான்.

அப்புறம் இவனுக்குப் பாரம் தெரியாமலே ஈச்வரன் இவன் மூலமாக லோகக்ஷேமத்துக்காக அநேக கார்யங்களைச் செய்தாலும் செய்விக்கலாம். ஜனகர் ராஜ்ய "பாரம்" வஹித்தது கூட இப்படித்தான். ஆனால் அவருக்கு அது பாரமாகவோ, தாம் அதை வஹிப்பதாகவோ எண்ணம் இருந்தே இருக்காது. 'தூக்கத்தில் பால் குடிக்கிற குழந்தை' என்று சொன்னாற்போல கார்யம் செய்வதாகத் தெரியாமலே செய்கிற உத்தம நிலை அது. இப்போது நமக்குக் கொஞ்சமும் எட்டாத நிலை. "தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக்காலம்?" என்று பத்ரகிரியாரைப் போன்ற பரம வைராக்யசாலிகளே குறிப்பிடுவதான, கர்த்தா உணர்ச்சியில்லாமலே கார்யம் செய்வதான அந்த நிலை நமக்கு ரொம்பவும் தள்ளி எக்காலத்திலோ ஏற்பட்டால்தான் உண்டு.

எல்லா ஞானிகளுமே இப்படி லோக க்ஷேம கார்யம் பண்ணும்படி ஈச்வரன் வைத்திருக்கிறாரென்று இல்லை. லோகத்தின் கண்ணுக்கே தெரியாமல் எங்கேயோ மலையிலே குகையிலே தன்னை மறந்து கண் மூடி நிர்விகல்ப ஸமாதியில் இருந்து கொண்டிருப்பவர்களாகவும் ஞானிகள் இருக்கலாம். இன்னம் சில ஞானிகள் லோகத்துக்கு ஞானோபதேசகர்களாக இருக்கும்படி இருக்கலாம். சில ஞானிகள் லோக ஜனங்களைப் போல தர்மாசரணைகள் பண்ணிக் கொண்டு உத்தமமான குணங்களைக் காட்டுபவர்களாக நடைமுறை உலக ஜனங்களுக்குங் கூட ஐடியலாகவும் கார்யம் பண்ணலாம்! அது கார்யம்தான், நடைமுறை உலகத்தைச் சேர்ந்ததுதான் என்றாலும் இந்தக் கார்யத்திலிருந்தும் உலகத்திலிருந்தும் விடுவித்து நிஷ்கர்மத்தில் நிஷ்ப்ரபஞ்சத்தில் சேர்க்க உதவுவதாகும் என்பதால்தான் இந்த ஞானிகளுக்கு ஈச்வரன் இப்படி ஒரு வேஷம் தருவது. அவர்களைப் பார்த்து அப்படியே கர்மா, பக்திகளை ஆரம்பிப்பதுதான் நமக்கு வழி.

நாம் செய்ய வேண்டியதான இந்தக் கர்மாநுஷ்டான, உபாஸனைகளிலேயே அந்தப் பிடிப்பு, அதாவது ஆசைப்பற்று ஏற்படுவதற்கு விடக் கூடாது. ஆசை வந்து விட்டாலே அப்புறம் அனர்த்த பரம்பரைதான் என்பதால்தான் ஆரம்பத்திலிருந்தே, 'இது அத்தனையும் கூட தவிர்க்க முடியாத மாயைதானே தவிர அஸல் ஸத்யமில்லை; இவையும் இல்லாத ஆத்மாவே நம் லக்ஷ்யம்; அதை நேரே பிடிக்க முடியவில்லை என்பதால்தான் இவற்றைக் கொண்டு பிடிக்க முயற்சி பண்ண வேண்டியதாயிருக்கிறது' என்ற அத்வைதமான ஸ்மரணையைத் துளியாவது வைத்துக் கொள்ள வேண்டுமென்பது.

ஆத்ம தர்சனம் கிடைக்கணுமானால், அழுக்கடைந்ததும், ஆடிக் கொண்டேயிருப்பதுமான நம்முடைய சித்தம் சுத்தமாகவும், நிலையாய் நிற்பதாகவும் ஆகவேண்டும். அழுக்கு ஜலத்திலோ, அலைகள் ஆடிக் கொண்டேயிருந்தால் அடியிலோ இருப்பது தெரியாதல்லவா? அப்படித்தான் (இதுவும்). சித்த அழுக்குப் போக கர்மா; அதன் ஆட்டம் நிற்க பக்தி.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

கண்ணால் பார்க்க முடியவில்லை என்பதாலேயே இல்லை என்று சொல்லிவிடலாமா?

உப்பு கலந்த அந்த ஜலத்தை எடுத்து நாக்கிலே தெளித்துக் கொண்டோமானால், உப்பு என்று தெரிகிறதா இல்லையா?!

ஆக, வேறொரு இந்த்ரியத்தினாலே அதை உணர்கிறோம். இப்படியே ஒன்றினால் உணர முடியாததை இன்னொன்றால் உணர்ந்து கொண்டே போனோமானால், கடைசியில் இந்த இந்த்ரியங்களுக்கெல்லாம் அவன் உட்படுவானா? கிடைப்பானா?

ஹ்ருதா மனீஷா என்று உள்ளன்போடு நினைக்கக் கூடிய மரபினால் அறியத் தகுந்தவன் அவன். அந்த ஆத்மாவினுடைய அறிவுக்கே அவன் விஷயமாகிறான். இந்த்ரியங்களின் சேர்த்தி இல்லாமல் ஞானத்தினாலேயே எல்லாம் வெளிச்சமாகும்.

சம்ஸார பந்தத்தில் நாம் கட்டுப்பட்டிருக்கிற வரையில் இந்த இந்த்ரியங்களின் கட்டுப்பாட்டில் ஒரு வரையறைக்குள்தான் எதையுமே உணர முடியும்.

'ஆதலால் இந்த அல்ப்மான விஷயத்தை வைத்துக் கொண்டு இப்படிக் கேள்வி கேட்கிறாயே இது நியாயமா?! உன் நிலை என்ன என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டாமா? இந்த சுவருக்கு அந்தண்டை என்ன இருக்கிறது என்று உன்னாலே சொல்ல முடியுமா? கொஞ்சம் நேரம் சாவியை வைத்து விட்டுத்

திண்டாடுகிறாயே....?' – இப்படி நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள் ஆசார்யர்கள்!

'சாவி வைத்த இடம் தெரியாமல் திண்டாடி, இரண்டு நாள் கழித்து அகப்படுகிறது! வைத்த இடம் தெரியாதபடிக்கு அந்த ஸ்ம்ருதி பலம் அதற்குள்ளே போய்விடுகிறது. அப்படியிருக்கையில் எல்லாமே தெரிய வேண்டும் என்றால் எப்படி முடியும்? எவ்வளவு அஞ்ஞானியாக இருக்கிறாய்?' என்று நினைவூட்டுகிறார்கள் ஆசார்யர்கள்.

நாம் நித்தியம் இப்படிப் பொருளை வைத்த இடம் மறந்து தேடும்போது வேதம் நம்மைக் கூப்பிடுகிறது!

"என்ன தேடுகிறாய்?" என்று கேட்கிறது!

நாம் சாமானியமாய் வைத்த வஸ்துவைத் தேடுவதாகச் சொல்லுகிறோம்!

விஷ்ணு சித்தர், ஒரு ஆத்மாவின் அந்திம காலத்திலே அதனைச் சுற்றியிருப்பவர்கள் கேட்பதைப் பாடுகிறார்:

சோர்வினால் பொருள் வைத்த
துண்டாகில்
சொல்லு சொல்லு என்று சுற்று
மிருந்து...

அவன் பிராணனுக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறான். அவனைத் தட்டி, பிராணன் போகிற தருவாயிலே

'நீ பொருள் வைத்திருந்தால் சொல்லு...' என்கிறார்களாம்!

ஆழ்வார் சொற்பிரயோகத்தை கவனிக்க வேண்டும் இங்கே....

'சொல்லு சொல்லு' என்று இரண்டு முறை கேட்கிறார்களாம். அது மாத்திரம் அல்ல... 'பொருள் வைத்ததுண்டாகில்' என்கிறார்கள்.

'நீ இருக்கிற காலத்திலேயே எல்லாவற்றையும் ஒழித்து விட்டாய்... எங்களுக்கென்று என்ன வைத்திருக்கப் போகிறாய்...? ஒன்றும் வைத்திருக்க மாட்டாய்... இருந்தாலும் திரவ்யத்தின் மேல் உள்ள பற்றினால் கேட்கிறோம், வைத்து உண்டாகில் சொல்லு....'

போய்க் கொண்டிருந்தவனுக்கு ஸ்ம்ருதி கொஞ்சம் வந்தது... 'இதோ, இங்கே வைத்திருக்கிறேனே...' என்று சொல்வதற்குள்ளே ஸ்ம்ருதி போய்விட்டது! எதற்காக இவ்வளவு நாட்களாக ராத்திரியும் பகலும் சிரமப்பட்டு சிரமப்பட்டு ஓடி ஓடித் திரிந்தானோ அதை அவன் படுத்துக் கொண்டிருக்கிற

'என்றென்றும் காதல்' படத்திற்காக ஜுரிச் சிற்குப் பயணப்பட 'பேக்' பண்ணிக் கொண்டிருந்த அவசரத்தில் அகப்பட்டார் ரகுவரன். ஜுரிச்சிற்குப் போய் ஜமாய்க்கலாம் என்றிருந்தவரின் எண்ணம் இப்போது அடியோடு மாறிப்போயிருந்தது. காரணம் – இரு வாரத்திற்கு முன் பிறந்த அழகான ஆண் குழந்தை! விட்டுப் பிரிய மனமில்லை. பத்தே பத்து நாட்கள்தானே என்ற சமாதானத்தோடு அவரை வழியனுப்ப படாதபாடுபட்டுக் கொண்டிருந்தார் ரோகிணி. சினிமா நிகழ்ச்சியானாலும் சரி, பொது நிகழ்ச்சியானாலும் சரி எதிலும் பட்டுக் கொள்ளாமல் ஒதுங்கியே இருப்பதின் மர்மம் என்ன? ரகுவரனைப் பற்றி ரோகிணியிடம் கேட்டால் பதில் சொன்னதோ ரகுவரன். ''இதுல என்ன மர்மம் இருக்கு? நம்மளை விட பெரிய பெரிய ஆளெல்லாம் அங்க இருக்கிறப்ப நம்ம ஒதுங்கித்தான் இருக்கணும் சார்.'' ரகுவரன், பார்க்கிறவர்களிடமெல்லாம் பெருமைபடப் பேசிக் கொள்ள ஒரு செய்தியும் வைத்திருக்கிறார். கலைமாமணி விருது பெற வள்ளுவர் கோட்டம் சென்றபோது, மேடையாயிலில் அமர்ந்திருந்த முதல்வர் கலைஞர் எழுந்து வரவேற்றதை எண்ணி எண்ணி வியந்து போகிறார். ''அப்படியே கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கினேன். கட்டித் தழுவி, 'உன் பையன் எப்படி இருக்கான்?'னு விசாரிச் சார். அசந்துட்டேன். குழந்தை பிறந்து ரெண்டு நாள்தான் ஆச்சு. அதுக்குள்ள தகவல் தெரிஞ்சு... அதையும் ஞாபகமா விசாரிக்கிறாரே... இன்னும் அந்த நிமிஷத்து பிரமிப்பு அப்படியே இருக்கு சார்'' என்றார். இப்போதெல்லாம் வீட்டிற்கு அடங்கிய அடக்க ஒடுக்கமான பிள்ளையாகி விட்டார். ஷீர்டி சாயிபாபாவின் தீவிர பக்தராகி எப்போதும் அவரின் நினைவுதான். தலைபோகிற எந்த வேலையிருந்தாலும் மாதத்திற்கு ஒருமுறை ஷீர்டி சாய்பாபா மடத்திற்குச் சென்று வருவதைத் தீவிரமாகக் கடைபிடித்து வருகிறார். ஜுரிச்சிலிருந்து குழந்தைக்கு வாங்கி வரவேண்டியதைப் பட்டியல் போட்டு ரோகிணி படிக்க, அங்கே நமக்கென்ன வேலை? 'ஜூட்'தான்.

– ரவித்தம்பி



இடத்திலேயே, அங்கேயே, தலைக்குக் கீழே வைத் திருக்கிறான்...'

"இதோ, இங்கேதான் வைத்திருக்கிறேன், எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்ல முடியவில்லையே அவனால்!

வைத்த இடம் ஞாபகத்துக்கு வந்தால் தானே!

ஸ்ம்ருதி பலம் போய் அந்திம காலத்தில்தான் அவஸ்தைப்படுகிறாய் என்று இல்லை... நன்றாக இருக்கும்போது என்ன வாழ்ந்தாய்...? தடுமாறித் தடுமாறி, எங்கே வைத்தேன் என்று தெரியாமல் தேடி அலைகிறாய்! நல்ல ஸ்ம்ருதியுடன் இருக்கும் போதும் தேடுகிறாய், ஸ்ம்ருதி பலம் போன பிற்பாடும் தேடுகிறாய்! - இப்படியிருக்கிறது உன் வாழ்க்கை....

இந்த இந்த்ரியங்களை வைத்துக் கொண்டு, 'அக்னியிலே போடுவது அவனிடத்தில் போய்ச் சேருமா? சேராதா...' என்று கேட்பதில் அர்த்தமுண்டா. அவற்றின் சக்தி எல்லைக்குட்பட்டது. அதனால் இந்த விஷயங்களை சாஸ்திரக் கண் கொண்டுதான் பார்க்க வேண்டும்.

மூன்று விஷயங்கள் பிரமாணம் என்று எல்லா ஆசார்யர்களும் ஒருமனதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

பிரத்யக்ஷம் பிரமாணம்.

அனுமானம் பிரமாணம்

சப்தம் பிரமாணம்.

- இந்த மூன்றும் பிரமாணம். இதிலே வேதம்தான் - சப்தம்தான் - ஒரு தோஷமுமில்லாத பிரமாணம்!


வேதமிருக்கிறதே... ஒரு தோஷமும் சொல்ல முடியாத உத்தமமான பிரமாணம். பிரத்யக்ஷத்துக்கு தோஷம் வரும்; நேரில் பார்க்கிற விஷயமானாலும் தோஷம் வரும். அனுமானத்துக்குத் தோஷம் வரும்.

மஞ்சள் காமாலை வந்தவருக்குப் பார்ப்பதெல்லாம் மஞ்சளாகத் தெரிகிறது. வெள்ளை வெளேர் என்ற துணிகூட மஞ்சளாகத் தெரிகிறது! இந்த இடத்திலே பிரத்யக்ஷமே கெடுத்துவிட்டது இல்லையா? பிரத்யக்ஷமே தோஷமாயிருக்கிறது.

அனுமானமிருக்கிறது பாருங்கள்... அப்படியிருக்கும் - இப்படியிருக்கும்... சில இடங்களில் உண்மையாய் ஆகலாம். சில சமயத்தில் அது கூடக் கெடுத்துவிடும்.

இங்கே உபன்யாஸத்துக்கு வரக்கூடியவர் ஒருவர் இன்றைக்கு வர முடியவில்லை... எங்





கேயோ உட்கார்ந்து கொண்டு உபன்யாசம் நடப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்... அதுவும் நடக்கிறது! அதனால் அனுமானம் பிரமாணம்.

ஆனால் சில சமயங்களில் அனுமானமும் கவிழ்ந்துவிடும்... அது எங்கே?

ஒருத்தர் பரம வைதிகர். அடியேனை மாதிரி சால்வை போர்த்திக் கொண்டு, இடுப்பிலே வஸ்திரம் எல்லாமாய் டாக்ஸியிலே ஏறினார்.

ஏறி, இறங்க வேண்டிய இடம் வந்தது. உஸ்மான் ரோடிலே வந்து மாம்பலத்தில் இறங்கினார்... டாக்ஸிக்காரருக்குக் கொடுக்க வேண்டுமில்லையா? நூறு ரூபாய் நோட்டை எடுத்தார்.

அவர் சொல்கிறார், டாக்ஸிக்காரர்... ''இதுதான் முதல் சவாரி. சில்லறை இல்லையே என் இடத்திலே'' என்கிறார்.

உடனே இவர் ரூபாயைக் கொடுத்து, "நீங்களே போய் சில்லறை மாற்றிக் கொண்டு வாருங்களேன்" என்கிறார்.

அதற்கு அந்த டாக்ஸி டிரைவர் சொல்கிறார்; எதிரே பிரம்மாண்டமான ஹோட்டல் - அதைக் காண்பித்துச் சொல்கிறார்.

"அங்கே போனால் கலபமாகச் சில்லறை கிடைக்கும்... நீங்களே போய் வாங்கிக் கொண்டு வாருங்கள்..." என்கிறார் டாக்ஸி டிரைவர்.

"ஏனப்பா... நான் இந்த மாதிரி தோற்றத்தில் இருக்கிறேனே.. இப்படியே ஹோட்டலுக்குள் போனால் நன்றாயிருக்குமா? நீ போனாயானால் பரவாயில்லையே....

"இப்படி இருப்பதுதான் நல்லது சுவாமி! நான் போனால் ஹோட்டல்காரர் சில்லறை கொடுக்க மாட்டார். நீங்கள் போனால் பெரியவர்கள் - தெய்வமாக மதித்து, கேட்டவுடனேயே சில்லறை கொடுத்து விடுவார்கள். அதனால் நீங்கள் போனால்தான் காரியம் நடக்கும்" என்கிறார்.

வேறு வழியில்லாமல் டாக்ஸியை விட்டு இறங்கி அவரும் போனார். இடுப்பிலே கட்டிய துணியோடு, ஊர்த்து புண்டரத் தேடு, தாமரை மணிமாலை, துளசி மணி மாலை எல்லாவற்றையும் போட்டுக் கொண்டு ஹோட்டலுக்குள் நுழைந்தார்!

எதிர்ப்பக்கத்திலே பஸ் ஸ்டாப்பிங்கில் நான்கு பேர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் இதைப் பார்த்து என்ன பேசிக் கொண்டார்கள் தெரியுமோ?

(தொடரும்)





+2 முடித்தவுடன் வேலை!



• சங்கரன்

“மேலே படிக்கறதுக்கு வசதி இல்லாத, காலேஜ் போய்ப் படிக்க முடியாத பசங்களுக்காகத் தான் இந்த ரீடெய்ல் சேல்ஸ் மானேஜ்மென்ட் கோர்ஸை ஆரம் பிச்சோம். கார்ப்பரேஷன் ஸ்கூல்ல போய், நல்ல இன்ட்ரஸ்ட்டோட இருக் கற மாணவர்களைப் பார்த்து செலக்ட் பண்றோம். அட்வர்டைஸ்மென்ட் எல்லாம் கொடுக்கிறதே இல்லை!'' என்றார் ஆர்பிஜி இன்ஸ்டிட்யூட் ஆஃப் ரீடெய்ல் மானேஜ்மென்டின் பதிவாளர், ஓய்வுபெற்ற விங் கமாண்டர் சங்கரன்.

மாறி வரும் நகரச் சூழ்நிலையில், சின்னச் சின்னக் கடைகள் முதல், பெரிய பெரிய டிபார்ட்மென்ட் ஸ்டோர்கள் வரை நவீனமாகி வருகின்றன. அன்றாடத் தேவைகளுக்காக ஷாப்பிங் போவதை, ஒரு சந்தோஷமான விஷயமாக நினைக்கத் தொடங்கி விட்டனர் நகர மக்கள். இல்லையென்றால்–


ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட பிரம் மாண்டமான டிபார்ட்மென்ட் ஸ்டோர் களுக்கு, ஏன் ஸ்கூட்டரை அல்லது காரை எடுத்துக் கொண்டு மெனக்கெட்டு வரு கிறார்கள்? இது போன்ற மத்தியதர, மேல் மத்தியதர, குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கேட்கும் கேள்விகளுக்குச் சிரித்த முகத் துடன் பதில் சொல்லி, அவர்கள் அடுத்த தடவையும் அங்கேயே வருகிற மாதிரி செய்ய விற்பனையாளர்களுக்குப் பயிற்சி அவசியம்!

“ஆனால், காலேஜ் படிப்புப் படிச்சவங்க இந்த மாதிரி வேலை பார்க்க அதிகமா முன் வரமாட் டாங்க. கம்ப்யூட்டர் கம் பெனி, பாங்க்னு கொஞ்சம் உயரே பார்ப்பாங்க. அத னாலதான் நாங்க காலேஜ் போக அவ்வளவாக வசதி யில்லாதவங்களுக்கு– இங்கேயும் சரி, வெளி நாட்டுலயும் சரி, வேலை கிடைக்க வகை செய்யற மாதிரி ஒரு சர்ட்டிபிகேட் கோர்ஸ் தயார் பண்ணி னோம்!'' என்கிறார்கள் விங் கமாண்டர் சங்கரனும், அவரது உதவியாளர் வெங்கட் ராமனும்.

“இதை நடத்துகிற நேஷனல் ரீடெய்ல் எஜுகேஷனல் டிரஸ்ட் ஆர்பிஜியோடது தான்!''

இந்தப் பயிற்சி வகுப்பில் டெக்ஸ்ட் புக்கே இல்லை என்பது ஓர் ஆச்சரியமான தகவல். முன்பு 45 நாள் தியரி வகுப்பும், 45 நாள் பிராக்டிகல் டிரெயினிங்குமாக நடத் தினார்கள். இப்போது சற்றே மாற்றி, ஒரு மாதம் முழுக்க ஸ்போக்கன் இங்கிலீஷ் கோர்ஸ். மீதி இரண்டு மாதத்தில் தியரி, பிராக்டிகல் என்று அமைத்திருக்கிறார்கள்.

“ஏன்னா, அந்த லெவல்லேருந்து வரவங்க இங்கிலீஷ் பேசக் கஷ்டப் படறாங்க. தயங்கறாங்க. அதனால்தான் முதல்ல



இங்கிலீஷ்ல தன்னம்பிக்கையோட பதில் சொல்றதுக்கும், பேசறதுக்கும் முக்கியத்துவம் கொடுத்தோம். அது மாத்திரமில்லே, பெர்சனாலிடி டெவலப்மென்ட், கௌரவமா நடந்துக்கறது எப்படிங்கற மாதிரி சப்ஜெக்ட் எல்லாம், கூடவே சொல்லித் தரோம்!'' என்றார் சங்கரன்.

ஒழுக்கத்துடன், நாணயமாக, கடினமாக உழைத்தால் முன்னேறலாம் என்பதில் நம்பிக்கை பெற, வகுப்பில் குட்டிக்கதைகளும் சொல்லுகிறார்கள்!

முழு கோர்ஸ் சம்பளம் ஆயிரம் ரூபாய். ஆனால் சிறப்பாகப் படிக்கும் மாணவ-மாணவிகளுக்கு 500 ரூபாய் ஸ்காலர்ஷிப் கொடுத்துவிடுகிறார்கள். தவிர Music World, Food World, Health & Glow போன்ற ஆர்பிஜி விற்பனை நிலையங்களில் பயிற்சி பெறும்போது ஸ்டைஃபண்டு 900 ரூபாய் கிடைக்கும்!

இங்கே படிக்கும்போதே, மேற்கொண்டு எப்படி நல்ல வேலை வாய்ப்புகளைப் பிடிப்பது என்றும் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதை எல்லாம் கேட்டுக் கொண்டு, இருபத்தைந்து சதவிகித மாணவ-மாணவிகள் கரெஸ்பான்டென்ஸ் கோர்ஸ்களில் சேர்ந்து மேற்படிப்புப் படிக்க ஆரம்பித்து விட்டார்களாம்!

ஒரு 'பாட்ச்'சில் 35 மாணவ- மாணவிகளுக்கே இடம் இருப்பதால், இவர்களைத் தேர்வு செய்யும்போது கவனமாக இருக்கிறார்கள். ஆர்வம் இருக்கிறதா, கம்யூனிகேஷன் ஸ்கில் இருக்கிறதா என்று பார்க்கிறார்கள். சென்னையில் ஐந்து 'பாட்சு'கள் முடிந்து விட்டன. பெங்களூரிலும் இதே போல வகுப்புகள் நடத்துகிறார்கள். நாலாவது பாட்ச் முடிந்துவிட்டதாம்.



கல்லூரிப் படிப்புப் படிக்கிற மாணவ-மாணவிகளுக்கு, கடைசி வருடப் படிப்புப் படிக்கும்போதே ரீடெய்ல் சேல்ஸ் மானேஜ்மெண்ட் பயிற்சிபெற, விரிவான ஒரு வருட டிப்ளோமா கோர்ஸ் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இது மாலை நேர வகுப்பு.

இதில் கஸ்டமர் சர்வீஸ், ரீடெய்ல் ஸ்டோர் மானேஜ்மெண்ட், குவாலிடி, விற்பனைக்கான சரக்குகள் பற்றியறிதல், ரீடெய்ல் பிஸினஸ் பொருளாதாரம் என்று பலதரப்பட்ட சப்ஜெக்ட்டுகள் சொல்லித் தரப்படுமாம்.

இந்தத் துறைகளில் சிறந்து விளங்கும் நிபுணர்கள் வகுப்புகளை நடத்துவார்கள்.

சர்ட்டிபிகேட் கோர்ஸ் படித்த மாணவ-மாணவிகளை ஆர்பிஜியே தங்கள் நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்திக் கொண்டுவிடுகிறது!

— **சாருகேசி**

அட்டை மற்றும் வண்ணப்படங்கள்:
யோகா

தூய்மை

காங்கிரஸ் விழா ஒன்று முடிந்து, அதன் வரவு, செலவுக் கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர், கணக்கை காமராஜரிடம் ஒப்படைக்கும்போது, "ஐயா! அறுபத்து மூணு ரூபாய் நாலணா உதைக்கிறது. என்ன செலவு என்று தெரியவில்லை" என்றார். பளிச்சென்று காமராஜர் சொன்னார்: "ஒரு மணி நேரம் டயம். ஒண்ணு செலவு என்னன்னு ஞாபகப்படுத்தி எழுது; இல்லைன்னா, அந்தத் தொகையை கையில இருந்து போட்டு, சரி செய்!"

காமராஜர் பிறந்த நாளன்று வசந்த் அண்ட் கோ நிறுவனம் சென்னை காமராஜர் அரங்கில் நாள் முழுக்கப் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியது. அவற்றில், சாலமன் பாப்பையா தலைமையில் நடந்த பட்டி மன்றமும் ஒன்று. தலைப்பு: 'காமராஜருக்குப் புகழ் சேர்த்தது எளியையா? சமுதாயப் பணியா?' பட்டி மன்றத்தில் பேசியவர்கள் பல சுவையான விஷயங்களைச் சொன்னார்கள். சில சாம்பிள்கள்.



எளிமை

ஒருமுறை காமராஜ், வெளியூர் போய்விட்டு, சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் வந்து இறங்கினார். கிடுகிடுவென்று, ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தவர், ஒரு சைக்கிள் ரிக்ஷாவைக் கூப்பிட்டு, ஏறி உட்கார்ந்து கொண்டு, திருமலைப் பிள்ளை சாலையில் உள்ள தம் வீட்டுக்குப் போகச் சொன்னார். வீட்டு வாசலில், ரிக்ஷாவிலிருந்து இறங்கி, பணம் கொடுத்தபோது ரிக்ஷாக்காரர் கேட்டார்: "ஐயா! காமராஜரைப் பார்க்க வந்திருக்கீங்களா?" அப்போது வீட்டுவாயிலில் இருந்த செக்யூரிடி சொன்னார்: "இவர், முதலமைச்சரைப் பார்க்க வரவில்லை; இவர்தான் முதலமைச்சர்!"

இங்கே இருந்தவர்தான் இவர்!

மனித நேயம்

'65 போரின் போது, போர் முனைக்குப் போய், ஜவான்களைப் பார்த்தார். அங்கே 'ஐயா! வணக்கம்' என ஒரு தமிழ்க் குரல். அவரிடம் போய் பெயர், சொந்த ஊர், விலாசம் எல்லாம் விசாரித்துக் கொண்டு, அத்துடன் நிற்காமல், அங்கே இருந்த அத்தனை தமிழ் ஜவான்களின் விலாசங்களையும் சேகரித்துக் கொள்ளுகிறார். ஊருக்கு வந்ததும் அத்தனை ஜவான்களின் குடும்பத்துக்கும் "நான் உங்கள் மகனை/கணவரைப் போர் முனையில் போய்ப் பார்த்தேன். சௌக்கியமாக இருக்கிறார். நாட்டுக்காகப் போரிடும் அவரையும், அவரை நாட்டுப் பணிக்கு அனுப்பிய உங்களையும் நினைத்துப் பெருமைப் படுகிறேன்" என்று கடிதம் எழுதினார்.

கவனம்

ஒரு மேடையில் பேச வந்தார் காமராஜர். பளீரென்று அவரை நோக்கி விளக்கு வெளிச்சம். காமராஜர் சொன்னார்: "விளக்கை என்மேல எதுக்குப் போடறே! ஜனங்களைப் பார்த்து திருப்பு! நான் சொல்லறதுக்கு அவங்க முகத்துல என்ன ரியாக்ஷன்னு நான் பார்க்க வேணுமில்லையா?"

கண்டிப்பு

வழக்கமாக, ஊரில் உள்ள அம்மாவுக்கு, மாதம் நூற்றி இருபது ரூபாய் அனுப்புவார் காமராஜர். இனி நூற்றைம்பது ரூபாய் அனுப்பும்படி தாயிடமிருந்து கோரிக்கை வந்தது. என்ன காரணம் என்று கேட்டபோது, "நீ முதலமைச்சராயிட்டயே! நிறையப் பேர் வீட்டுக்கு வந்து போகிறார்கள். அவர்களுக்கெல்லாம் சோடா கலர் வாங்கித் தர வேண்டியிருக்கிறது." காமராஜர் அதற்கு என்ன சொன்ன தெரியுமா? " நீ எதுக்கு அவங்களுக்கு சோடா வாங்கித் தரணும்? பதிலுக்கு, அவங்க வேற ஏதாவது வாங்கிட்டுவந்து கொடுப்பாங்க! அதெல்லாம் தப்பு."

தொகுப்பு : பாரதி

கடைசி வாய்ப்பு!

வழக்கம் போல் சலுகை, சலுகை மேல் சலுகை, இலவச நூல் ஆகிய அனைத்தும் உண்டு.

அருட்செல்வர். டாக்டர். நா. மகாலிங்கம் அவர்களின்
பொருளாதரவுடன் மிகக் குறைந்த சலுகை விலையில்! இலவச நூலுடன்!!

தேவாரம், திருவாசகம்,
திருமந்திரம், பெரியபுராணம்
முதலான நூல்கள் அடங்கிய

பன்னிரு திருமுறைகள்

மூலமும் உரையும் - 12000 பக்கங்களுக்கு மேல் - 24 தொகுதிகள்

விலை ரூ. 2500. சலுகை விலை ரூ. 1200 மட்டுமே.

திருவிளையாடற் புராணம் (மூலமும் தெளிவுரையும்) 5 தொகுதிகள் - ரூ.500 இலவசம்

8.8.98க்குள் பணம் அனுப்புவோர்க்கு மட்டுமே இந்தச் சலுகைகள்!
24.9.98 தேதியிலிருந்து பணம் வந்த வரிசைப் படி நூல்கள் அனுப்பபடும்.

பன்னிரு திருமுறைகள் 24 தொகுதிகள்	ரூ. 2500.00
முன் வெளியீட்டுச் சலுகை	500.00
	ரூ.2000.00
இராமானந்தா அடிகளார் அறக்கட்டளையின் தலைவர் **அருட்செல்வர். டாக்டர்.நா. மகாலிங்கம்** அவர்கள் வழங்கும் உதவித் தொகை	800.00
சலுகை விலை	ரூ. 1200.00

ரூ.1200யினை DRAFT (Varthamanan Pathi pagam என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க தாக)/MO மூலம் 8.8.98க்குள் அனுப்புக. செப்டம்பர் 24 தேதியிலி யிருந்து, பணம் வந்த வரிசைப்படி நூல்கள் அனைத்தும், அதாவது பன்னிரு திருமுறைகள் 24 தொகுதிகள், திருவிளையாடற் புராணம் 5 தொகுதிகள் ஆக 29 தொகுதிகள் லாரிபார்சல் (A.B.T / T.V.S / POPULAR தங்கள் விருப்பப்படி) மூலம் அனுப்பப்படும். அனுப்பும் செலவினை மட்டும் லாரி அலுவலகத்தில் செலுத்திப் புத்தகப் பார்சலைப் பெற்றுக் கொள்ளலாம்.

நேரில் பதிவு செய்ய விரும்புவோர் கவனத்திற்கு : 8.8.98க்குள் எமது அலுவலகத்தில் ரூ.1200 செலுத்தி ரசீது பெற்றுச் செல்லலாம். நூல்கள் தரப்படும் சரியான தேதி ரசீதினில் குறித்துத் தரப்படும். குறித்த தேதியில் ரசீதினைக் கொண்டு வந்து கொடுத்து நூல்கள் அனைத் தையும் நேரிலேயே பெற்றுச் செல்லலாம். எமது அலுவலக நேரம்: 9 A.M.-7 P.M. உணவு இடைவேளையின்றி. ஞாயிறு விடுமுறை.

மேலும் சில தகவல்கள் : 1. MO/DD அனுப்புவோருக்கு லாரி பார்சல் மூலம் தான் அனுப்பப்படும். நேரில் நூல்கள் தரப்பட மாட்டாது. 2. Cheque ஏற்கப்படமாட்டாது.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

வர்த்தமானன் பதிப்பகம்
ஏ. ஆர். ஆர். வளாகம், 141, உஸ்மான் ரோடு,
தி.நகர், சென்னை - 17 (பனகல் பார்க் அருகில்)

நன்முயற்சிக்கு நல்வாழ்த்துக்கள்
அருட்செல்வர். டாக்டர். நா. மகாலிங்கம்
தலைவர், இராமானந்தா அடிகளார் அறக்கட்டளை.

ரயிலில் ஒரு குயில்!



தாம்பரம் டு பீச் மின்சார ரயிலில் பிரயாணம் செய்பவர்கள் துளசிங்கத்தை நிச்சயம் பார்த்திருப்பார்கள். கூலிங்கிளாஸ், தோளில் கறுப்புநிற பேக், கழுத்தில் கயிற்றுடன் கட்டித் தொங்கவிடப்பட்ட ஒரு தூக்குப் பாத்திரத்துடன் வண்டியில் ஏறுவார். இவரிமிருந்து புறப்பட்டு, காற்றில் குழைந்து குழைந்து வரும் குழலோசை. 'சின்னஞ்சிறிய வண்ணப்பறவை', 'சிங்கார வேலனே தேவா' போன்ற சவால் விடுகிற சினிமாப் பாடல்களைக் கூட அநாயாசமாய்ப் புல்லாங்குழலில் வாசிக்கும் கலைஞர் துளசிங்கம்.



• துளசிங்கம்

முப்பத்தெட்டு வயதுக்காரரான துளசிங்கம், அடையாறு பார்வையற்றோர் பள்ளியில் பத்தாவது வரை படித்திருக்கிறார். காதலித்துத் திருமணம் செய்து கொண்ட இவர் மனைவி தெய்வக் கனிக்கும் பார்வை கிடையாது. சங்கீதா, சுகந்தி என இரண்டு பெண் குழந்தைகள்.

நுங்கம்பாக்கம் ரயில்வே ஸ்டேஷனில் இவரைச் சந்தித்து ஒரு பாடல் வாசிக்கச் சொன்னபோது இவர் இசைத்த பாடல் "கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா! கண்களுக்குச் சொந்தமில்லை".

இவருக்கு நிறைய ரசிகர்கள். இவர் புல்லாங் குழலை வாசிக்கத் துவங்கியதுமே ஸ்டேஷனில் ஒரு கூட்டம் கூடிவிடுகிறது. சுருதியோடு, ஸ்வர சுத்தமாய், அட்சரம் பிசகாமல் அற்புதமாய் வாசிக்கிறார்.

பாடல்களின் ஸ்கேலுக்கு ஏற்றவாறு பதினைந்துக்கும் மேல் புல்லாங்குழல்கள் வைத்திருக்கிறார். சாஸ்திரீய சங்கீதம் கற்றிருந்தாலும் சினிமாப்பாடல்களை இசைப்பதிலேயே அதிக விருப்பம். புல்லாங்குழல் தவிர வயலின் வாசிக்கவும், வாய்ப்பாட்டும் தெரியும்.

"கர்நாடக இசைக்கு ரசிகர்கள் பத்து பேர்னா, சினிமாப் பாட்டுக்கு ஆயிரக் கணக்குல இருக்குறாங்க. நிறையப் பேரை சந்தோஷப்படுத்தலாம்" என்கிறார்.

ரயிலில் புல்லாங்குழல் வாசிப்பது பற்றிக் கேட்டபோது,

"ஒவ்வொரு கலைஞனுக்கு ஒவ்வொரு மேடை. எனக்கு எலெக்ட்ரிக் ட்ரெயின்தான் மேடை. எனக்கு ஆர்கெஸ்ட்ரா ஒன்னு சொந்தமா வைக்கணும்னு ஆசை. கையில காசு இல்ல. கல்யாணம் - ரிசப்ஷன்னு வைக்கிறவங்க, கோயில் திருவிழா நடத்துறவங்க என்னைய மாதிரி கலைஞனுக்கு ஆதரவு கொடுத்தா நல்லாருக்கும்" என்றார் துளசிங்கம்.

துளசிங்கத்திற்குப் பிடித்த இசையமைப்பாளர் எம்.எஸ். விஸ்வநாதன். பழைய சினிமாப் பாடல்கள் ரொம்பப் பிடிக்குமாம். நம்மிடம் விடைபெற்று டிரெயினில் ஏறி, அவர் இசைத்த பாடல், 'நினைப்பதெல்லாம் நடந்து விட்டால், தெய்வம் ஏதுமில்லை.'

— பாலு



புத்து கட்ட

புதிய பகுதி

கடன் கேட்கப் போறீங்களா?

நீங்கள் எந்தவித நிதி உதவிக்காக வங்கிகளை அணுகினாலும் சில விஷயங்களை நினைவில் கொள்வது நல்லது.

1) வங்கியின் அரையாண்டு மற்றும் ஆண்டு முடிவின்போது (மார்ச், செப்டம்பர் இறுதி) வங்கியில் வேலைப்பளு காரணமாக பரபரப்பு இருக்கும். எனவே அப்போது வங்கியிடம் கடனுதவி கேட்கச் செல்வதைத் தவிர்ப்பது நல்லது.

2) அதேபோல் பொதுவாக மாத ஆரம்பத்திலும், கடைசி சில நாட்களிலும் டிரான்ஸாக்ஷன்கள் அதிகம் இருக்கும். எனவே பத்தாம் தேதியிலிருந்து இருபதாம் தேதிக்குள் வங்கியை அணுகுவது ஏற்றது.

3) உங்கள் தேவை என்ன என்பதில் தெளிவாக இருக்கவும். அதை எப்படித் தெளிவாகச் சொல்வது என்பதற்கு வீட்டில் ஒரு சிறு ஒத்திகை பார்த்து விட்டுச் செல்லவும்.

4) வங்கி என்பது மார்க்கெட் அல்ல, பேரம் பேச. "பத்தாயிரம் கேட்டால்தான் அஞ்சாயிரமாவது கொடுப்பாங்க' என்ற ரீதியில் செயல்படாதீர்கள். நீங்கள் ஏதோ ஏமாற்றுவேலை செய்கிறீர்கள் என்ற எண்ணம் தோன்றினால் உங்களுக்கு வங்கி உதவ முன்வருவது கஷ்டம்.

5) சிறிய வங்கிக் கிளையாக இருந்தால் நேரடியாக மேனேஜரை அணுகுங்கள். பெரிய கிளையாக இருந்தால் கடன் பிரிவுக்கான பிரதான அதிகாரியை நேரடியாக அணுகுங்கள். நடுவில் உள்ளவர்களைத் தவிர்த்து விடுங்கள். உங்கள் தேவைகளை உங்களால்தான் சரியாகச் சொல்ல முடியும். அது காலதாமதத்தையும் குறைக்கும்.

6) எந்தத் தொழிலுக்காக நீங்கள் வங்கி உதவியை நாடுகிறீர்களோ அந்தத் துறையில் உங்களுக்கு அனுபவமும், அறிவும் உள்ளது என்றால் அதை அழுத்தமாக முதலிலேயே சொல்லவும்.

7) அரசியல் தலையீடுகள் விரும்பத்தக்கவையல்ல. அவை நேர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தும்.

8) ஒரு குறிப்பிட்ட கிளையில் கணக்கு வைத்திருக்கும் (நல்ல பெயர் வாங்கிய, நாணயமான) ஒருவரை உங்களுக்குத் தெரியுமென்றால், அவர் மூலம் வங்கியில் அறிமுகம் செய்து கொள்ளுங்கள்.

9) வட்டிவிகிதம் போன்ற விஷயங்களில் வாதிடாதீர்கள். அவை ரிசர்வ் வங்கியால் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டவை; மாற்ற முடியாதவை.

10) உங்கள் வீடு அல்லது தொழில் செய்யுமிடத்தின் அருகிலுள்ள வங்கிக் கிளையையே நாடுங்கள். உங்களுக்கு அது சௌகரியம் என்பது மட்டுமல்ல, பெரும்பாலான வங்கிகளும் அதை வற்புறுத்துகின்றன. காரணம் ஒருவரே ஒரே காரணத்துக்காகப் பல்வேறு கிளைகளில் கடன் வாங்கிவிடக் கூடாதே என்ற பாதுகாப்பு உணர்வுதான்.

— ஜி.எஸ்.எஸ்.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)


கல்கி
2.8.98
இலவச
இணைப்பு
ரொம்ப பெருமையா இருக்கு!... இங்லீஷ்ல நல்லாவே திட்டறே!...
வெற்றியின் விலாசம்!

கல்கியுடன் இணைந்து
இந்த இலவச இணைப்பை
வாசகர்களுக்கு
அன்பளிப்பாக
வழங்குபவர்கள்:

VIVEKANANDA
INSTITUTE

9, நடேசன் தெரு,
தி. நகர்.
சென்னை — 17.

வெற்றியின் விலாசம்

"வா சார்! குட்நைட் சார். நைட்டு பூரா வேலையா இன்னிக்கி? பாவம் சார் நீ!" என்ற ப்யூன் தண்டபாணியை வியப்புடன் பார்த்தான் ரங்கராஜன்.

"என்ன தண்டபாணி, நீ கிளம்பிட்டியா வீட்டுக்கு? ஆடிட்டர்ஸ் நைட் முழுக்க இருக்காங்கப்பா. தலைபோற வேலை. ஒரு காப்பி, டீ வாங்கி வர ஆள் வேணாமா? உனக்கு இன்னிக்கு ஓ.டி. இல்லை?"

"ஆமா சார்."

"பின்ன, நான் வந்ததும் வராததுமா குட் நைட்டுன்ற?"

"பின்ன? ராத்திரியில குட் மார்னிங்கா சொல்வாங்க?"

"கொல்றியே தண்டபாணி! இங்கிலீஷ்காரன் ஆண்ட காலத்துல பிறந்திருக்க வேண்டியவன் நீ! காந்திக்கு வேலையே வெக்காம அத்தனை பேரையும் இங்கிலீஷ் பேசியே ஓட வெச்சிருப்ப."

"கிண்டல் பண்ணாத சார். நானும் எத்தினியோ இங்கிலீஸ் படம் பாக்கிறேன், நைட் ஷோ. ஆனா சரியா பேச வரமாட்டேங்குது. அப்பப்ப ரெண்டு வார்த்தை எடுத்து வுடணும்னு ஆசை மட்டும் இருக்குது."





● ஒரு நபரைச் சந்திக்கிறீர்கள். முற்பகல் 11.59க்குள் என்றால் சந்திக்கும்போது Good Morning என்று சொல்லி, பேச்சைத் தொடங்குங்கள்.

பகல் 12லிருந்து 4 மணிவரை எனில் Good afternoon. இரவு 11.59 வரை Good evening.

விடைபெற்று செல்லும்போது Good bye. இரவு வேளை எனில் Good night.

எந்த நேரமும் சொல்லத்தக்கது Good day.

"நீ பாக்கற இங்கிலீஷ் படங்கள்ல லேங்வேஜே கிடையாது; வெறும் ஆக்ஷன்தான்னு கேள்விப்பட்டேன்... சரி விடு. இங்கிலீஷ் படம் பார்த்தா இங்கிலீஷ் பேச வந்துடும்னு எவன் சொன்னான்?"

"முடியாதா? பின்ன என்னா சார் செய்யறது? நீங்கள்ளாம் தஸ்ஸு புஸ்ஸுன்னு பேசிக்கறீங்க. நம்ம எம்.டியோட பி.ஏ. இருக்குதே, ஜெயந்தி... என்னை எப்பப்பார் இங்லீஸ்லயே திட்டுது சார். நாலு வார்த்தை பதிலுக்குத் திட்ட நம் மாண்ட கிட்னி இல்லியே?"

"என்னது?"

"அதான் சார் மூளை."

"ஒரு செகண்ட் பயமுறுத்திட்டியே தண்டபாணி. கிட்னின்னா சிறுநீரகம்."

"இருக்கட்டும், இருக்கட்டும். உன்னாண்ட ஒண்ணு கேக்கணும் சார். ஜப்பான்காரன் எவனுக்கும் இங்கிலிஸே தெரியாதாமே, மெய் யாவா?"

"ஏன், அங்க போயி செட்டில் ஆயிடலாம்னு ஐடியாவா? ஆனா, இங்க மாதிரி அங்க ஓபி அடிக்க முடியாதே! சரி விடு.. ஜப்பான்ல இருக்கறவங்களுக்கு இங்கிலீஷ் தெரியாதுன்னு இல்லை. ஆனா, நாடு முழுக்க அவங்க தேசிய மொழியைத் தான் பயன்படுத்தறாங்க – எழுத, பேச எல்லாம். இங்கிலீஷ்ல பேசினா



பெருமைங்கற நெனப்பு அங்க யாருக்கும் கிடையாது."

"நம்மூர்ல மட்டும் ஏன் சார் அப்படி?"



"இங்க அது அவசியமா இருக்கே! பாரு, மெட்ராஸ்ல நீ தமிழ் பேசற. ஒரு நைட்டு முழுக்க ரயில்ல படுத்துத் தூங்கி, பொழுது விடிய, ஆந்திரால ஒரு ஸ்டேஷன்ல இறங்கினா 'ஏமண்டி, பாக உன்னாரா'ன்னு பேசத் தெரிஞ்சாத்தான் பொழைக்க முடியும். கேரளா பக்கம் போனா 'எந்தா ஸுகந்தன்னே?'ன்னு கேட்கத் தெரியணும். நார்த் போயிட்டா, இந்தி தெரியாட்டா நீ காலி! நாடு முழுக்க பதினாறு மொழி பேசறவங்க நம் மாளுங்க. வேறு வழி? எங்க போனாலும் சமாளிக்க ஒரு காமன் லேங்வேஜ் வேண்டியிருக்குதில்லை? அதுக்குத் தான் இங்கிலீஷ்."

"புரியுது சார். நான் கூட ஏழாங் கிளாஸ் வரைக்கும் படிச்சிருக்கேன்.

பள்ளியோடத்துல இங்கிலீஸ் பாடம் இருந்ததுதான். ப்ச்! அப்பல்லாம் கண்டுக்காம உட்டுட்டேன்."

"அதை நினைச்சி வருத்தப்படாதே தண்டபாணி. ஸ்கூல்ல, பரீட்சைல பாஸ் பண்றதுக்காக டப்பா அடிக்கற இங்கிலீஷ் வாழ்க்கைக்கு உதவாது. எம்.ஏ. படிச்ச எத்தனையோ பேர் நாலு வார்த்தை சேந்தாப்பல இங்கிலீஷ் பேச



● 'How do you do?' என யாரேனும் கேட்டால் உடனே 'Fine, Thank you' என்று பதில் சொல்வது நம் தேசிய குணம். 'How are you?' என்பதன் வேறு வடிவம்தான் அது என்று நினைத்தால் தவறு. How do you do என்று யாராவது கேட்டால் பதிலுக்குச் சொல்ல வேண்டியதும் 'How do you do?' என்பதே.

வராதவங்க நாட்டுல இருக்காங்க."

"மெய்யாவா சார்?"

"பின்ன?"

"நம்ம பாய் இல்ல, பாய்? வெளுத்து கட்றானே சார் இங்கிலீஷ்ல. ஆனா பத்தாங்கிளாஸ்தான் படிச்சாரு."

"நீ வேற! சும்மா எஸ், நோ, ஆல் ரைட் பேசறது யார் வேணா பேசலாம்.

இங்கிலீஷ்ல இந்த மூணு வார்த்தையை வெச்சே எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல முடியும். ஆனா, கேள்வி கேக்கறதுதான் கஷ்டம்.''

"பார் சார்... இவ்ளோ சமாசாரம் இருக்குது, ம்... என் அக்கா பையன் ஒருத்தன் இருக்கான் சார். நல்லா படிச்ச பையன்தான். அவனாண்ட கூட ஒருவாட்டி, 'டேய், உன் மாம னுக்கு இங்கிலீஸ் பேச சொல்லிக் தடுறா'ன்னு கேட்டிருக்கேன். 'ரொம்ப கஷ்டம் மாமா. கிராமரெல்லாம் உனக் குப் புரியாதுன்னிட்டான்.''

"நீ தமிழ் பேசறியே, தமிழ் இலக் கணம் முழுக்கத் தெரிஞ்சிக்கிட்டா பேசற?''



“தமிழுக்குக் கூட இலக்கணம் இருக்கான்ன?”

“சரியாப் போச்சு. எல்லா மொழிக்கும் இலக்கணம் உண்டு தண்டபாணி. ஆனா பேசறதுக்கு இலக்கணம் தெரிய வேண்டிய அவசியமில்லை. இலக்கண சுத்தமா நீ செந்தமிழ்ல பேசினா, முதல்ல உன்னை இந்த ஆபீஸ்ல சகிச்சிட்டு வெச்சிருப்பாங்களா சொல்லு!”

“சர்தான் சார்.”

“அதே மாதிரிதான் இங்கிலீஷ்ல பேச கிராமர் தெரிஞ்சிருக்கணும்னு அவசியமில்லே... அதுக்காக wentedனு பேசறது சகிக்காது. ஸ்போக்கன் இங்கிலீஷ் கத்துக்க

● கஸின் பிரதர், கஸின் சிஸ்டர் என்ற பதங்கள் அதிகம் புழக்கத்தில் உள்ளன. ‘Cousin’ என்பது இரு பாலாருக்கும் பொதுவான சொல்.

He is my cousin brother என்று யாரையும் யாருக்கும் அறிமுகப் படுத்தாதீர்கள். **He is my cousin** என்று சொன்னாலே போதும்.



● ஒரு தியேட்டருக்குப் போகிறோம். மாட்னி ஷோவுக்கு டிக்கெட் கேட்கிறோம். 3.30 ஷோவுக்கு டிக்கெட் தருகிறார் கவுன்டரில் உள்ள நபர்.

இதே மும்பை தியேட்டர்களுக்குச் சென்று "A ticket for matinee show please" என்று கேட்டுப் பாருங்கள். 11.30 ஷோவுக்கான டிக்கெட்டைத்தான் தருவார்கள்.

Matinee show என்றால் 'மத்தியான ஆட்டம்' என்கிற நினைப்புத்தான் பலருக்கு.

உண்மையில் ஒரு நாளின் முதல் காட்சியைத் தான் Matinee என்று அழைப்பர். 'Matins' என்கிற பதத்திலிருந்து பிறந்தது Matinee. Matins என்றால் morning service என்று அர்த்தம்.



தண்டபாணி. ஜெயந்தி அப்புறம் உன்னைத் திட்றதுக்கு முன்ன கொஞ்சம் யோசிப்பா."

"இத்தினி வயசுக்கு மேல் எங்க சார் கத்துக்கறது? மவனுங்க கிண்டல டிப்பாங்க."

"கண்டுக்காதே. ஒருத்தன் வளர்றான்னா, அவனைக் கிண்டல் பண்ணியே அழிக்கறது நம்ம தேசிய குணம். நாளைக்கே நீ நல்லா பேச

கத்துக்கிட்டேன்னா, 'எப்படி தண்டபாணி நீ இப்படிப் பொளந்து கட்டறே'ன்னு அவனவன் வாயப் பொளப்பாங்க பார்!"

"வார்த்தையெல்லாம் தெரியாதே சார். என்ன பண்றது? டிக்ஷனரி படிக்கணுமா அதுக்கு?"

"டிக்ஷனரி உதவாது தண்டபாணி. அதைத் திறந்ததும் 'அப்பாக்ஸ்'னு ஒரு வார்த்தை முதல்ல கண்ணுல படும். அதை அர்த்தத்தோட நீ உருப் போடுவ. ஆனா எங்கயும் யூஸ் பண்ண சான்ஸே வராது. புழக்கத்துல இல்லாத வார்த்தைகளை மனப்பாடம் பண்ணி என்ன பிரயோஜனம்? அதுக்கு பதிலா சின்னச் சின்ன காமிக்ஸ் புத்தகங்

● சில சொற்களை அன்றாட வாழ்வில் அடிக்கடி உபயோகப்படுத்திப் பாருங்கள். உங்களுக்கு எதிரிகளே இருக்க மாட்டார்கள். உதா:

Sorry, Please, If you don't mind, excuseme, very kind of you, nice meeting you, so glad...



களிலேருந்து ஆரம்பிக்கலாம். சிம்பிளா இருக்கும். உபயோகிக்கற வார்த்தைகளாவும் இருக்கும். அதுல எதுக்கானா அர்த்தம் புரியலைன்னா டிக்ஷனரி



எடுத்துப் பார்க்கலாம். எடுத்த உடனே பெரிய பெரிய இங்கிலீஷ் நாவலெல்லாம் படிக்க முடியலையே, அது பத்தியெல்லாம் பேச முடியலையேன்னு டென்ஷன் ஆயிடக் கூடாது. உனக்கு ஒண்ணாங்கிளாஸ்ல தமிழ் டீச்சர் சிலப்பதிகாரமா சொல்லிக் குடுத்தாங்க? கொஞ்சம் கொஞ்சமாத்தானே வளர முடியும்?"

"கரெக்டு சார். எங்க பக்கத்து வூட்ல ஒரு ரிடைரு ஆபீசர் இருக்காரு. அவரு புள்ளைய தெனம் 'இண்டு பேப்பர் படி; இங்கிலீஸ் நாலெட்ஜ் வளரும்'னு சொல்லிட்டே இருப்பாரு."

"அடிப்படை தெரிஞ்சப்புறம்தான் அதெல்லாம் முடியும். எடுத்த உடனே நீ இங்கிலீஷ் பேப்பரைத் தொட்டா முதல் பக்கத்து எட்டுக்கால ஹெட் லைன் கூடப் புரியாது. அப்புறம் இன்னொண்ணு! பேப்பர் படிக்கப் படிக்க மொழி புரிஞ்சு போகலாம், ஆனா பேச வராது..."

"எனக்குப் படிக்கணும்னு கூட ஆசை இல்லை சார். ஆனா, இங்கிலீஸ்ல பேசணும். வேகமா பொளந்து கட்டணும்."

"ரொம்ப சுலபம் தண்டபாணி. இவ்ளோ ஆர்வம் இருந்ததுன்னா கத்துக்கறது இன்னும் ஈஸி. இப்ப தபால் மூலமா கூட இங்கிலீஷ் சொல்லித் தர நிறுவனங்கள் இருக்கு."

"அதெப்படி சார்

● Education என்றால் கல்வி. He is Educated என்றால் அவன் படித்தவன்.

இதையே Is he educated? எனக் கேள்வியாக மாற்றுவது அநாகரிகம். 'May I know his qualification?' எனக் கேட்க வேண்டும்.

யாராவது, "நீ என்ன படிக்கிறாய்?" என்று கேட்டால், "I am studying B.Com" என்பதைவிட "I'm doing B.Com" என்றால் அழகு.



● வயது விஷயத்திலும் இப்படித்தான். "What is your age?" எனக் கேட்காதீர்கள். மாறாக, "How old are you?"

பதில் சொல்லும்போதும் "I'm 22 years old" என 'Old' சேர்த்துச் சொல்ல வேண்டும். (நடிகைகள் விலக்கு?!)

● யாரேனும் நண்பர், விடை பெறும் போது 'Good day' எனச் சொன்னால் Thank you எனப் புன்னகையுடன் பதிலிறுப்பது பிரிட்டிஷார் வழக்கம். இது பற்றி ஒரு கதையே உண்டு.

சில பிரிட்டிஷ் குற்றவாளிகளைச் சிறை பிடித்திருந்தது ஜெர்மன் அரசு. சிறையில் இருக்கும்போது நன்கு ஜெர்மன் மொழி பேசக் கற்றுக்கொண்டுவிட்ட அவர்கள், ஒரு நாள் தப்பி விட்டார்கள்.

நாடு முழுவதும் போலீஸார் சந்தேகப்பட்டு சில நபர்களைப் பிடித்து விசாரிக்கும் போதெல்லாம் அவர்கள் சுத்தமான ஜெர்மன் மொழியில் பேசி, தப்பி விடுவார்கள்.

ஒரு காவலர், பஸ் ஸ்டாண்டில் ஒரு ஆள் நிற்பதைப் பார்த்து, அவன் தப்பிப் போன பிரிட்டிஷ் குற்றவாளிகளுள் ஒருவனோ என சந்தேகப்பட்டு, அருகில் சென்றார்.

முடியும்?"

"முடியும். டீவில நன்னன் தமிழ் சொல்லித் தருவாரில்லை? அது மாதிரி சிம்பிளா, ஒரு வாத்யார் பக்கத்துல இருந்து கிளாஸ் எடுக்கறாப்பல லெஸன்ஸ் அனுப்புவாங்க – தமிழ் விளக்கத்தோட. நீ ஒழுங்கா உட்கார்ந்து படிக்கணும்ங்கறதுதான் விஷயம்."

"எங்க சார்! ஆசையாத்தான் இருக்குது. ஆனா நாள் முழுக்க இங்க குப்பை கொட்டிட்டு, வூட்டாண்ட

அவன் முற்றிலும் எதிர்பாராத தருணத்தில் அந்த ஜெர்மன் காவலர், "A Good day sir!" எனக் கூறவும், அக் குற்றவாளி பழக்க தோஷத்தில் "Thank you" என்று சொல்லி விட்டான்.

பிறகென்ன? விலங்குதான்!



போனா சம்சாரம், கொழந்தைங்களோட கொஞ்ச நேரம் பேசிட்டு, படுத்துத் தூங்கத்தான் டைம் கரீட்டா இருக்குது."

"முடியாதுன்றதுக்கு ஆயிரம் சாக்கு சொல்லலாம் தண்டபாணி. முடியும்ங்கறதுக்கு ஒரே வழிதான். எப்படியாவது முயற்சி பண்ணணும்."

"அப்டீன்ற? ஓகே சார். நீயே எனக்குப் பேசக் கத்துக் குடேன்?"

"ஓயெஸ். இனிமே நீ எங்கிட்ட இங்கிலீஷ்லதான் பேசறே. ஓகே? நீ



தப்பா பேசும் போது நான் கரெக்ட் பண்றேன்."

"ரைட் சார். இனிமே I talk English I walk English. I eat English I sleep english."

"அப்படிப் போடு."

ஒரு மாதம் கழித்து தண்டபாணி படு சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு ரங்கராஜனிடம் வந்தான்.

"சார், நான் இங்கிலீஷ்ல பேச ஆரம்பிச்ச டைமே No good சார்!"

"என்ன ஆச்சு தண்டபாணி?

"ஆசையா இன்னிக்குக் காலைல எம்.டி. வந்ததும் குட்மார்னிங்

சொன்னேன். பயங்கரமா திட்டிட்டாரு. மரியாதை தெரியாத பயல் அது இதுன்னு... எப்பவும் போல வெறும சலாம் போட்டுட்டு போயிட்டே இருந்திருக்கணும்...''

''சரியா சொல்லு. நீ அவர்கிட்ட எப்பிடி பேசினே?''

"Hai, Good Morning."

''அதான்! ஃப்ரெண்ட்லியா பேசும் போது நம்



● கிரகப்பிரவேசம், காது குத்துக் கல்யாணம், பூணுல் கல்யாணம் போன்றவற்றுக்கு ஆங்கிலத்தில் பத்திரிகை அடிப்பவர்களுக்கு உடனே ஒரு குழப்பம் வரும். இவற்றுக்கெல்லாம் ஆங்கிலத்தில் என்ன சொற்கள்?

டிக்ஷ்னரியைத் தேடினாலும் கிடைக்காது. காரணம் ஆங்கிலேயர்களோ, பிரிட்டிஷாரோ காது குத்துவதில்லை, பூணுல் போடுவதில்லை!

வேணுமானால் நாம் நம் வசதிக்கு இப்படிச் சொல்லிக் கொள்ளலாம்.

கிரகப்பிரவேசம்— House warming ceremony. காது குத்தல் — ear boring ceremony!!!

மனுக்கு ரொம்ப நெருங்கினவங்க, நண்பர்கள், சம வயசு, சம அந்தஸ்து உள்ளவங்களை 'Hai'னு சொல்லலாம். நீ எம்.டி.கிட்ட 'ஹாய்'னு சொன்னதுக்கு இந் நேரம் உன்னை அவர் வீட்டுக்கு அனுப்பாம இருந்ததே பெரிசு.''

''வேற எப்படி சொல்லணும்?''

''Good Morning Sir''னு சொன்னா போதும். இதுவே என்னை மாதிரி பேசிப் பழகக்கூடிய மேலதிகாரின்னா, ''Hello Sir, Good Morning''னு சொல்லலாம். உன் தோஸ்த் மாரிகிட்ட வேணா 'Hai' சொல்லலாம்.''

''பாத்தியா சார், இது தெரியாமப்

∴ சொல் பார்க்கலாம்!



● ''உன் அப்பாவுக்கு நீ எத்தனையாவது மகன்?– இதை Englishல் சொல் பார்க்கலாம்!'' என்று சிலர் சவால் விடுவார்கள்.

இப்படி பதில் சொல்லலாம்:

''What is your order of birth?''

சில தமிழ் வழக்குகளுக்கு நேரடியான ஆங்கிலப் பிரயோகங்கள் கிடையாது.

போச்சு. நான் இப்பவே போய் எம்.டி.கிட்ட மன்னிப்புக் கேட்கறேன்...''

"திடீர்னு ரூம்ல போய் நுழையாதே.. அதுக்கு வேற திட்டு வாங்குவே...''

"இல்ல நுழைய மாட்டேன்... Sorry கேட்டுக்கிட்டு அப்புறம் நுழைய றேன்...''

"அதை விட இப்படிச் சொல்லு. 'Sir, Kindly excuse me'. தட்டிக் குடுத்து அனுப்புவார் பார்.''

"மன்னிப்பு கேக்கறதுக்கு Sorry தானே? I can't able to understand சார்.''

"ஐயோ, தண்டபாணி! Sorryங்கறது

● "Where is stephen?"

"He is on french leave"

— இப்படியொரு பேச்சு கேட்டிருப்பீர்கள். Leaveதெரியும். அதென்ன french leave?

சொல்லாமல் கொள்ளாமல் ஆபீஸுக்கு மட்டம் அடித்தால் அந்த 'Leave'க்கு french leave என்று பெயர்.





பொதுவான மன்னிப்புச் சொல். தொந்தரவு செய்யறதுக்காக மன்னிப்புக் கேக்கறதும் பெரிய தப்பு பண்ணினதுக்காக மன்னிப்புக் கேக்கறதும் ஒண்ணாயிடுமா...? மேலதிகாரி ரூமுக்குள்ள திடீர்னு போகும் போது excuse meன்னு சொல்றதுதான் பெட்டர். அப்புறம் இன்னொண்ணு. Can't ableன்னு இனிமே சொல்லாத. ரெண்டும் ஒரே சமாசாரம். ஒண்ணு, 'I can't understand'னு சொல்லு. அல்லது I'm not able to understand னு சொல்லு."

"சர்தான் சார். அப்புறம் ஒரு முக்கியமான சமாசாரம் சார் நேத்திக்கு எங்க காலனில ஒரு

ஷூட்டிங் நடந்துச்சி சார். என் கனவுக் கன்னி, கண்கண்ட காஷ்மீர் ஆப்பிள் சிமரன் வந்திருந்தாங்க சார்! புல்லரிச்சிடிச்சி எனக்கு. என் வூட்ல ஒரு சீன் புடிச்சிகறோம்னிட்டு வந்தாங்க. சிம்ரன் காலடி படற துன்னா சும்மாவா? சர்தான்னேன். பி.ஆர்.வோ, அவங்களண்ட என்னைக் காட்டி, "Meet Mr. Dhandapani, the owner of this house" ன்னாரு. உடனே அவங்க "Glad to meet you"ன்னு என் கையப் புடிச்சி குலுக்கிட்டாங்க சார்! புல்லரிச்சிடிச்சி. பதிலுக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை. அப் படியே நின்னுட்டேன். அப்பால எங்கக்கா மவன், "ஏன் மாமா, Glad

● இங்கிலீஷை 'குரங்கு பாஷை' என்று அந்தக் காலத்தில் செல்லமாக அழைப்பார்கள்:

but	'பட்'
cut	கட்
gut	கட்
hut	ஹட்
jut	ஜட்
nut	நட்

ஆனால் out மட்டும் அவுட்; putமட்டும் புட் என்று உச்சரிப்பில் பேதமிருப்பதால் ஆரம்ப நிலையி லிருப்பவர்களைக் குழப்பும்! பேசிப் பேசி, கேட்டுக் கேட்டு மட்டுமே இந்த மொழியை ஜெயிக்க முடியும்.

● இங்கிலீஷ் சினிமாவிலோ, ரேடியோ, டீ.வி.யிலோ கேட்கிறது போல் ஆங்கிலத்தை (accent உடன்) உச்சரிக்க கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டாம். நமது இயல்பான உச்சரிப்பும் குரல் ஏற்ற இறக்கமும் இருந்தாலே போதும்.

● ஆங்கிலேயர்களுக்கு அடுத்தபடியாக இந்தியர்கள் தான்–அதிலும் தென்னிந்தியர்கள்தான் முறைப்படி ஆங்கிலம் பேசுகிறார்கள். உலகின் வேறெந்த நாட்டவருக்கும் இந்தப் பெருமை இல்லை! அதனால் நமக்கு 'இங்கிலீஷ் வராது' என்று ஓர் இந்தியன் அதிலும் தமிழன் நினைக்க, பயப்பட அவசியமே இல்லை.

to meet youன்னாங்களே, நீ பதிலுக்கு thanks சொல்லத்தாவலையான்னான். ப்ச்... தெரியாம பூட்சி..."

"Thanks சொல்றது கூடத் தப்பு தண்டபாணி. யாரானா Glad to meet youன்னு சொன்னா, 'the pleasure is mine'னு சொல்லணும். அதாவது சந்தோஷம் எனக்குத்தான்'னு அர்த்தம்."

"பார் சார். இவ்ளோ சமாசாரம் இருக்குது! ஒண்ணுமே தெரியாம இருக்கேன்... ம்... அப்படித்தான் ஒருநாள் மத்யானம் நம்ம எம்டியைப பார்க்க கூட்டு போட்ட யாரோ

● எண்ணங்களை, சிந்தனையை அப்படியே ஆங்கிலத்தில் எழுதிப் பழகுவது நல்ல மொழிப் பயிற்சியாக இருக்கும். தமிழில், தாய்மொழியில் சிந்தித்தாலும் எழுதும்போது ஆங்கிலத்துக்கு மொழி பெயர்த்து சிறு சிறு வாக்கியங்களாக எழுதலாம். எழுதியதை, ஆங்கிலம் நன்கு அறிந்தவரிடம் படித்துக் காண்பித்து திருத்திக் கொள்ளலாம்.

● ஆங்கிலம் ஏதோ கொம்பு முளைத்த மொழி என்று நினைத்துப் பயப்பட வேண்டாம். ஃப்ரெஞ்சு, லத்தீன், க்ரீக், வட மொழியிலிருந்து கூட நிறைய கடன் வாங்கி ஆங்கிலம் வளர்ந்திருக்கிறது!

ஒருத்தர் வந்தாரு. நான் மரியாதையா அவர்கிட்டப் போயி 'What do you want Sir'னேன். ஒரு மாதிரி முறைச்சிப் பார்த்துட்டு போயிட்டார். நான் ஏதோ உளறியிருக்கணும். அதான் அவர் முறைச்சாரு. ப்ச்..."

"பரவாயில்லை. தப்பா பேசியிருக்கணும்னு புரியற அளவுக்குத் தேறியிருக்க. வெல்... நீ என்ன கேட்டிருக்கணும் தெரியுமா? Can I help youன்னு கிட்டப் போயி நின்னாலே போதும். நான் உங்க எம்.டியைப் பார்க்க வந்தேன்னு சொல்லியிருப்பாரு. அப்புறம் ஜெயந்திகிட்ட

LAW of மதர்ஸ்-இன்-லா!



● 'மாப்பிள்ளைகள்', 'மாமியார்கள்' என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொற்கள் முறையே sons-in-law, mothers-in-law. பெரும்பாலோர் son-in-laws என்றும் mother-in-laws என்றும் தவறாகச் சொல்வார்கள். அதே போல், brothers-in-law, daughters-in-law இவையே சரி.

கூட்டிட்டுப் போயி விட்டுட்டா மிச்சத்தை அவ பார்த்துக்கப் போறா."

"அதானே! பார் சார், நீ எவ்ளோ அக்கறையா எனக்கு இங்கிலீஷ் கத்துத் தர. உனுக்கு நான் என்னா செய்ய முடியும்... ம்... வா, என் மவளுக்கு அடுத்த மாசம் கல்யாணம் வெச்சிருக்கேன். நீ 'கண்டிஸனா' வரணும். என் கையால உனுக்கு விருந்து போடறேன்."

"அட, சொல்லவே இல்லியே? மாப்ள யாரு?"

"ஹார்பர்ல work பண்றான்."

"உன் பொண்ணு லட்சணமா இருப்பாளே!"

"But, the boy is very black Sir."

"Blackனு சொல்லாத தண்டபாணி. Darkனு சொல்லு. கறுப்பா இருந்தா என்ன, பையன் நல்லவனா? That is what matter..."

"நல்ல பையன் சார். என்னை மாதிரி he will not smoke Sir."

"கொல்றே போ. உன்னை மாதிரி அவன் தம் கூட அடிக்கறதில்லை. அதானே சொல்ல வரே? He doesn't even smokeனு சொல்லு. ம்.. நீ ஒரு காரியம் பண்றியா? இங்கிலீஷ் ஆர்வம் உனக்கு பயங்கரமா பத்திக்கிச்சின்னு நினைக்கறேன். பேசாம Spoken English Courseல சேர்ந்துடு. நானும் ஹெல்ப் பண்றேன். சீக்கிரமா நீ கத்துக்குவே. சரளமா இங்கலீஷ் மட்டும் பேச வந்துடுச்சுன்னா உலகத்தையே ஜெயிச்சுடற தன்னம்பிக்கை வந்திடும், பாரேன்!"



● காலையில பஸ்ஸுல ஒரே 'rush' என்று குறிப்பிடுகிறோம். 'Rush' என நாம் சொல்வது கூட்டத்தை—நெரிசலை. ஆனால் rush என்றால் அவசரம் என்பதே சரி.



"மெய்யாவா சார்?"

"Why not?"

"Thank you Sir. I'll never forgive you Sir!"

"அடப்பாவி, ஏண்டா?"

"பின்ன இவ்ளோ உதவி பண்றீங்க. மறக்க முடியுமா உங்களை?"

"நாசமா போச்சு. அது forget. never forgive youன்னா மன்னிக்கவே மாட்டேன்னு அர்த்தம்."

"ஓ... Sorry Sir.... ப்ச்.. Please excuse me Sir.."

"ம்ஹூம்! வா, இப்பவே போய் உன்னை சேர்த்து விட்டுட்டு வந்துடறேன்!"

சரளமாக இங்கிலீஷ் பேச சுலபமான வழி!

இங்கிலீஷ் பேசக் கற்றுக் கொள்ள வயதோ, கல்வித் தகுதியோ ஒரு தடையே அல்ல.

ஆர்வம் மட்டும் இருந்தால் போதும். இம்மொழியை நீங்கள் வீட்டிலிருந்தபடியே, ஓய்வு நேரத்தில் தபால் மூலம் மிகச் சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

இதற்கான முறையான, முழுமையான பயிற்சியினை கடந்த 17 ஆண்டுகளாக அளித்து வருகிறது விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்.

விவேகானந்தாவின் இவ்விசேஷப் பயிற்சியின் மூலம் இதுவரை 7 லட்சத்து 82 ஆயிரம் பேர்கள் பயனடைந்துள்ளனர்.

● Taste- இது ருசியைக் குறிக்கும் சொல். ரசனையுணர்வையும் இது குறிக்கும். ஆனால் 'tasty' என்று இது மாறும்போது உணவை மட்டுமே குறிக்கும். உதாரணமாக 'The food was very tasty.' என்று சொல்லலாம். ஆனால் 'She is a tasty Woman' என்று சொல்ல முடியாது! She is a woman of good taste என்று தான் சொல்ல வேண்டும்!

அடிப்படை - இலக்கணம் - ஸ்போக்கன் இங்கிலீஷ் என விவேகானந்தாவின் பயிற்சிமுறை மூன்று 'லெவல்'களாக அமைந்துள்ளது.

உங்களுக்குத் தேவையான லெவலில் சேர்ந்து, தபால்மூலம் மிகச் சுலபமாக இங்கிலீஷ் கற்றுக் கொள்ளுங்கள்.

தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கமின்றி இங்கிலீஷில் மிகச் சரளமாகப் பேசத் தொடங்குங்கள்.

விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸ் விவரம்:

லெவல் I (அடிப்படை ஆங்கிலம்)

அடிப்படையிலிருந்து துவங்கி, ஆங்கில வார்த்தைகளை ஸ்பெல்லிங் மிஸ்டேக் இல்லாமல் எழுத, படிக்க எளிய முறையில் பயிற்சி பெறலாம்.

● 'I am going to go tomorrow'! நாளை போகப் போகிறேன் என்பதன் தவறான மொழி மாற்றம் இது! I shall be going அல்லது I will be going tomorrow என்பதே சரி!

● Look Out - கவனமாய் இரு
Out look - அணுகுமுறை அல்லது அபிப்பிராயப் பார்வை.

இப்பயிற்சிக்கான கட்டணம் ரூ. 175/- மட்டுமே.

லெவல் 2 (இலக்கணப் பயிற்சி)

ஆங்கில இலக்கணத்தை முறையாக, முழுமையாகக் கற்றுக் கொண்டு இங்கிலீஷில் சுயமாகக் கடிதங்கள், கட்டுரைகள் எழுத மிகச் சுலபமான முறையில் பயிற்சி பெறலாம்.

இப்பயிற்சிக்கான கட்டணம் ரூ. 225/- மட்டுமே.

லெவல் 3 (ஸ்போக்கன் இங்கிலீஷ்)

தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கமின்றி இங்கிலீஷில் சகஜமாக, மிகச் சரளமாகப் பேச நவீன முறையில் பயிற்சி பெறுங்கள்.

இப்பயிற்சிக்கான கட்டணம் ரூ. 275/- மட்டுமே.

விசேஷச் சலுகை.

லெவல் 2 & 3 இவ்விரண்டு பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற விரும்புவோர் ரூ. 375/- மட்டும்

● டெலிபோனில் பேசும் போது, 'I want to speak to....' என்று சொல்வது பண்பாடு அல்ல... 'May I speak to....' என்றோ 'Can I speak to....' என்றோ கேட்பதுதான் அழகு.

● Call me - என்னைக் கூப்பிடு/அழை

Call on me - என்னை வந்து பார்.

Call up - தொலை பேசியில் கூப்பிடு.

— இவ்வாறு call என்ற சொல்லுடன் சேர்த்து உபயோகிக்கப்படும் பிற சொற்களைப் பொருத்து பொருள் மாறும்.

செலுத்தினால் போதும்.

லெவல் 1, 2 & 3 இம்மூன்று பிரிவு களிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ.525/- மட்டும் செலுத்தினால் போதும்.

கல்கி வாசகர்களுக்கு விசேஷப் பரிசு:

இப்பயிற்சியில் சேரும் கல்கி வாசகர்கள் அனைவருக்கும் "ஆங்கிலச் சொல்லாற்றல் பெறுவது எப்படி?" என்ற பயனுள்ள புத்தகம் பரிசாக அனுப்பப்படும்.

பயிற்சியின் சிறப்பு அம்சங்கள்:

பாடங்களை உங்களுக்கு அனுப்புவதுடன் எங்களது பணி முடிவடைந்து விடுவதில்லை.

இப்பயிற்சியினை நீங்கள் எவ்வாறு மேற்கொண்டு வருகிறீர்கள் என்பதை அறியப் பாடங்களுடன் பயிற்சி ஏடுகளை (Response sheets) இணைத்துள்ளோம்.

பாடங்களுடன் இணைக்கப்பட்டுள்ள பயிற்சி ஏடுகளை நீங்கள் நிறைவு செய்து அனுப்பினால் அவற்றைத் திருத்தி, தகுந்த ஆலோசனைகளுடன் உங்களுக்குத் தபாலில் திருப்பி அனுப்பி வைப்போம்.

இது மட்டுமல்ல.

பொதுவாக இங்கிலீஷ் வார்த்தைகளின் உபயோகம் பற்றி உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க 'உங்களுக்காக' என்ற சிறப்புப்

பயிற்சித் தொகுப்புகள் பாடங்களுடன் அனுப்பி வைக்கப்படும்.

இவை தவிர,

கேள்வி - பதில் என்ற தலைப்பில் பயிற்சி பெறுவோரது கேள்விகளுக்கான விளக்கங்கள் கொண்ட ஒரு விசேஷத் தொகுப்பும் உண்டு.

இத்தனை சிறப்பு அம்சங்கள் கொண்ட விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸில் நீங்களும் சேர்ந்து பயன் பெற இன்றே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள்.

உங்களது கூப்பன் கிடைத்தவுடன் நீங்கள் கேட்டுள்ள பாடங்களைப் பத்திரமாக 'பேக்' செய்து வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கிறோம்.

நாங்கள் பாடங்களை அனுப்பிய தகவல் உங்களுக்குக் கிடைத்ததும் தபால்காரரிடம் பணத்தைச் செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள், அல்லது உங்களது ஊரிலுள்ள தபால் அலுவலகத்தில் பணத்தைச் செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த இலவச இணைப்பை வழங்குபவர்கள்:

VIVEKANANDA INSTITUTE

9, நடேசன் தெரு, தி. நகர். சென்னை — 17.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS(S)M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/(S) 161 * Registered as a Newspaper in Srilanka * Supplement to Kalki 2.8.98

இக்கூப்பனைப் பூர்த்தி செய்து 15.9.98க்குள் அனுப்பிப் பாடங்களுடன் பயனுள்ள பரிசினையும் சேர்த்துப் பெறுங்கள்:

நான் விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸில் சேர விரும்புகிறேன். எனக்குப் பாடங்களையும். பரிசினையும் வி.பி.பியில் அனுப்புங்கள். தபால்காரரிடம் பணத்தைச் செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்கிறேன்.

(தேவையான கட்டத்தில் குறியிடுங்கள்)

Level 1	☐
Level 2	☐
Level 3	☐
Level 2 & 3	☐
Level 1, 2 & 3	☐

எனது பெயர் : ....

முகவரி : ....

....

....

பின்கோடு : ....

9, நடேசன் தெரு, திநகர்,
சென்னை - 600 017.

INDIA'S No. 1 English Training Institute.

உங்கள் வீடு உங்களுக்கு ஸ்பெஷல், அதன் ரூஃப் எங்களுக்கு ஸ்பெஷல்.

ரூஃபிற்கான ஸ்பெஷல் சிமெண்டை டால்மியா அறிமுகப்படுத்துகிறது.

SUPEROOF™

CEMENT BY **Dalmia**

இயற்கையின் சீற்றத்திலிருந்து உங்கள் வீட்டின் மேற்கூரை உங்களைப் பாதுகாக்கும். சேதம் உண்டாக்கக்கூடிய சுற்றுப்புறச் சக்திகளாலும் மாசுபடிந்த காற்றினாலும் அது தொடர்ந்து பாதிக்கப்படுகிறது. அதனால் மேற் கூரையில் விரிசல்கள் உண்டாகி, நீர் கசியத் தொடங்கும். இதனால் எத்தகைய மேற் கூரைக்கும் அதிக வலிமையும், பாதுகாப்பும் தேவை.

அறிமுகம். **டால்மியா சூப்பரூஃப்™** சிமெண்ட். இது மிக நவீனமான CVRM தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்படுகிறது. உங்கள் வீட்டு மேற் கூரைக்குத் தேவைப்படும் அதிக வலிமையை இது தருகிறது. அடர்த்தியான கான்கிரீட்டாக உருவாகி விரிசல்கள் மற்றும் கசிவு ஏற்படாமல் பாதுகாக்கிறது. இதனால் மேற்கூரையும், மேற்கூரையால் வீடும் பல தலை முறைகள் நீடித்து நிலைக்கும் என்பது நிச்சயமாகிறது.

சிமெண்ட் வாங்கும்போது அதிக வலிமையும், பாதுகாப்பும் சேர்ந்து பெற்றிடுங்கள். **டால்மியா சூப்பரூஃப்™** சிமெண்ட் வாங்குங்கள்.

சிறப்பு அம்சங்கள்:

* மிக அதிக வலிமை
* அடர்த்தியான கான்கிரீட் – (இன்றைய மிக நவீன CVRM தொழில்நுட்பமே காரணம்).

Dalmia Cement
Special Cements for Special Applications
டால்மியாபுரம் – 621 651. போன்: 04329-35328

அஸ்திவாரத்திற்கான ஸ்பெஷல் சிமெண்டும் கிடைக்கும்.

R.K.SWAMY/BBDO 2541 TAM-1

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 151 * Registered as a Newspaper in Srilanka

